Bombay, Delhi, Amritsar, Stringat

11

கட்டுரைக் கரும்பு

வி. ஆர். எம். செட்டியார்
ஸ்டார் பிரசுரம்

[illegible]

கட்டுரைக் கரும்பு

ஆசிரியர்:
V. R. M. செட்டியார். B. A

விலை ரூ. 2/-

STAR PUBLICATIONS
No. 5. NEW MARKET St.
KARAIKUDI (Ramnad Dt.)

SECOND EDITION • NOVEMBER 1953.

ஆசிரியர் முன்னுரை

விதியின் விபரீத விளையாட்டை, வேட்டையாடுகிறார் அமெரிக்க ஞானி எமர்ஸன்: விதியை, மதியால் ஓரளவு வெல்லலாம், என்று எமர்ஸன் வற்புறுத்துகிறார்.

வசன நடையை வில்லாக வளைத்துக்காட்டுகிறார், வால்டர் பேட்டர்: உணர்ச்சியை இசய மின்னலோடு ஊதிக்காட்டும் புல்லாங்குழலாகவே, சிறந்த வசனநடை அமையவேண்டும். கவிதையின் வனப்பையும் கொந்தளிப்பையும் வருணஜோதியையும், வசனத்திலே குழைத்துக் காட்டலாம், என்பது பேடர் கண்ட முடிவு: பாரதியாரின் வசனமும், திரு. வி. க. வின் வசனமும், திரு. மு. வ. வின் இலக்கிய விமர்சனமும், திரு. அண்ணாவின் வசன் எழிலோவியமும், பேடர் கண்ட பேருண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

கோலரிட்ஜ் பாணியிலே, டி. கே. சி. அவர்கள் தமிழில் ஆழ்ந்த உண்மைகளைக்கண்டு நிகரற்ற விமர்சனம் செய்கிறார்கள். இரண்டாவது டி. கே. சி. கிடைப்பது அரிது.

பாரசிகக் கவிஞர் 'உமர்கயாம்,' கடவுளை மறந்து, விதியையே நம்பி, வாழ்க்கையை நன்றாய்அனுபவிக்கும்படி சிறந்த முறையில் பாடியிருக்கிறார்: இதை ஆங்கிலக் கவிஞர் பிட்ஜெரால்ட் மொழிபெயர்த்தார்; இந்த மொழி பெயர்ப்பைத் தழுவி 'தேவி' அவர்கள், தமிழன் நெஞ்சில் பாயும்படி பாடியிருக்கிறார்கள். இது ஒரு இனிய கவிதைப் பாசுந்தி.

தாகூரின் 'கீதாஞ்சலிக்கு' அரிய முன்னுரை எழுதிய ஐரிஷ் கவிஞர் எட்ஸ், தாகூரோடு எவ்வளவு அருமையான இலக்கியத் தொடர்புகொண்டிருந்தார்?

ஹரீந்திரநாத் கவிதைமலர்களும், கவிக்குயில் சரோஜினியின் பாடல்களும் இந்நூலை அலங்கரிக்கின்றன: கவிக்குயிலின் பாடல்களில், இசை துள்ளிக் குதித்தோடுகிறது. அருமையான கவிதைகள், செவிநுகர் கனிகளாகக் காட்சியளிக்கின்றன. தொட்ட இடமெல்லாம், இனிமை, இனிமை, இனிமை! கவிதை, வாழ்க்கையின் கரும்புச் சாருக மாறிவிடுகிறது.

ரோசெட்டியின் காதல் விளக்கமான "ஒடையின் இரகசியம்." காதற் கனலின் சிகரம்: காதல் கனிரசம், ததும்பி ஓடுகிறது.

தாஸனும் அரவிந்தரும், கடலின் கொந்தளிப்பையே பாடுகிருர்கள்; மனிதனின் பற்பல மனநிலைகளைக் காட்டி நிற்கின்றன, அலைக் கரங்கள்; கடற்கீதமாகவே, பாட்டு சுழன்ருேடுகிறது.

தாகூரும், பிளேக்கும் சிறந்த கவிஞர்கள், ஆழ்ந்த ஞானிகள்: அவர்கள் பேருண்மைகளை, ஒளிக்குன்றில் ஏற்றிக்காட்டுகிருர்கள்.

"மாறும் சமுதாயம்"- ஒரு ரேடியோ சொற்பொழிவு: திருச்சி வானெலி நிலையத்தாரின் அனுமதி பெற்று, இதில் இடம் பெற்றிருக்கிறது.

மாபஸ்ஸானின் காதல் கடிதங்கள், அருமையான காதல் விளக்கம்தான்: காதல் விந்தை, இதய ஆழத்தினின்று கொடிவீசி வருகிறது.

'டீமோஸ்'— ஒரு ஹாஸ்ய சித்திரம்—நாவல் வாழ்க்கை.

V. R. M. செட்டியார்.

பொருளடக்கம்

விதி அல்லது வாழும் வகை

சில வருஷங்களுக்கு முன், மாரி காலத்தில், நம் முடைய ஊர்களில் காலத்தின் போக்கைப் பற்றி விவாதம் நடந்தது. எதிர்பாராத முறையில் பாஸ்டன் நியூயார்க் நகரவாசிகளுக்கு முன், காலங்களின் தத்து வத்தை விளக்கக்கூடிய அரிய சொற்பொழிவுகளை நாலைந்து பிரபலஸ்தர்கள் நிகழ்த்தினர்கள். சில பத்திரிகைகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் லண்டனில் இதே விஷயத்தைப் பற்றி ஒரு பெரும் சர்ச்சை நிகழ்ந்தது. இந்த நிலையை உணர்ந்த எனக்கு, காலப் போக்கு என்ற விஷயம் என் மனதில் தெளிவடைந்தது, நாம் இனி வாழும் வகை என்று தொனித்தது. இந்தப் பிரச்னையின் குழப்பத்தை, பிளான் எழுதிக் கண்டு பிடிக்க முடியாது. சிந்தனை உலகம் கோட்டில் அடைபடாது. ஆக்ஷேபனை களைப் பொருத்திப் பேசுவதும் மிக மிகக் கஷ்டம். நம் முன் எழுகின்ற வாத பிரதிவாத நிலைகளையே நாம் உணர்ந்து பின்பற்ற முடியும். விதியின் முன், வழி தேட வேண்டும்.

முதற்படியில், நம்மால் அசைக்க முடியாத தடைகள் சில உண்டு. மனிதர்களைத் திருத்தியமைக்கும் நம்பிக்கை நம் முன் கனல்கிறது. பல சோதனைகளுக்குப்பின் பள்ளிக் கூடத்திலேயே இந்த சீர்திருத்தத்தை ஆரம்பித்திருக்க

வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் பையன்களும் பெண்களும் அவ்வளவு அடங்கி நடப்பதாகத் தெரிய வில்லை; நம்மால் அவர்களை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் குழந்தைகள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. சீர்திருத்த முயற்சிக்கும் நாம் இன்னும் முன்னதாகவே ஆரம்பித்திருக்க வேண்டும். பிறவியி லேயே திருத்தவேண்டும்: இதன் பொருளென்ன? அங்கே விதி வருகிறது, அல்லது உலக சட்டங்கள் வந்து மோது கின்றன.

தடுக்க முடியாத நிலையிலுள்ள விதியும், தன்னையே அறிந்து தான் வருகிறது. விதியை ஒப்புக்கொள்வதால், மனிதனுக்கு உள்ள சுதந்திரத்தையும் கடமையின் சிறப் பையும், குணத்தின் ஆற்றலையும் நாம் இழிவு படுத்த முடி யாது. வாழ்க்கையில் இவைகளுக்கும் ஆழ்ந்தபொருள் உண்டு. இரண்டும் உண்மையே. ஒவ்வொரு சிந்தனையின் வேகத்தையும், ஒவ்வொரு சக்தியின் தன்மையையும் நாம் ஆழ்ந்து கவனித்தால், அதனுள் பதுங்கிக் கிடக்கும் தத்துவம் என்ன என்பது நன்கு புலனாகும். இவ்வாறு பல் வேறு பட்ட முரணான கருத்துக்களையும் அலசிப் பார்க்கும் பொழுது, இவைகளை யெல்லாம் பொருத்தி உண்மையறிய வழியுண்டு என்று நம்புகிறோம். எப்படி என்பது தெரியாவிட்டாலும், விதியும் சுதந்திரமும், தனிப்பட்ட மனிதனும் உலகமும், மனித மனப் பிள வும் காலப் போக்கும், நெருங்கி நெருங்கி ஒவ்வியே பழகியோடுகின்றன. காலப்புதிர் ஒவ்வொரு மனிதனுக் கும் தனிப்பொருள்கொண்ட விடுதலை தருகிறது. ஒவ் வொருவனும் காலப்போக்கில் பதுங்கிக் கிடக்கும் பெரும் பிரச்னைகளைப் பிரித்துப் பிரித்து அலசிப் பார்த் தால், நமது வாழ்வில் அனுபவத்தில் ஐக்கியமடையும் உண்மைகளையும் மாறுபட்ட உண்மைகளையும், எதிர் நோக்காக வைத்து முடிவு கட்டினால், நமது வாழ்வில் எதிர்க்கும் உண்மையான தடைகள் யாவை என்பது தெற்

றெனப் புலப்படும். மிஞ்சிய பகுதியைத் திருத்தி, உண்மையை உறுதி செய்யலாம்.

ஆனல் இனி விஷயங்களை நேரே கவனிப்போம். நமது அமெரிக்காவிற்கு ஒரு கெட்டபேர்—எதையும் ஆழமாக கவனியாமல், மேல்பார்வையாக கவனிப்பது என்பது. பெருந்தேசங்களில் தோன்றிய பெரியார்கள் வீண் தற் புகழ்ச்சியை நோக்குபவர்களல்லர், வெறுங்கோமாளிக எல்லர்; அவர்களே வாழ்வின் பயங்கர எல்லையை உள் ளுணர்ந்து எதிர்த்துப் போராடியவர்கள்; ஒவ்வொரு ஸ்பார்டனும், தனது தேசமே முழுமதம் என்றுணர்ந்து, தேசசேவையின் அவசியத்தையும் உணர்ந்து, ஒரு சிறு கேள்வியும் கேட்காமல் உயிரை விடுகிருன், ஒவ்வொரு துருக்கி தேசத்தானும், தான் பிறந்து இவ்வுலகத்தில் நுழையும்போதே, தனது விதி இருப்பு இலையில் பொறிக்கப் பட்டு வருகிறது என்று உணர்ந்து பிளவுபடாத மனத்து டன் சத்துருவின் கத்திமுனையிலே சாய்கிருன். துருக்கியர், அராபியர், பெர்சியர் மூவரும், மனிதன் தலைவிதி பிறக்கும் போதே பின்தொடர்கிறது என்ற உண்மையை ஒப்புக் கொள்ளுகிருர்கள். விதி சுழன்று வருவதை, ஹிந்துவும் உறுதியாகவே நம்புகிருன். நமது 'கால்வினிஸ்தர்கள்', சென்ற தலை முறையிலே, இதே கருத்தையே ஓரளவு உணர்ந்தார்கள். உலகச் சுமை அவர்களை அழுத்திக் கொண்டுவருவதாகவே உணர்ந்தார்கள். அறிவில் மேம் பட்ட பெரியார்கள் இதையே ஆழமாக உணர்ந்திருக்கிருர் கள்—, உலகத்தை ஒரு அறியமுடியாத சக்தி ஆட்டிவைக் கிறது! யுத்தத்திலும் சமாதானத்திலும், விருப்பிலும் வெறுப்பிலும், மனிதவாழ்க்கையில் கடவுளின் ஆக்ஞையே அசைக்கமுடியாத நிலையில் ஆளுகிறது—இது எப்போதும் உண்மை, முக்காலும் முற்றப் பொருந்தும் உண்மைஎன்று சாஸர் என்ற மகாகவி விடாமல் அடிக்கடி வற்புறுத்தி யிருக்கிருர். கிரேக்கரின் சோகநாடகத்தில் இந்த உண்

மையே கனல்கிறது: "விதித்தது நடந்தேதீரும். ஜோவ் தெய்வத்தின் அகண்ட ஆக்ஞையைமீறவே முடியாது."

காட்டுமிராண்டிகள், ஒரு வகுப்புக்கோ ஊருக்கோ ஒரு சிறு தெய்வத்தை வைத்துப்பின்பற்றி வருகிறார்கள். ஏகநாதரின் அகண்ட நீதி இவர்கள் மன நிலையில் குறுகி வகுப்பு வாதமாக மாறிவிடுகிறது. ஐங் ஸ்டில்லிங், ராபர்ட் ஹண்டிங்க்டன் போன்றவர்கள், குணக்கடவுளை பணக் கடவுளாகக் கருதி, நல்லவன் ஒருவனுக்கு உணவு வேண்டுமானால், அரை டாலரைப்போட்டுவிட்டுக் கடவுளின் கதவைத்தட்டினால் உணவு கண்டிப்பாய்க் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். ஆனால் இயற்கை, நம்மைச் செல்லமாய்த் தட்டிக்கொடுக்கவில்லை, நமக்கு அதிகமாய்க் கொடுத்துச் சலிப்படையச் செய்யவுமில்லை. உலகம் கொடியது, வெறுப்புடையது, ஒரு ஆணையோ பெண்ணையோ மூழ்கடிக்கப் பின்வாங்காது, ஒரு கப்பலையே ஒரு தூசி போல் விழுங்கும் தன்மையுடையது என்பதை நாம் நன்றாய் உணரவேண்டும் பனிசர்களுடைய கொடிய மனநிலை, உனது ரத்தத்தைக் கொதிக்க வைத்து. உனது கால்களையும் கல்லாகச் செய்யும் கொடிய தன்மையுடையது. நோய்கள், பஞ்ச பூதங்கள், அதிர்ஷ்டமில்லை, இழுப்பு, மின்னல்,— இவைகளில் சிக்குண்ட மனிதன் தத்தளித்தே தீருவான். கடவுளின் வழியே, கொஞ்சம் கரடு முரடானது. பாம்பின், சிலந்தியின் பழக்கமும், புலி மற்ற ரத்தவெறிபிடித்த ஜந்துக்களின் திடீர்ப் பாய்ச்சலும், மலைப்பாம்பின் சுழற்சியில் பிடிபட்டு நொருங்குகின்ற பரிதாபநிலையும்,—இவைகளே இயற்கையின் கொடிய வழி; நம்முடைய குணங்களும் அத்தன்மையதே. பல மைல்களுக்கப்பால் கசாயிக் கடை பதுங்கி மறைந்திருந்தாலும், உனது உணவில் ரத்தம் கலந்துவிட்டது, உணவில் குற்றம் உண்டு—இவ்வழியே மனித சமூகமும் ஒருவரை யொருவர் உண்டே வாழ்கின்றனர். அந்தோ! என்ன சித்திரவதை. வால்நட்சத்திரங்களாலும், கிரக அதிர்ச்சியினாலும், பூகம்பம் எரிமலையின்

அதிர்ச்சிப்பிளவுகளாலும், சீதோஷ்ண மாறுதல்களாலும், பூகோளமே அதிர்ந்து சிதறுகிறது. காடுநிறந்தால், ஆறுகள் காய்ந்துவிடுகின்றன. கடலின் கொந்தளிப்பும், கரை மாறுகிறது. பட்டணங்கள், கிராமங்கள் மூழ்கிவிடுகின்றன. லிஸ்பனில், மூன்று வருஷங்களுக்குமுன், ஒரு பூகம்பத்தில் மனிதர்கள் ஏராளமாக ஈக்கள் போல் மடிந்தனர். நேபில்ஸில் மூன்றுவருஷங்களுக்கு முன், பதினாயிரம் ஜனங்கள் சில நிமிஷங்களில் மாண்டனர். கடல்நோயும், மேற்கு ஆப்பிரிக்காவிலும் கெயின், பனமா, நியூ ஆர்லின்ஸ் முதலிய இடங்களில் அடிக்கடி மாறுகின்ற சீதோஷ்ண நிலையும் கத்திபோல மனிதர்களைக் குவியல் குவியலாகப் படுகொலை செய்துவிட்டன. நமது நாட்டில் மேற்கேஉள்ள 'பொட்டலில், சுரமும் வலிப்பும் உலாவுகின்றன. கோடைகாலத்தில் கத்தி விளையாடும் 'கிரிக்கட்' பூச்சி ஒரே இரவில் கடிபனியில் மடிவதுபோல, காலராவும் வைசூரியும் பலருடைய உயிர்களை உடனே வாங்கிவிடுகின்றன. கடலில் ஒன்றையொன்று விழுங்கி ஜீவிக்கும் கொடிய ஜந்துக்கள், கொடிய கூரிய பற்களுடன் தாண்டவமாடும் நிலையைக் கவனித்தால், இயற்கையின் உள்ளே எவ்வளவு கொடிய நுட்பமான லீலைகள் பதுங்கிக்கிடக்கின்றன என்பது நன்கு தெரியும். மேலும் கீழும், எப்பகுதியிலும் வாழ்வில், நாம் இதை மறுக்கமுடியாது. கடவுளின் பாதைகொடிய காடுமுரடான, கணக்கிடமுடியாதபாதை; விதியின் கொடிய நிலையை அலங்கார ஆடையில் மூடி மறைக்கமுடியாது. வேதம் படித்து ஊக்கமாய் உபதேசித்தாலும், விதியின் கொடிய கருணையற்ற உள்ளத்தைமறைக்கமுடியாது. இது உண்மை, இதுவே உண்மை.

மனிதனை தினம் தாக்கும் கொடிய நிகழ்ச்சிகள் வேறு என்று சொல்ல முடியுமா? நாம் இந்தச்செயல்களை எதிர்க்கச் சக்தியற்றுப் பின்வாங்கினுல், நாம் பயந்தே தீரவேண்டும். ஆனுல் இவைகளைத்தவிர, வேறு சில சக்திகள் மறைமுகமாகவே சூழ்ச்சியாக நம்மைத் தாக்குகின்றன.

முடிவை முடிக்கவழிதேடுவதே விதி—, விதியின் கொடிய தன்மை நமது குணத்தையே சிதைத்துவிடுகிறது. நமது முதுகெலும்பிலும், பட்சியின் மூக்கிலும், பாம்பின் தலையிலும், விதியின் விஷம் பாவிக்கிடக்கிறது. இதேபோல்தான், சமூக அளவும், மனநிலையளவும், காதல் நிலையும், சிரேஷ்டநிலையும் ஆகும்; சிருஷ்டிச் சக்திகள் ஒன்றோடொன்று மோதிச் சிறைப்பட்டுச் சிதறி வருவதும், விதியின் வழிதான்.

மந்தப் புத்தியுள்ளவர்களுக்கு பெரிய கோடுகளே புரியும். குதிரை வண்டிக்காரனும் நமது முகவரிகளைப் படிக்கும் ஆற்றலுடையவனாக மாறிவிடுகிறான்; உன் முகத்தில், ஒரு ஷில்லிங் அவனுக்குக்கிடைக்கும் உறுதியுண்டா என்று சுலபமாக அறிந்தகொள்ளுகிறான். புருவத்தின் வளைவிலும், பானைவயிற்றிலும், சந்தேகப்பார்வையிலும், குட்டையான கெட்டி மூக்கிலும், மயிர்ச்சடையிலும், வெளித்தோலின் வருணத்திலும் மனிதகுணம் வெளியாகிறது. மனநிலை திரையிட்டு உறையிட்டிருப்பதாக ஜனங்கள் தவறுதலாக என்ணுகிறார்கள். ஸ்பர்சிம், குவட்லட், டாக்டர்களைக் கேட்டால் உண்மைதெரியும்; மனநிலைகள் வெளியேவரும் என்று அவர்கள் உறுதிகூறுவார்கள். வைத்தியநூல்களில், நான்கு மனநிலைகள் வருணிக்கப்பட்டிருக்கின்றன. மனநிலைகளில் உன் எண்ணங்களை நீயேபடிக்கலாம். கறுப்புக் கண்களும் நீலக்கண்களும், ஒருசிறு கூட்டத்தில் எவ்வளவுபெரிய லீலைகள் செய்கின்றன, பாருங்கள்! முன்னோர்களின் தன்மைகள் நம்முடைய உடலில் பாய்ந்திருக்கின்றன: தாய் தந்தையரின் ரத்தச் சொட்டு நமது நரம்புகளில் ஒடிக்கொண்டேயிருக்கிறது. நமது முன்னோர்களின் ரத்தம் நமது குடும்ப வாழ்க்கை என்ற ஜாடியில் அடைபட்டிருப்பது உண்மையே. முன்னோர்களின் ஒவ்வொரு அம்சமும், ஒவ்வொரு தன்மையும், தற்காலம் நமது குடும்பத்தில் ஓர் ஆண் மகனிடமோ, ஒரு பெண் மகளிடமோ பிரதி பலிப்பதை நன்கு உணரலாம். சில குழந்தை

களிடம் தனித்த அம்ஸங்களும், சில குழந்தைகளிடம் குணக்கதம்பமும் முன்னோர்களின் தன்மையின் விளக்கமாகக் காணலாம். நற்குணங்களைப்போல, கெட்ட குணங்களும் பிறிட்டு வளர்வதைக் காணலாம். ஆகையால் மூதாதைகளின் குணம் ஒவ்வொரு குடும்பத்தையும் இன்றும் ஓய்வற்றுத் தொடர்ந்து வருகிறது. ஒரே மனிதனிடம், மூதாதைகளின் குணம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறி மாறி வந்துவிழுவதைக் காணலாம். ஒரே உடலில், எட்டுப்பேர் அடைபட்டு வெளிவருவதாக, குணக்கதம்பம் மிளிர்கிறது. புது மனிதனின் வாழ்வின் நாதத்தில், முன்னோர்களின் குண சுவரங்கள் குமுறுகின்றன. இது புது வாழ்வு, புது இசை. ஒரு வீதியின் மூலையில், மனிதன் வரும்போதே, அவன் முகக்குறிப்பினின்றும், கண்ணின் ஆழத்தினின்றும், அந்த மனிதனின் முழுத்தன்மையையும் ஊகிக்கமுடிகிறது. அவன்பிறந்த குடும்பமே, அவன்குணத்தைக்காட்டுகிறது. தாயைப் பொறுத்ததே சேய்: அன்னையின் சிருஷ்டியே குழந்தையின் குணநிலை. கரடுமுரடான மேஜைத் துணி நெய்யும் தறியில், காஷ்மீர் சால்வை செய்யமுடியுமா? கட்டிடச் சிற்பியிடம், கவிதை எதிர்பார்க்கமுடியுமா? தாகனிடம் ரசாயனம் வளருமா? சாக்கடை தோண்டுபவனிடம், நியூடன் கண்டுபிடித்த ஆகர்ஷண சக்தியைப்பற்றிக் கேட்டால் அவனுக்கு அதை விளக்கும் ஆற்றல் உண்டா? கொடிய வறுமையாலும், இடையறு உழைப்பாலும் நூறு ஆண்டுகளாகப்பீடிக்கப்பட்டு வதங்கிக்கிடக்கும் அவன் மூளையில், எப்படிப் புது எண்ணங்கள் உதிக்கும்? தன் தாயின்கருவினின்று வெளிவரும்போதே, ஒவ்வொருவனுடைய அருட்கொடையின் கதவு மூடப்பட்டே வெளிவருகிறான். ஒரு ஜோடி கைகளுடனும், ஒருஜோடி கால்களுடனும்தான் பிறக்கிறான். அவனுக்கு வருங்காலம் ஒன்றுதான்—, இது அவனுடைய சூரிய காதிலும் ஊதிய முகத்திலும், பன்றிக்கண்ணிலும், குள்ளத் தோற்றத்திலும் உறுதியாகத் தெரிகிறது. இப்படிப் பிறந்த விகாரக்குள்ளனை, எந்தச் சட்டமும் எந்தச்

சுதந்திரமும், ஒரு கவிஞனாகவோ அல்லது குபேரனாகவோ செய்யமுடியாது.

ஏசுநாதர் சொன்னார், "அவன் அவளைப்பார்த்த போதே, அவன் கற்பழித்த குற்றம் செய்துவிட்டான்." ஆனால் இதைவிட விளைதம் என்னவென்றால், சிந்தனைக் குறைவாலும், மிருகத்தன்மையின் மிகுதியாலும், அவன் அவளைப் பார்க்கு முன்பே, உடல் திமிரால் கற்பழித்த குற்றவாளியாகிறான்; பிறவியிலே, கற்பழிக்கப்பிறந்த உடல் திமிரோடு உலாவுகிறான். உடல் திமிருள்ள ஆணும், உடல் திமிருள்ள பெண்ணும் ஒருவரை யொருவர் கற்பழிக்கவே கனிந்து மின்னுகிறார்கள்.

சில மனிதர்களிடம், காமமும், ஜீரணக்கருவியும் உயிர்ச்சத்தையே விழுங்கிவிடுகின்றன; தீனியாலும், காமத்தாலும் மனிதன் இளைத்துவிடுகிறான். இத்தகைய கொழுத்த சோம்பேறிகள் மடிந்தால், குடும்பத்துக்கு நலம். இந்த மிருக வம்சத்திலிருந்து, பின்னால் நல்ல ஒரு சக்தியுள்ள குழந்தை உயர்ந்த ஆற்றலுடன் பிறக்க நேர்ந்தால், மிருக மூதாதைகளை மறந்துவிடுவதும் இயல்பே. அநேக மனிதர்களும் பெண்களும், காமஜோடிகளாகவே விளங்குகின்றனர். சில சமயங்களில், ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைக்கு, அபூர்வமாக, கட்டிடச் சிற்பத்திலோ, இசையிலோ, மொழிவளர்ச்சியிலோ, பூவை நுகரும் சக்தியிலோ, விஞ்ஞானத்திலோ, சித்திரத்திலோ, நடனத்திலோ, நீண்ட நடையிலோ, ஒரு தனிச்சிறப்பு உதயமாகலாம்: ஆத்மசக்திவளர வளர, மனச்சிறப்பு மின்ன மின்ன, உடல் வளம் குன்றி வருகிறது; மிருகத்தன்மை மறைகிறது. மறு தலைமுறையில், இந்த அபூர்வ ஆற்றல் உடற் கூண்டில் வரும்போது, உடல் வளம் வற்றி மன நிலையும் உடைகிறது; சிருஷ்டிக்கும் ஆற்றலும் தாக்கப்படுகிறது.

மனிதர்கள் பிறக்கும்போதே, மன நிலையும் ஒருவிதமாகவே ஜனிக்கிறது: நிதி நிறைந்தது, அல்லது நீதி நிறைந்

தது என்றே அம்மனநிலையை நாம்சொல்லவேண்டும்: ஒரு தாயின் வயிற்றில், பல தந்தையர்களுக்குப் பிறந்த சகோதர சமூகம் என்று அழைக்கலாம். பிரான்ஹோபர், டாக்டர் கார்பெண்டர் போன்றவர்கள், உயர்ந்த பூதக் கண்ணாடிகளால் நுட்பமாய் கவனித்து, ஒரு குழந்தை கருவில்தோன்றிய நான்காம் நாளே, இந்தக்குழந்தை விடுதலை வாதி, சுதந்திரமேதை என்று முடிவுகட்டிவிடுவார்கள்.

விதி மனிதனைத் தாக்குவது, ஒரு கவிதை கட்டும் முயற்சியாகக் கருதப்பட்டது: சமூகக் கொடுமை சுதந்திரத்தைத் தழுவவில்லை; இதனாலேயே, ஹிந்துக்கள் சொன்னார்கள், "முன் ஜன்மத்தில் நிகழ்ந்த செயல்களே, கருமம், விதி". மேல்நாட்டுக் கருத்தும், கீழ்நாட்டுச் சிந்தனையும், ஷீலிங் என்பவருடைய முடிபிலே ஐக்கியமடைகின்றன: "அழிவற்றநிலையில், பல யுகங்களாக, முன்னும் பின்னும், இடையறாத் தொடர்புடன், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பூர்வ குணத்துடன் திகழ்கிறான். அவனுடைய சரித்திர வளர்ச்சியில், தற்கால நிலையிலும், பூர்வ அம்சம் மின்னிக் கொண்டேயிருக்கிறது. இதை அவனும் எவனும் மறுக்கவே முடியாது."

நமது அரசியலில் பெரும்பகுதி உடலையும் பொறுத்திருக்கிறது. சில சமயங்களில் மனித வாழ்வில், இளமையில் அகண்ட சுதந்திரத்தை விரும்புகிறான், செல்வ இளைஞன் ஒருவன்; இங்கிலாந்தில் செல்வந்தர்கள் உடல் நலச்சிறப்புடன் வாழும்போது, முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் குறிக்கோளாய்க்கொண்டவர்கள், வயது ஆக ஆக மனநிலை மாறி மாறி வளர்ச்சியைத் தடுக்கும் பெரும் முட்டுக்கட்டைகளாகவே வந்துவிடுகிறார்கள். முன்னேற்றத்தைத் தடுப்பவர்கள், உடற்குறையுள்ளவர்களே. இயற்கையாலும் அந்தஸ்தாலும் தாக்கப்பட்டு மெலிந்து, பெற்றோர்களின் மீறிய வாழ்வால் நொண்டி

யாகவோ குருடாகவோ பிறந்து, என்றும் தன்னுறுதியற்று, எதிரியைத் தாக்கும் சக்தியற்றும் சாஸ்வத நோயாளிகளாய்த்திரிகிறார்கள். இயற்கை பலத்துடன் பிறந்த விறகு வெட்டிகள், ஹாம்ஷயர் பலிஷ்டர்கள், நெபோலியர்கள், பர்க்குகள், புரூஹாம்கள், வெப்ஸ்டர்கள், கோசூத்கள், எல்லாரும் உறுதியான தேசாபிமானிகள்: உயிர் போகும்வரை, உடற் குறைகள் தாக்கும்வரை, வாதமும் பணமும் தாக்கும்வரை இடையறாது உழைத்து உயிரைவிடச் சித்தமாயிருக்கும் உத்தமர்கள்.

பலமான எண்ணங்கள், தேசங்களில், பெரும்பகுதியாக, உடல் நலம்பெற்ற பலவான்களிடமே உருவெடுக்கின்றன: உடல் நலச் சிறப்புள்ள ஆள்களைப் பொறுக்கி எடுத்து எடைத்தாசில் போட்டு, இலக்ஷனுக்கு ஆள் சேர்ந்தெடுப்பதும் நலம் என்று எண்ணுகிறேன். உயர்ந்த உடல்நலமுள்ளவர்களே, நாட்டை நன்றாய் ஆளும் ஆற்றல் படைத்தவர்கள் என்று நாம் உறுதியாகக் கூறலாம். ஓட்டை வேகமாய்த் தீர்மானிக்க, இதுவும் ஒரு நல்ல வழிதான். உடற்சிறப்புடையவனே உயர்ந்த மேயராகலாம்: கடமையை ஆற்றுவதில் அவனே சிறந்தவனாகிறான்.

விஞ்ஞானத்தில் இரண்டே நுட்பங்கள்: சக்தியும் துணையான நிகழ்ச்சியும். முட்டைக் கருவில் பலவித பின் வளர்ச்சிகள் உண்டு: ஐநூறு வருஷங்களுக்குப்பின், புதுப் பார்வையுடன், புதுக்கண்ணாடியுடன் கவனித்தால், முட்டைக்கருவில் புது நுட்பங்களை நாம் அறியலாம். செடியிலும் சரி பிராணியிலும் சரி, பல வினோதங்கள் தோன்றி வளர்கின்றன. கருவில் இருட்டில் வளர்வது பிராணி, ஜந்து; வெளிச்சத்தில் வளர்வது செடி. தாயின் வயிற்றில் புழுத்தோன்றி, வளர்ந்து வளர்ந்து, மீன், பட்சி, நாற்கால் பிராணி, தலை, கால், கண், நகத்துடன் வெளிவரும் விந்தையைப் பாருங்கள். இந்தப் பிறவி வினோதம், இயற்கையே. நீ செய்வதே இயற்கையாக

வருகிறது. உன்னல் செய்ய முடியாத பகுதியும் உண்டு. செயலால் வளர்வதும், அதன் எதிர்ச்சக்தியால் வளர்வதும் இரண்டும் கலந்தே, பாம்பின் கெட்டித் தலையாகவும், பாம்பின் சட்டையாகவும், அகண்ட பாறைவாயுள்ள பாம்பாகவும் அமைவது. ஆரம்பித்த செயல், ஓட்டத்திலும் அமைதியிலும் வளர்கிறது—முடிவு இயற்கையின் விந்தை! ஓடும் மிஷின் ஓட்டப்பட வேண்டும்; ஆடும் பண்டம் ஆட்டப்பட வேண்டும். பனிக்கட்டிமேல் ஓடும் வண்டி சிறகுடன் பறப்பதுபோலத் தெரிகிறது; ஆனல் தரையில் விழுந்தால், அசைவில்லை.

இயற்கை நூலே, விதி நூல்: இயற்கை, தனது நூலின் பெரிய பக்கங்களை இதழ் இதழாகப் புரட்டிக் கொண்டு போகிருள், திரும்பப் புரட்டுவதில்லை எதையும். ஒரு இதழைக் கீழே வைக்கிருள்—பாறைத்தரை; ஆயிரம் யுகங்கள் செல்லுகின்றன, அதன்பின் நிலக்கரி; மறுபடி ஆயிரம் யுகங்கள் மறைகின்றன, சுண்ணும்பும் களிமண்ணும்; செடிரூபங்கள் வருகின்றன. அதன்பின் பல ரூபங்கள் பிறந்து பிறந்து, வளர்ந்து வளர்ந்து, மாறி மாறி, பூமி குளிர்ந்து மனிதன் பிறக்கிருன்! ஆனல் ஒவ்வொரு பிறவியும் தோன்றித் தோன்றி, கால அளவு வரை வளர்ந்து மாறி மடிவதும் இயல்பே. இதுபோலவே மனித வகுப்பும், மனிதப் பிறவியும்.

பூமியின் கீழ், பல நிலைகளில் பல படிகளில் மண் மாறி மாறி வளர்வதுபோல, மனித சமுதாயமும் ஒன்றின் கீழ் ஒன்ருகப் பிறந்து மறைந்து மடிந்து வளர்ந்து வருவதே: இதுவே ஜனத்தொகையின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஏற்பட்ட நிபந்தனை. ஒரு வகுப்பு தாழ்ந்தும், ஒரு வகுப்பு உயர்ந்தும், வெற்றி ஒருபகுதிக்கும், தோல்வி ஒரு பகுதிக்குமாக இயற்கையில் அமைந்திருப்பதும், இந்த உண்மையைத்தான் விளக்குகிறது. சரித்திரத்தில், வகுப்பின் நிலை தெரிந்ததே. ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்

காரர்கள், ஜெர்மன்காரர்கள், எல்லோரும் ஆஸ்டிரேலியா, அமெரிக்காவில் ஒவ்வொரு கரையிலும் சந்தையிலும் முழுத்தொழிலையும் கைப்பற்றியும் வந்திருக்கிறார்கள். எங்கள் வகுப்பாரின் பலமான வீரச்செயலை விரும்புகிறோம். யூதர், இந்தியர், நீக்கிரோ ஜாதியாரின் சுவடுகளைப் பின்பற்றி வருகிறோம். யூதரை ஒழிக்க எவ்வளவு பலம் விரையமாகியிருக்கிறது. நாக்ஸ் (KNOX) என்ற விஞ்ஞான மேதை ஒரு முடிவை உறுதியாகக் கண்டுபிடித்துக்கூறுகிறார்: "இயற்கை ஒரு தொடர்ந்த வகுப்பையே மதிக்கிறது, கலப்பை வெறுக்கிறது. வகுப்பைவிட்டு, ஒரு ஜனக்கூட்டத்தைப் பிரித்தால், அது தன் உயர்ந்த நிலையை இழந்து நண்டாகவே க்ஷீணித்துவிடும்." நீக்ரோவைப் போல, ஏராளமான ஜெர்மன்காரர்களிடமும் ஐரிஷ்காரர்களிடமும் விதியின் உரம் உண்டு: அட்லாண்டிக் கடலைப் படகில் கடந்தும், அமெரிக்காவிற்கு வண்டிச் சுமையாகச் சென்றும், சாக்கடை தோண்டியும், குழிபறித்தும், தான்யத்தை மலிவடையப் பயிர்செய்தும், அதன்பின் தளர்ந்தநிலையில், வெறும் பொட்டலில் பச்சைப் புல்லையும் எழுப்பும் ஆற்றலுடையவர்களாக யிருக்கிறார்கள்.

புள்ளிவிபரங்கள் (Statistics) மூலம், ஜனத்தொகையின் அகண்ட அஸ்திவாரத்தின் மேல், இயல்பாய் நடக்கும் நிகழ்ச்சிகளையும் எதிர்பாராத பெரிய சம்பவங்களையும் கணக்கிட முடியும் என்பது ஒரு விதி. ஆனால் பாஸ்டன் நகரில், போனபார்டி (நெபோலியன்) போன்றபட்டாளத் தலைவனும், ஜென்னிலின்டு போன்ற பாடகனும், பௌடிச் போன்ற கப்பலோட்டியும் எப்போது பிறப்பார்கள் என்று உறுதி கூறமுடியாது. ஆனால் இருபது மிலியன், அல்லது இருநூறு மிலியன் ஜனத்தொகையிலிருந்து, ஏதோ ஓரளவு உண்மையை ஒட்டிச் சிலவிஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

புதிதாய் சில இயந்திரங்களைக் கண்டுபிடித்த தேதிகளை இன்ன தேதிதான் என்று குறிப்பிட்டுச் சொல்லு

வது, புலமையின் இடம்பமே தவிர வேறல்ல. ஐம்பது தடவைகளுக்குமேல், ஒவ்வொன்றும் கண்டுபிடிக்கப் பட்டே வந்திருக்கின்றது. மனிதனே தலைமை இயந்திரம்: அவன் கருத்திற் பிறந்த மற்ற இயந்திரங்கள் எல்லாம், மனிதனுக்குக் கீழ் அமைந்துள்ள பொம்மை இயந்திரங் களே. அவசியத்தை அறிந்தறிந்து, நுட்பத்தையே காபி யடித்து, புது இயந்திரங்களைச் செய்து தனக்கு உதவிக்கு வைத்துக்கொள்ளுகிறான். ஹோமர், சொரோஸ்டர், மெனு, கெயின், வல்கன், காட்மஸ், கோபர்னிகஸ், பஸ்ட், புல்டன் முதலியவர்களில் யார் உண்மையாகக் கண்டுபிடிக்க முயன்றவர்கள் என்பதைச் சொல்லுவது மிகக் கஷ்டம். அவர்கள் இருபது பேர்களல்ல, பல நூற்றுக்கணக்கான பேர்களாகலாம். எங்கும் மனிதச் செயலே பரவிக்கிடக்கிறது மனிதனின் இயந்திரச் செயல், ஒவ்வொரு அணுவிலும் ஒட்டிக்கொண்டிருக் கிறது. அவன் சுவாசிக்கும் மூச்சிலே, எத்தனையோ வாகன்சன்கள், பிரான்க்ளின்கள், வாட்ஸ்கள் உலவு கிறார்கள்.

சந்தேகமின்றி, ஒவ்வொரு மிலியன் ஜனங்களிலும், ஒரு வானசாஸ்திரி, ஒரு கணித நிபுணன், ஒரு ஹாஸ்யக் கவி, ஒரு ஞானி தோன்றுவார்கள். கோபர் நிகஸ், நியூடன், லாப்லஸ், புது சக்திவாய்ந்தவர்கள் என்பதை உணராமல், ஒருவன் வானசாஸ்திர சரித்திர வளர்ச்சியை உணர முடியாது; ஆனால் இவர்கள் பின் உதயமாவார்கள் என்பதை எதிர்பார்த்தே, முன்னதாகவே உண்மையைக் கண்டுபிடித்தவர்கள் தேல்ஸ், அனெக்ஸாமினிஸ், ஹிப் பார்க்கஸ், எம்பிடாகினிஸ், அரிஸ்டார்கஸ், பைதாகரஸ், ஈனோபிடீஸ்; உலகச்சுழற்சியை ஒட்டியே, இவர்கள் ஒவ் வொருவருடைய மனமும் சுழன்று, சுழன்று, கணிதத்தி லும் தர்க்கத்திலும் ஆராய்ச்சிப் புதுமையுடன் தங்கள் மனத்தில் படம் பொறித்துக்கொண்ட நிபுணர்கள், இந்தப் பழைய மேதைகள். பூகோள மத்திக்கோட்டை ஒட்டியே,

ரோமன் மைல் அளவு நிர்ணயிக்கப்பட்டது. லீப் வருஷத்தைப்பற்றியும், கிரிகரி பஞ்சாங்கத்தைப் பற்றியும் பூகோள மத்திக் கோடுகளின் சுழற்சி சந்திப்புகளைப்பற்றியும் நாம் தெரிந்துகொண்ட அளவு மகமதியர்களும் சீனர்களும் அறிந்திருக்கிறார்கள். செல்வமாக வழங்கப்படும் சிப்பிக்கூட்டத்தில் உயிர்க்கருவியும் அமைந்திருப்பது போல், பன்னிரண்டு மிலியன் மலாயிக்காரர்களிடமும், மகமதியர்களிடமும், ஓரிரண்டு வானசாஸ்திர நிபுணர்களும் இருக்கக்கூடும். காலை உணவிற்கு கேட்டபடி அமைகிற ரொட்டித்துண்டுபோல அனேக சம்பவங்கள் எதிர்பாராத முறையில் அழகுடன் அமைகின்றன. 'பஞ்ச்' பத்திரிகையில், ஒரு வாரத்திற்கு ஒரு நயமான ஹாஸ்யம் சரியாய் வந்துவிழுகிறது. சஞ்சிகைகளில், தினம் ஒரு நல்ல விஷயம் கிடைக்கிறது.

மீறிச் செல்பவர்கள், தவறி நடப்பவர்கள், சட்டத்தில் துடிக்கிறார்கள். பஞ்சம், கொடிய தொத்து ஜ்வரம், பனி, யுத்தம், தற்கொலை, மலட்டு ஜாதி—, இவை எல்லாம் உலக அமைப்பில் எண்ணிக்கையில் சேர்ந்தவையே. இவைகள் எல்லாம் மலைப்பகுதியிற் பிறக்கின்ற தேய்ந்த கூழாங்கற்கள் போன்றவையே: நமது வாழ்க்கையின் சிறையிட்ட நிலையையும், இயந்திரம், அல்லது செவசாலையின் கணக்கையே காட்டி நிற்கின்றன; இவைகளில், எதிர்பாராத நிகழ்ச்சிக் குறிப்புக்களே திகழ்ந்து மின்னுகின்றன.

எதிர்பாராத சம்பவங்களின் கொடிய நிலையை நாம் எதிர்த்துப் போராட முயலும்போது, நம்முடைய சக்தியே பெருஞ் சோதனைக்குள்ளாகிறது. பெரும் புயலின் துடிப்பில், கப்பல் துடித்துச் சிதறும்போது, அதிலுள்ள ஜனங்கள் அலையில் எதிர்த்து நீந்திவர முடியுமா? சிதறிய ஜனங்கள் தனி பலத்துடன் அலையின் கொந்தளிப்பில் மிதந்து வருவதே துர்லபம். பெருஞ் செயலுக்கு இடமிருந்தும், மனமுடைந்து விதியின் கீழ் படிகிறோம்.

விதி

வாழ்க்கையில் மனிதன் விதியுடன் அடிக்கடி போரா டிப் போராடி, விதியின் ஒரு வளைந்த பகுதியை ஓரளவு அறிகிறான். வாழ்வின் படலத்தில், விதியின் சாயையும் சூழ்கிறது. மனித சக்தி, விதிச்சங்கிலியால் கட்டுண்டு கிடக்கிறது. இயற்கையின் மத்திக்கோடாக ஓடிக்கொண்டு நம்மை எதிர்த்துத் தடைசெய்யும் தடையே விதிப்போர். நாம் கொடிய மிருகம்போல் விதியை எதிர்த்தால், விதியும் மிகக் கொடிய மிருகம்போல் நம்முடைய செயலை எதிர்த் துத் தடைசெய்கிறது. நாம் நயமான முறையில் எதிர்த்தால், விதியும் கூர்மையான முறையில் நம்மை உடனே தாக்கு கிறது. ஆத்ம நிலையிலிருந்து நாம் எதிர்த்தால், விதியும் அதே பக்குவ நிலையைக் கைக்கொண்டு போரிடுகிறது. ஹிந்தி புராணங்களில், புழுவினின்று யானை வரை ரூபத்தை மாற்றிக்கொண்டுவரும் மாயையை, எல்லாப் பருவங்களிலும் விஷ்ணு பின்தொடர்ந்து செல்லுகிறார். மாயை பெண்ரூபம் எடுத்தால், விஷ்ணு அந்த வகுப்பில் ஆண்ரூபம் எடுத்துக்கொண்டே செல்லுவார்; கடைசியில், மாயை பெண்ணாகவும் பெண் தெய்வமாகவும் முடியும் போது, விஷ்ணு மனிதனாகவும் ஆண் தெய்வமாகவும் முடி வடைகிறார். ஆத்மா வளர வளர, தடைகள் உயர்ந்த நிலை யில் வந்துவிடுகின்றன; ஆனால் விதி வளையம் உயரச் சுழல்கிறது.

விண்ணில் ஒரு ஓநாயை இரும்பாலும் மலையாலும் கட்ட முடியாத நிலையில், இரும்புத்தடையை ஓநாய் உடைத்தது, மலையை உடைத்தே தள்ளிவிட்டது; அப் போது, மிருதுவான பட்டுக்கயிறால் நாயின் காலை தேவர் கள் கட்டியவுடன், ஓநாய் காலைச் சுண்டி இழுக்க இழுக்க முடிச்சு இறுகி இறுகி நாயின் காலை உறுதியாகப் பற்றிக் கொண்டது. இந்தப் பட்டுக் கயிற்றின் நிலையில்தான், நெருப்புத் திராவகம், நரகத்தீ, தெய்வ ரத்தம், கவிதை, பிறவித்திறமை இவைகளில் எதைக்கொண்டும் விதிக் கயிற்றை அறுத்தெறிய முடியாது! விதியின் அழியாத

உள் தத்துவத்தை, கவிஞன் உணர்ந்து உபயோகப்படுத்து வதுபோல் நாம் அறிந்துகொண்டால், சிந்தனைகூட விதி யின் எல்லைக்கு மேற்பட்டதல்ல. விதியை எதிர்த்துச் செல்லுவது, விதியின் ஆழத்தை அறியாத நிலைதான்— இதுவும் தவறுதலான எதிர்ப்பு, அறியாமை.

உலக நீதி அரங்கில், தவறுகள் தலையெடுத்தாடும் போது, விதி, ஆவேசத்துடன் தோன்றி உண்மைக்குத் துணையாக தியாக மூர்த்தியாக வந்துவிடுவதைப் பார்க்க லாம்: மனித நிலைகளை ஒருநிலைப்படுத்தியும், தாழ்த்தப்பட்ட வர்களைத் தூக்கிவிட்டும், நீதியை ஸ்தாபித்தும் விடுகிறது. நல்லது நிலைக்கும்; கெட்டது கழியும். கிரேக்கர்களும், வெல்ஷ் தேசத்தவர்களும், ஸ்பானிஷ்காரர்களும், “கடவுளுக்குத் திருப்தியாக நடந்துகொள்ள முடியாத எவனும் ஈசனின் சாபத்திற்கே உள்ளாகிறான்” என்று அனுபவித்துக் கூறினர்கள். தெய்வம் நின்றே கொல்லும், கொடிய பாவி தப்பிக்கவே முடியாது. முன் எச்சரிக்கை யால், மனிதன் விதியின் தடையைத் தாண்டவே முடி யாது. விதியின் அகண்ட வேகத்தில், மனிதனின் அறிவு மங்கி மடிகிறது. விதி வலிது என்று சொல்லிக்கொண்டே போவதில், என்ன பிரயோசனம்? விதியின் அம்சங்கள் என்ன, எதிர்க்கும் வழியுண்டா என்று சற்று ஆராய்வோம்.

ஜடத்திலும், மனத்திலும், நீதியமைப்பிலும், ஜாதி யமைப்பிலும், பல சிருஷ்டித்தடைகளிலும், சிந்தனையிலும், குணத்திலும், விதியின் உருவத்தைக் காண்கிறோம். அது எங்கும் தடையிட்டும் தடைப்படுத்திக்கொண்டும் இருக் கிறது. விதிக்குத் தலைவன் உண்டு; தடுப்பதே அவன். எல்லை; மேலும் கீழுமிருந்து பார்த்தால், விதியின் தோற் றம் மாறிமாறி அமைகிறது; உள்ளும் புறமும் அப்படியே தோற்ற வில்லங்கம். விதி நம்மைத் தொடர்ந்து நமது சக்தியைத் தடைசெய்தால், நமது சக்தியும் விதியின்

ஒட்டத்தை எதிர்க்காமலில்லை. விதி, இயற்கையில் சரித்திர வளர்ச்சியாகவே வந்துவிடுகிறது; இன்னும் அதிகமான உண்மையும் விதியின் எல்லையில் உண்டு. ஜடத்தைச் சோதிப்பது யார்? இதைப்பற்றி ஆராய்ச்சி எழுப்புவது யார்? மனிதன் வீண் வயிற்று மூட்டையல்ல, தசைக் கதம்பமல்ல; மனிதனும் ஒரு பெரிய சக்திதான், உலக துருவ முனைகளையே இழுக்கும் ஆற்றலுடையவன்தான். சிருஷ்டியில் கீழானபடியிலிருந்து வளர்ந்து வளர்ந்து, பிறந்து, முதிர்ந்த நிலையில் மனித சிகரத்தை யடைந்து விட்டான். கீழான மிருக நிலையினின்று மேலான மனித நிலையை எட்டிவிட்டான். புதுச்சக்தி அவனுக்கு வந்திருக்கிறது. பூமண்டலங்களையே உடைக்கவும் சிருஷ்டிக்கவும் ஆற்றலுள்ள ஒரு அபூர்வ மின்னற்சக்தி மனிதனுள்ளிருக்கிறது. ஒருபுறம் காடும் கடலும் கரையும் பாறையும் உண்டு; மறுபுறம் சிந்தனையும், இயற்கையை ஆக்கியழிக்கும் சக்தியும் உண்டு. நன்மையும் தீமையும், மனமும் ஜடமும், அரசனும் அவனைக்கொல்லச் சதி செய்பவனும், பெல்ட்டும் வாதயிழுப்பும், எல்லாம் மனிதன் கண்முன் அமைதியாகச் சுழன்று வருவதைப் பாருங்கள். மனத்திலே மனிதனுக்கு விடுதலையுண்டு; விதியே வலிது, விதியே எல்லாம் என்று ஒரு புறம் சொல்லுகிறோம்; மறு நிமிஷம், விதியின் ஒருபகுதியில், மனித சுதந்திரமும் அமைந்திருக்கிறது என்று வியப்புடன் கூறுகிறோம். மனிதன் சிந்திக்கச் சிந்திக்க, அவன் விதியினின்று விடுதலையடைகிறான்; மனச் சிந்தனையே, மனித சுதந்திரம். இந்த வகையில், மனித மூளை, சிந்தனையால் விதியை எதிர்த்து விதியை அழிக்கவும் ஆற்றல் பெற்று விடுகிறது. விதியின் முன் கெஞ்சாமல், எதிர்த்து வேலை செய்வதே மனித சுதந்திரம்; காகிதத்தில் ஏறி வெளிவந்த அமெரிக்க சுதந்திரம் உண்மையான சுதந்திரமல்ல; வோட்டுரிமை வழங்குவதால், மனித சுதந்திரம் வாழ்க்கையின் ஆழத்தில் பிரதிபலித்துவிட மாட்டாது. இயற்கையின் கொடிய தன்மையைப் பற்றிச் சிந்திக்காதே; விதி விதி

யென்று கதறுபவர்கள், கேவலமான அடிமையுள்ள முடையவர்களே. முனைந்து முட்டிக் குமுறி உழை: ஜெயமுண்டு, பயமில்லை.

பிறவியிலேயே சில ஜாதியார்கள், சில தேசத்தார்கள் விதியில் நம்பியிருந்தார்கள் என்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். அவர்கள் விதியுடனே சதிசெய்து வீழ்ந்தார் கள். பலமற்றவர்கள், பாபிகள் இவர்களே, உழைக்காமல், சோம்பலில் மடிந்து, விதியைக் குறைகூறுவார்கள். விதியை எப்படி நாம் நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளமுடியும்? நம்முடைய வாழ்க்கையின் நடத்தையை, இயற்கையின் உயரத்திற்கு எழுப்ப வேண்டும். வெளி இயற்கை குமுறும்போது, மனித இயற்கையும் குமுறி உயரட்டும். உயர்ந்த வழுவாத ஆகர்ஷண சக்தியுடன், மனிதன் தைரியமாக செயலாற்ற முன் வரட்டும். இந்த நிலையில் எவனும் அவனைத் தடுக்க முடியாது, எந்த சக்தி யும் அவனை எதிர்க்க முடியாது; லஞ்சமும் அவனுடைய உயர்ந்த உள்ளத்தை அசைக்க முடியாது. ஓயாது ஓடும் களங்கமற்ற ஆறுடனும், உயர்ந்த காட்டு மரத்துடனும், உறுதியான அகண்ட மலையுடனும், மனிதன் தன்னுடைய மனநிலையைப் பொருத்தி ஒப்பிட்டு உயர்ந்து வளர வேண்டும். எதையும் உயர்ந்த வளர்ந்த உறுதியான மன நிலையுடன் எதிர்க்கும் ஆற்றல் உதயமாவதும் உறுதி.

விதியின் கொடிய நிலையை, வாழ்க்கையில் மனிதன் அஞ்சாது சோர்வடையாது எதிர்த்து நின்று பழக வேண்டும். இதுவே விதியைப் பலனுடன் அனுபவிக்கும் முறை. கடலில் திரையை எதிர்த்துப் போரிடு; உன் நண்பன் வீட்டில், 'காலரா'வை எதிர்த்துப் போரிடு; உன் வீட்டில் இரவில் சதி செய்பவனை எதிர்த்துப் போரிடு; கடமையின் பாதையில் குறுக்கிடும் எதையும் எதிர்த்துநில்; எப்போதும், விதி உனக்கு உறுதியான துணை என்று கருதிக் கருதி,

உழை. நல்ல பலனுண்டு, நன்மையுண்டு, நம்பு, உறுதி யாய் நம்பு.

விதியின் செயல் எங்கும் பரவிக் கிடக்கும்போது, விதியின் அங்கமே மனிதனும்: மனிதன் இந்த வகையில் விதியை விதியால் எதிர்க்கலாம். உலகத்தில் கொடிய நிகழ்ச்சிகள் தோன்றினால் நம்முடைய ஜீவிய அணுக் களும் அவ்வாறே போரிடும். நமது உடலில், உள்ளும் புற மும் உள்ள காற்றலைகள், ஒன்றையொன்று எதிர்த்துச் சமநிலையை அடைகின்றன. கடல் நீரால் நிறைத்த ஒரு கண்ணாடிக் குழாய், கடலையும் எதிர்த்துப் போராடும். அடியும் அதிர்ச்சியின் எதிர்ப்பும், ஒன்றோடொன்று நின்று போராடி நிலைக்கும்.

விதி விதியுடன் எதிர்ப்பது, எதிர்த்துத் தடுப்பதே யாகும்: இதுவே இயற்கை யரண். இவைகளிலே, சிருஷ் டிச் சக்திகள் உதயமாகின்றன. சிந்தனைச் சிறப்பால், மனிதன் அடிமை யெல்லை தாண்டிச் சுதந்திரமடைகிறான். நாம் மாறி மாறிப் பிறக்கிறோம் என்று சரியாகவே நாம் உணர்ந்து பேசுகிறோம். நமது அனுபவம் தொடர்ந்து ஒன்றையொன்று பின்பற்றி மாறி மாறி வளர்வதால், நாம் பழைய நிலையை மறக்க நேரிடுகிறது; புது நிலையே ஞாபகக் கோட்டிற்குள் வருகிறது. இதனாலேதான், ஏழு அல்லது ஒன்பது வானமண்டலங்கள் என்று சாஸ்திரமும் எழுந்தது. வாழ் நாட்களில் சிறந்த உயர்ந்த நாள் எது? வாழ்வின் பெருநாளில், உலகப் பொருள்களினுள் பதிந்து பரவிக்கிடக்கும் ஒருமைப்பாட்டை, தெய்வத் தன்மையை, ஆத்ம நிலையை அகக்கண்ணால் அறிந்து, விதியின் அகண்ட தத்துவத்தை உணர்ந்து, என்றும் நிலைத்து நிலவும் விதியே உயர்ந்த அழியாத நீதி என்று உணர்வதாகும் 'நிர்வாண நிலை' மேலிருந்து கீழே நமது உள்ளத்தின் ஆழத்தில் உண்மையைப் பாய்ச்சுகிறது. இத்த ஆத்ம சக்தி நம்முள் கிடப்பதைவிட, நாமே விதியின் இதயத்தில் சுழல்கிறோம்.

நமது சுவாசக் கருவியில், காற்று வந்தால் நாம் சுவாசித்து உயிர் வாழ்கிறோம்; காற்று நின்றால், நாம் மடிகிறோம். புது உண்மையுடன், நமது மனம் புது உலகளவு விரிகிறது. நாம் இயற்கையின் விதியைக் கூறித் தழுவி வருபவர்கள்தான்.

உள்ளொளியுடன்கவனிப்பவனுக்கு, உலகத்திலுள்ள வித்தியாசங்களும் பிளவுகளும் நன்கு புலனாகும்; நம்முடைய உள் நிலையே வெளி நிலையை எதிர்க்கிறது. அக நிலையறிந்தவன், தன் மனநிலையின் உண்மையான தன்மையை உணர்ந்து, உறுதியாகப் பேசுவான். மனதின் அழிவற்ற நிலையை அறிந்து, நான் முடிவற்றவன் என்று கூறுவான். மனதின் அகண்ட சக்தியை உணர்ந்து, நான் அசைக்கமுடியாத பலமுடையவன் என்று சொல்லுவான். அது நம்முள் இல்லை, நாம் அதனுள்ளிருக்கிறோம், அது வீண் ஜடப்பொருளல்ல, ஈசனின் தன்மை நிறைந்தது. தெய்வத்தன்மை எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிப் பாய்ந்து, ஈசன் தன் அபூர்வ குணத்தை சில சிருஷ்டிச் சிறப்புகளில் வழங்கிப் புதுமையை இன்பமாக விரித்துக் கொண்டே போகிறான். கடவுள் பிற பொருள்களை உபயோகப் படுத்துவதைத் தவிர, பிறரால் கருவியாக்கப்படுபவரல்லர். இறையொளியிற் கலப்பவர்களுக்கும், அதில் கலக்காதவர்களுக்கும் நீண்ட தூரமும் அகண்ட வித்தியாசங்களும் உண்டு. கடவுளை உணரச் சக்தியற்றவர்கள் யார்? — புட்களும், மிருகங்களும். இறையொளி தானே உதயமாவது—முன்னோர்களிடமிருந்தாவது, திறமையுள்ளவர்களிடமிருந்தாவது, பைபிளிலிருந்தாவது, அரசாங்கத்திலிருந்தாவது,கலாசாலையிலிருந்தாவது, ஜாதிக்கோட்பாட்டிலிருந்தாவது இறையொளி தோன்றவில்லை. இறையொளியுடன் கலந்தே, இயற்கை முரணின்றித் தழுவி வளர்கிறது; எல்லாப் பொருள்களும் சிருஷ்டிச் சிறப்புடன், நாதச்சிலிர்ப்புடன் ஒவியகாம்பீர்யத்துடன் சுழல்கின்றன. மனித உலகமே சிரிப்பற்ற ஹாஸ்ய நாடகமாகத் தோன்று

கிறது: ஜனப்பெருக்கம், ஆசைகள், ராஜாங்கம், சரித்திரம் எல்லாம் கவனித்துப் பார்த்தால், பொம்மை வீட்டில் அமைந்த பொம்மை யுருவங்கள். இதனுல், சில உண்மை களை அதிகப்படுத்திக் காட்டவில்லை. ஒவ்வொரு அறிவு நிறைந்த மேதையின் சொல்லும் கருத்தும் பலரால் வழங் கப்படுவதை நாம் ஆவலுடன் கேட்கிருேம். அந்த மேதை யின் முன், நமது மனமே எழுந்து, கனலும் நிலையில், நமது சிந்தனை இதைவிட உயரும்போது, பழைய மேதை யின் உயர்வை உடனே மறந்துவிடுகிருேம். இந்த மின்னு கின்ற உயர்ந்த மனநிலையை நாம் அடைந்து வரும்போது, சகல மனித பேதங்களேயும் கடந்து நிற்கிருேம்; இந்த உயர்ந்த மனநிலையில், சகல சட்டங்களும் மறைகின்றன; பந்தமற்ற ஜோதி நிலையை அனுபவிக்கும் ஆற்றல் வந்து விடுகிறது. பழைய பாதையைவிட்டு விலகி, சிந்தனையின் ஒளியைப்பற்றிப் பறக்கும்போது, நாம் பலூனில் பறப் பதுபோல் காண்கிருேம். நாம் ஆதியில் புறப்பட்ட இடத்தையே மறக்கவும் நேரிடுகிறது. புது உயரத்தில், சிறப்பும் ஒளியும் கண்களைத் திறந்து இன்பம் ஊட்டுகின்றன.

ஒரு பிளானை ஊடுருவிப்பாய்ந்து பார்க்கும் ஆற்ற லுடையவன், இந்த சிருஷ்டிக்குத் தலைவனுகவே அமைந்து பின் வருவதையும் ஊகிக்கும் நுட்பமான அறிவையும் கொண்டவனுகவே திகழ்கிருன். சிருஷ்டியின் பல பகுதி களையும், உயிர்நிலையுள்ள ஒருமை செறிந்த உலகமாகவே சம்மந்தப்படுத்தி அவன் திறமையுடன் உணர்கிருன். நாம் இருந்து எதையும் செலுத்தி ஆண்டால், உறங்கினுலும், கனவுகள் வேகமாக உருவடைந்து விடுகின்றன. ஒரே மணி நேரத்தில், முன்னும் பின்னும் சிந்தனைத் தொடர்பு, இதய முடிவைத் தழுவி, செயலில் உறுதிபெற்றுவிடுகிறது. சிந்தனைச் சங்கிலியில், ஈசனின் தலைமை மின்னிப் பரவிக் கிடக்கிறது. இதன் உயர்ந்த தன்மை என்ன?—என்னு டைய மனம், உன்னுடைய மனம் என்பதல்ல; உலக மன

ஒருமையையே உண்மையாகப் பிரதிபலிக்கிறது. பல மனங்கள் ஒரே முடிவை எட்டிப்பிடிக்கின்றன. பல ஆத்மாக்களிலும் பெய்யப்பெற்ற ஒரு பெரிய ஆத்மச் சுடரின் விரிவே இந்த நிலை. ஒளி நிறைவே, மனிதனின் ஆக்கநிலை. அணுக்கள் நீரோட்டத்தில் கலந்து ஐக்கிய மடைவதுபோல், ஆத்ம நிலைகள் ஒருமைப்படும் போது, மற்றவர்களின் சுயநலப்போக்கிற்கு ஒரு தனி அர்த்தம் தொனிக்கிறது எது நல்லது, எது அவசியம் என்ற பொருளின் திசையில், ஆத்ம உலகங்களில், மன நிலையின் முடிவுகள் சுழல்கின்றன. இந்த உயர்ந்த செயலின் காற்றே, நாம் உட்கொண்டு வெளியே அனுப்பும் ஆத்ம நிலை விரிவு; சிந்தனை வெள்ளத்தில், உலக ஜடம் கரைகிறது; மனம் உயரப்பறந்து, திரவநிலையில் கருத்தின் உச்சியைத்தழுவுகிறது. சிந்தனை நிறைந்த இருவர்களில், யாருடைய சிந்தனை மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறதோ, அவனே உறுதியான ஒழுக்க நிலையைக்காப்பவனுகிருன். எப்போதும், கடவுளின் முடிவைப் பிரதிபலிக்கும் பல இறுதியான மன நிலைகளைக்கொண்ட மனிதர்கள் எங்கும் உண்டு.

சிந்தனையில் மனிதன் சுதந்திரத்தைச் சுவைப்பது போல, ஒழுக்கத்திலும் மனிதனுக்கு உயர்ந்த விடுதலையுண்டு. மனிதனுட்கிடக்கும் ஆத்ம ரஸாயன நிலைகளைப் பிரித்துக்காட்டுவது மிகக்கஷ்டம். உண்மையறிந்து, அதைச் செயலில் அமைக்க விரும்பும் மனநிலையே உயர்ந்த நிலை; இதுவே உண்மையின் முடிவு, செயலின் சிறப்பு, மன உறுதியின் முடிவு. மன உறுதி தானுக அமைந்து ஒருமையுடன் வளர்வது; எல்லாப்பெருஞ்சக்தியும், உண்மைப் பிரகிருதியின் தோன்றல்; உறுதியான மனம் இயற்கையில் தோன்றுவது, பிறரால் சமைக்கப்படுவதல்ல. சக்தி வெளியீட்டில், பவுண்டுக்குப் பவுண்டு தராசில் எதிர்த்து நிற்க வேண்டும். சக்தி உள்ளும் புறமும் ஒருமுகப்பட்டு நிலை நிற்பது. ஆலரிக், போன பார்ட்டி, இவர்கள் இருவரும் ஒரே உண்மையில் நின்று செயலாற்றியவர்கள்; அவர்கள்

லையற்றிருந்தால், அவர்கள் மனதையும் முடிவையும் யாரும் வளைத்து விடலாம், விலைக்கு வாங்கி விடலாம். குறுகிய மனதை யாரும் லஞ்சங்கொடுத்து அழித்து விடலாம்; ஆனால் உலக முடிவுகளைத்தழுவி நிற்கின்ற அகண்ட பரிவே, அழியாத எல்லையற்ற சக்தி; வளைக்க முடியாத கலைக்க முடியாத உயர்ந்த உறுதியான மன நிலை. ஒழுக்க உலகில் நிறைந்து நிற்பது அகண்ட சக்தியின் உயர்ந்த ஆத்ம அனுபவமே; இதிலேதான் நம்பிக்கை வேரூன்றி வளர்கிறது. இதய நாடியில் ஒலிப்பது, நீதிக் கடவுளின் சத்திய உறுதியே. குழந்தையின் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் தெய்வக்குரலே உயர்ந்த நீதி யின்ஜோதி. வீரச்செயல்களின் கதைகளும் விளக்க நூல் களும் சரியான வாதங்களல்ல; விடுதலையின் ஹாஸ்ய வெளியீடுகளே. "விதியால் வஞ்சிக்கப்பட்டு, அவதிப் பட்டு வருபவன் நாசமடைவான். இது சுவர்க்கக் கதவில் பொறிக்கப்பட்டிருக்கிறது," என்று பாரஸீகக் கவி 'ஹபீஸ்' கூறுகிறார். சரித்திரத்தைப் படிக்கும்போது, நமக்கு விதியில் நம்பிக்கை ஏற்படுகிறதா? விதியையும் மதியால் வெல்லலாம் என்ற தைரியம் சரித்திர நிகழ்ச்சி களில் ஓரளவு தோன்றவில்லையா? உலக லீலைகளில், மனிதனின் மன உறுதி கொஞ்சம் எதிர்த்து நிற்கவே முயல்கிறது.

உட்பார்வை, உறுதியான முடிவல்ல; அன்பும் ஒரு முடிவல்ல. நாம் காண்பது உறுதிபெறாத நிலையில், நல்ல குணம், செயலாக மாறுவதற்கு முன், எண்ணத்திலேயே மடிகிறது. வால்டேர் சொல்லியிருப்பதுபோல, நல்ல குணமுள்ளவர்கள் பயங்காளிகள், தங்கள் எண்ணத்தைச் செயலாக மாற்றும் ஆற்றலற்ற துர் அதிர்ஷ்டசாலிகள். மன உறுதியுடன் எதையும் நிறைவேற்ற வேண்டுமானால், இரண்டு தன்மைகளும் கலந்தே உறுதிச் செயல் நிகழும்.

உண்மையை உணர்ந்து, அதைச் செயலில் ஆற்றும் சக்தி வாய்ந்த உத்தமத் தியாகியே, உயர்ந்த தளராத மன உறுதி யுடையவன்.

இயற்கையில், மன உறுதியை உறுதியாக நிலைக்க வைப்பதே பெருஞ் செயல். சமூகத்தில் மன உறுதி பிளவு பட்டுக் கிடக்கிறது; இதனுலேயே உலகத்தைக் காக்க தியாகிகளும் மதங்களும் அவசியம் வேண்டும். முன்னேற ஒரே வழி; தியாகி அதை உடனேயறிந்து, அதே குறிக் கோளுடன் வேகமாய்ச் செயலாற்றி, உலகத்தையே காப்பாற்றுகிருன்; அவனுடைய நற்செயலே உலக முன்னேற்றம்; அவன் வேண்டாத எதுவும் உலகத்திற்கு வேண்டாதவையே. அவன் மனமும் செயலும் விரிய விரிய, உலகப் புகழும் உயர்ந்து முன்னேறுகிறது. அவன் கண் ணிலே, சூரிய ஒளி சுடர்கிறது. அவனுடைய செயல் உயர உயர, புகழ் உயர உயர, நாம் எண்ணிக்கையையும், பணத் தையும், சீதோஷ்ண நிலையையும், இழுப்பையும், விதியின் மற்ற அம்சங்களையும் மறக்கிருேம்.

மனிதனின் உறுதியான செயல், அவனுடைய வளர்ச் சியை அளந்துகொண்டு செல்லுகிறது. குழந்தைகள் தங் கள் வீடுகளில் சுவரை எதிர்த்து நின்று தங்கள் உயரங் களை வருஷா வருஷம் கோடு கிழித்துப் பார்ப்பதுபோல், நாமும் விதியை எதிர்த்து நிற்கின்ருேம். பையன் மனித னுக முற்றி வளர்ந்தபின், வீட்டுக்குத் தலைவனை உடன், அவன் அந்தச் சுவற்றை இடித்துவிட்டு, புதிய பெரிய சுவர் எடுக்கிருன். இது காலத்தை ஒட்டிய கேள்வியே யாகும். ஒவ்வொரு தைரியமுள்ள வாலிபனும், தகுந்த தயாரிப்பின் பேரில், கொடிய ஜந்துவையும் அடக்கி ஆளு கிருன். எண்ணம்போல் வளரவும் குறைக்கவும் மனித னிடம் சக்தியுண்டு; விதி, அதை எதிர்த்து நிற்கும் மனித சக்தி, இரண்டையும் கண்டபின்னுவது, நமக்கு ஒற்றுமை யில் நம்பிக்கையுண்டாகிறதா? மனிதர்களில் பெரும்

பாலார் இரண்டு தெய்வங்கள் உண்டென்று நம்புகிறார்கள். வீட்டில் ஒரு சக்தியும், தொழிற்சாலையில் மற்றொரு சக்தியும் உலகத்தை ஆட்டிவருவதாக அவர்கள் எண்ணுகிறார்கள். வாழ்க்கையில், சமூகத்தில், கடிதங்களில், கலையில், காதலில், மதத்தில், நண்பனாகவும் தாய் தந்தையராகவும் நடத்தி வருவது ஒரு சக்தி யென்றும், இயந்திரச் சுழற்சியில், சீதோஷ்ண வளர்ச்சியில், தொழிலில், அரசியலில், வேறொரு சக்தி ஆட்டிவைப்பதாகவும் கருதுகிறார்கள்; ஒரு பகுதியில் உள்ள தன்மையையும் செயலையும் மற்றொரு பகுதிக்கு மாற்ற முயலுவது பெருந் தவறு என்றும் நினைக்கிறார்கள். தங்கள் வீட்டில் நல்லவர்கள், யோக்கியர்கள், பெருந்தன்மை யுடையவர்கள் என்று கருதப்படுபவர்கள், சந்தையில் உள்ள தொழிற்போரில் ஓநாய்களாகவும் நரிகளாகவுமே மாறிவிடவில்லையா? எலெக்ஷன் ஓட்டில் சதிசெய்து மறுக்கும் சண்டாளர்கள் இல்லையா? ஓரளவு தெய்வ நம்பிக்கையுடன் இருந்து கொண்டு, கடவுள் தங்களைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறார்கள்; ஆனால் கடலில் படகில் செல்லும்போதும், தொத்துநோய் பரவி வரும்போதும், யுத்தத்திலும், தெய்வத்துக்கு விரோதமாக ஏதோ ஒரு கொடிய சக்தி மனித வாழ்க்கையை அசைப்பதாகவே எண்ணுகிறார்கள்.

உலக வாழ்க்கையில் எப்பகுதியிலும், எந்த நேரத்திலும், காரியத் தொடர்பும் காரண சம்மந்தமும் உண்டு. இவ்வுலகில், மனிதனின் பார்வை நிற்கிற இடத்தில் கடவுளின் ஆக்ஞையும் நிற்கவில்லை. இதே சட்டத்தில்தான், எந்தச் சக்தியும் நேசமாகவும் உறுதியாகவும் உழைத்து வருகிறது. நம் கண்முன் ஆராயப் படாத விஷயங்களே விதியின் எல்லை யென்று நாம் கருத நேரிடுகிறது; சிந்தனையில் விழாத விஷயமே, விதிக்கோடாக நாம் எண்ணுகிறோம்; உட் காரணங்களை நாம் ஆராய முயலவில்லை. காரணங்களின் உட்பொருள் நமக்குப் புலப்படாவிட்டால், நாம் எதையும் விதி, விதி என்று கருதுகிறோம்.

விதி

நம்மை அறுத்தெறிய எத்தனிக்கும் ஒவ்வொரு சூழலை யும் ஆராய்ந்து பார்த்தால், அதை நாம் மதியால் துணைச் சக்தியாக மாற்றியமைத்துக்கொள்ளலாம் என்று அறிய லாம். புலப்படாக் காரணங்களே, அறிய முயலாத விஷயங்களே, விதியின் கீழ் வரும். கப்பலையும் மாலுமி யையும் மூழ்கடிக்கும் அலையில், நீ நீந்திப் பழகிவிட்டால், எதையும் எதிர்த்து, கடலின் கொந்தளிப்பையே ஒரு துணைச் சக்தியாக மாற்றிக்கொள்ள முடியும். பனிக்கட் டியில் உள்ள குளிர்ந்த நிலை, நம்மையே ஜில்லிடச் செய்ய லாம்; ஆனால் அதில் விளையாடிப் பழகினல், அதில் ஒரு உணர்ச்சி இன்பம், கவிதை யின்பம், செயலின்பம் வரக் காணலாம். இதிலே, உடலும் மூளையும் உறுதிப்பட்டு, ஒருவன் உயர்ந்த பதவியை அடைந்து விடலாம். ஒரு ஆளும் சாக்ஸன் ஜாதிக்கே, கடலும் குளிரும் பெரும் பயிற்சி யளித்துள்ளன. ஆயிரம் ஆண்டுகளில், அவர்கள் வளர்ந்து பயின்று, நூறு இங்கிலாந்துகளையும், நூறு மெக்ஸிகோக்களையும் உண்டுபண்ணி யிருக்கிருர்கள். கடல் நீராவி, மின்சாரம், உலோகங்களைக் கம்பியாக அடித்து நீட்டும் தன்மை, பலூன், இவைகள் எல்லாம், முயற்சியின் முற்போக்கால், உங்களை எதிர் நோக்கி நிற்கின்றன.

யுத்தத்தைவிட, ஜ்வரம் வருஷா வருஷம் அதிகமான உயிர்ச்சேதம் செய்கிறது. ஆனல் சாக்கடை நீர் சரியாக ஓடினல், ஜ்வரம் மறைந்து விடுகிறது. கடலில் உடல் வெளுத்து, 'பிளேக்' நோயால் தாக்கப்பட்ட நிலையில், எலுமிச்சம்பழச் சாறுல் நோய் மாறி குணமடைகிறது. காலரா, அம்மையால் தாக்கப்பட்டு மடியும் ஜனத் தொகையை, நல்ல நீர் ஓட்டமுள்ள சாக்கடையாலும், அம்மை குத்தலாலும் நாம் காப்பாற்ற முடியும்- காரண காரியத் தொடர்பையுணர்ந்து, எந்தக் குறையையும் நாம் விலக்க முயலலாம்; குணதோஷத்துடன் போரிட்டு, நன்மையைத் தேடமுடியும். தோற்ற எதிரியிடமிருந்து சில நன்மைகளை நாம் அறிய முடியும். கலை, பதுங்கிக்கிடக்கும்

விஷத்தை வெளியே இழுத்துக்கொண்டு வருகிறது. அலை யோட்டமும், மனிதனுக்கு அடிமையாக உழைக்கிறது; கொடிய மிருகங்களையும், தனக்கு உணவாகவும், ஆடை யாகவும், கூலியாகவும் மனிதன் ஆக்கி விடுகிறான்; கடிகா ரத்தை அடக்கி ஆளுவது போல், ரஸாயன வெடிகளையும் மனிதன் துணிந்து ஆளுகிறான். இவைகளே மனிதன் ஏறும் யுத்தக்குதிரைகள். மனிதன் எதையும் எவ்வகை யிலும் அசைக்கிறான்; குதிரைக் கால்களிலும், புயலின் சிறகுகளிலும், நீராவியிலும், பலூன் காற்றிலும், மின்சா ரத்திலும், மனிதன் பறந்து செல்லுகிறான்; ஆகாசத்தில், உயரப்பறந்து, கழுகுடனும் போரிடுகிறான். எதனாலும், மனிதன் எதையும் எதிர்த்து வெற்றிபெறுகிறான்.

ஒரு காலத்தில், நாம் நீராவியை ஒரு பைசாசம் என்று கருதினோம். குயவன் செய்யும் சட்டியின்மேல் மூடியில், நீராவிப் பைசாசத்தை வெளியே அனுப்ப ஒரு சிறு துவாரம் இல்லாவிடின், அந்த சைத்தான் பானையையும் கூரையையும், வீட்டையுமே தூக்கிக் கொண்டு போய் விடும் என்று பயந்தார்கள். வாட், புல்டன் என்ற அறிவிற் சிறந்த மேதைகள், இந்த நீராவியின் அபூர்வ சக்தியை அறிந்தார்கள்: நீராவி பைசாசமல்ல, அதுவே மனிதனுக்கு உதவும் அகண்ட சக்தி வாய்ந்த தெய்வம் என்று கண்டு, ஜனங்களுக்கு இந்த அதிசயத்தை எடுத்துக்காட்டினார்கள். நீராவியின் அபூர்வ சக்தியை வீணாக்காமல், உடனே மனித சமூகத்துக்குப் பயன்படுத்தினார்கள். நீராவியே, நமக்குப் பேருதவி செய்யும் செயலாளன் என்று அறிந் தார்கள். ஜனங்களின் முன், செயலில் விளக்கிக் காட்டி னார்கள். எதிர்க்கமுடியாத பொருள்களையெல்லாம், இந்த நீராவியின் சக்தியால் எதிர்த்துக் கைவசப்படுத்தினார்கள். மலை, நீர், இயந்திரம் எல்லாம் நீராவியின் எதிர்ப்புக்குச் சாய்ந்து படிந்து உழைத்தன. காலத்தையும் இடத்தையும் வேகமாய்த் தாண்டும் சக்தி படைத்தது, இந்த அபூர்வ நீராவி.

எந்த சக்தியின் நிலைமையும் இது போன்றதே. கோடிக் கணக்கான ஜனங்களின் அபிப்பிராயமும் இந்த விதமான சக்தி வாய்ந்ததே: சமூகத்தில் ஒன்றின்மேல் ஒன்ருக அமைக்கப்பட்ட பல படிகள்,—போர் வீரர்கள் பிரபுக்கள், உச்சியில் அரசன்; மாளிகைகள், போர் நிலையங்கள், போலீஸ். மத்தியில், மதப் பிளவுகள் உட்புகுந்து, பழைய சமூக மகுடங்களையும் பிரிவுகளையும் திடீரென்று உலவினப்படுத்தலாம். சக்தியை உணர்ந்த அரசியல் நிபுணர்கள், வாட்ஸ் புல்டனைப்போல, அரசியலிலும் சக்தியின் தத்துவத்தை ஆழ அறிந்து மனித சமூக அமைப்பில் சக்தியைப் பல படிகளாக வரிசைப்படுத்தி, அரசியல் அமைப்பை எக்காலமும் அசைக்க முடியாத முறையில் சிருஷ்டித்திருக்கிருர்கள். சக்தி, சிதருமல், ஒற்றுமையாக உழைத்து வருகிறது.

விதியின் பாடங்கள், மிகமிக வெறுக்கத் தக்கவையே. அதிர்ஷ்ட கோடுகளை, நமது முகத்தில் கண்டு சொல்ல முயற்ச்சிப்பவனை யார் விரும்புகிருர்கள்? நம்முடைய மனதிலும் மூளையிலும் மண்டிக்கிடக்கும் பல கெடுதல்களும், நம்மைக் கீழே இழுத்து விடும் என்று சொல்லுவதை யார் நம்புகிருர்கள்? நேபிள்ஸ் தேசத்தான் வளர வளர, முதிர முதிர, பெரிய ஆஷாடபூதியாக மாறி விடுகிருன் என்று ஒரு அறிவிற்சிறந்த வைத்திய நிபுணர் கூறுவதை ஆராய்ந்துபாருங்கள். ஓரளவு இதுவும்உண்மைதான்.

ஆனல் இவைகள் எல்லாம், பவுடர் சுரங்கங்கள், போர் கிரியைங்கள். ஒருவன் தன் குறைகளை விரும்பி, திறமைகளைக் கண்டு நடுங்கவும் வேண்டும். ஒருவனுடைய அபூர்வ சக்தி, அவனுடைய உடல் நலத்தையே க்ஷீணிக்கவும் செய்து விடுகிறது: ஒரு பக்கம் குறை, மறு பக்கம் நிறைவாக மாறிவிடுகிறது. பொறுமையோடு வருந்தியுழைப்பதே யூதர்களின் தருமமாயிருக்க, அவர்கள் தற்காலம் உலகத்தையே ஆளவும் புறப்பட்டு விட்டார்கள்.

விதி

விதியே பாறையானால், தீமையே ஆரம்ப நன்மையானால், தடையே பின்வரும் வளர்ச்சியானால், துக்கமும் எதிர்ப்பும் சுமையுமே நாம் பறக்கும் சிறகாய் அமைந்து விட்டால், நம்முடைய உயர்ந்த மனநிலை, உண்மையறிந்த பக்குவத்தில் பெருஞ் சாந்தத்தை யடைந்துவிடும். மனப்பிளவு மாறிவிடும்.

விதியே விடுதலை, விதியே சாந்தம். உலகத்தில் எதுவும் ஏறி இறங்கியே அமைதியும் சாந்தமும் அடைகிறது. உலகத்தில் முழுமையும் அதன் பின்னங்களும், ஒன்றையொன்று தழுவியே, நன்மையைக்கருதி, உடல் நலத்தையும் பலத்தையும் ஒட்டியே சுழல்கின்றன. சமூகம் பலபடிகளாக, மேல் நோக்கி வளர வளர, முன்னே தோன்றிய பகுதிகள் மடிய மடிய, புதுப் புது வகுப்புகள் சமூகத்தில் உயர வளர்கின்றன; வளரும் ஆத்மாவின் முன், சுதந்திரம் சுடர்கிறது, வளர்கிறது, மேன்மையடைகிறது. மனிதனின் நீண்டகால வளர்ச்சியில், நாம் கண்ட புது உண்மைகளும், புது அறிவின் அதிசயங்களும், செயலாற்றியவர்களின் சிறப்புக்களையே எடுத்துரைக்கின்றன; நாம் அறிந்த புது உண்மைகளெல்லாம், நாம் விதியின் கையினின்று பிடுங்கி வைத்திருக்கும் சுதந்திரத்தையும் விடுதலையையுமே சுட்டிக் காட்டுகின்றன. விடுதலையே மனிதவளர்ச்சி, விடுதலையே உலக வளர்ச்சி; கட்டை மீறி முன்னேறி வளரும் மனிதனே, விதியை எதிர்க்கும் விடுதலை வீரன். ஒவ்வொரு துன்பமும், ஒரு வழிகாட்டி; அதுவே நன்மையைத் தூண்டுகிறது. உலகமே போர்மயம்: மிருக உலகிலே, உணவுச் சண்டை பல்லை உடைக்கிறது, கர்ஜிக்கிறது, கதறுகிறது; ஆனால் இதே மிருகங்களை, நாம் நல்ல முறைகளில் உபயோகப்படுத்தவும் வழியேற்படுகிறது.

விதியே விடுதலை, விடுதலையே விதி என்ற நுட்பமான எல்லைகளுள் நுழைந்து பார்க்கும்போது, இயற்கையின் சல்லிவேர் வரை, விதியும் விடுதலையும் உட்காரணத்துடன்

எவ்வாறு பின்னப்பட்டிருக்கின்றன, என்பதை ஆழமாய் அறிய முயல்; நமது நெருங்கிய வாழ்வு, தனது தொடர்பை எட்டி வீசியிருக்கிறது. இயற்கையின் முடிச்சு, கெட்டி; அதனுடைய இரண்டு முனைகளையும் ஒருவரும் காண முயலவில்லை. காண்பதும் கஷ்டம். பிரகிருதியே பெரும் பின்னல். வாழ்வின் வலை, முடிவற்றது, மிஞ்சிக் கிடப்பது. அழகிய அரசர் கல்லூரியின் முதற்கல்லை எங்கே வைப்பது என்று யாருங் காட்டினுல், தான் மறு கல்லைக்கட்டுவதாகக் கூறினர், கிரிஸ்தோபர்ரென். பல பகுதிகள் அடங்கிய மனித வாழ்வின் கட்டிடத்தில், முதற்றோன்றிய அணுவை எங்கே கண்டறிவோம்? இயற்கையில், தன்னுள் தோன்றிய இயற்கை யியல்புள்ள பழக்கமே காரணத் தொடர்பாக அமைந்து விடுகிறது. உணவும் உறக்கமும், சீதோஷ்ண நிலைமைப் பின்பற்றியே அமைந்திருப்பது இயற்கையின் நுட்பமான விதி.

ஒளியில் கண்கள், ஒலிக்கும் காற்றில் காதுகள், நிலத்தில் பாதங்கள், நீரில் மீன் செதிள்கள், விண்ணில் சிறகுகள்-எல்லாம், ஒவ்வொன்றும் தன் இயல்பிற்குத் தக்கபடி இயற்கைப்பொருளில் இடம்பெற்றிருக்கின்றன. உலக சிருஷ்டியில், ஒவ்வொரு பகுதியிலும் அதையொட்டிய ஜந்துக்கள் வாழ்கின்றன. ஜந்துவும் அதன் உணவும், அதை உறிஞ்சும் அட்டையும் அதன் எதிரியும், ஒன்றையொன்று தழுவி உயிர் வாழ்வதைக்காணலாம். சக்தித் தராசு நிலைத்து ஆடாமல் நிற்கிறது. உயிரின் விரிவில், எதுவும் குறையவுமில்லை, கூடவுமில்லை. மனித சிருஷ்டியின் பல அமைப்புக்களும் அப்படியே: கரி மூட்டி உணவு சமைத்து, ஜன்னலுள்ள வீடு அமைத்து, நண்பர்களுடன் அன்புடன் சிரித்துக் கூடிக் குலாவிக் கண்ணீர்விட்டு வாழ்கிருன். காற்றும் உணவும் தவிர, மனித தேவைகள் பல உண்டு: தன்னைச் சுற்றி வளர்ந்திருப்பதை உடனே வளைத்து ஒடித்துப் பயன்படுத்திக் கொள்ளுகிருன். தோன்றி மறைவன யாவும் அவனுடைய சிருஷ்டியின்

இயல்பையே சோதித்து உறுதிபெறுகின்றன. தாங்தே, கொலம்பஸ் போன்றவர்கள் பிறந்ததற்கு அறிகுறியாக, விண்ணிலும் மண்ணிலும் நாம் என்ன அற்புதங்களைப் பார்க்கிறோம்.

இது எப்படி நிகழ்கிறது? இயற்கை, காலத்தையோ, முயற்சியையோ வீணாக்குவதில்லை; எட்டிப்போகாமல், குறுக்குப்பாதையில் எதையும் நிறைவேற்றவேமுயல்கிறது. போர்வீரர்களுக்குத் தலைவன் கூறியதுபோல, கோட்டை வேண்டுமானால், அதைக் கட்டி எழுப்ப வேண்டும். ஒவ்வொரு உயிர்வாழும் ஜந்துவும், உழைத்தே வாழவேண்டும்: அது கோளமாயிருந்தாலும் சரி, பிராணியாயிருந்தாலும் சரி, மரமாயிருந்தாலும் சரி, முயற்சியால் முளைத்து வரவேண்டும். பிறந்த உடன், உட்பிறந்த உயிர்ச்சக்தி தன்னையே தன் முயற்சியில் இழுத்துச் செல்லுகிறது. எதையும் ஜீரணித்து உபயோகப்படுத்தும் சக்தி வந்து விடுகிறது. வாழ்க்கையே விடுதலை. உட்சக்தியை ஒட்டியே வெளிச் சுதந்திரம். மனிதன் பிறந்ததும், உள்ளும் புறமும், சக்தியும் அகண்ட சக்தியும் கண்ணைத் திறக்கின்றன; அவனைச்சுற்றி எல்லையற்ற இயற்கைக்கு மேற்பட்ட சக்தியும் சுழன்று வருகிறது. மனிதனுடைய சக்தியை அவனுடைய தசைச் சுமையால் மாத்திரம் அளவிட முடியாது; அவனுடைய சக்தி தோலளவில் கட்டுப்பட்டு நிற்கவில்லை, விரிந்து பரவிக்கொண்டே முயற்சியில் உள்ளும் புறமும் ஆக்கம்பெற்று அதிசயமாக வளர்கிறது. மனிதன் எதையும் தழுவித் தொட்டுக் கொக்கரிக்கும் பிராணி! அவன் குணம் எங்கும் ஒளி வீசுகிறது. ஒரு சிறு மெழுகு திரியும், தன்னுடைய கிரணங்களை ஒரு மைல் விரிவிற்கு அள்ளி வீசுகிறது; பெண்ணின் உடலிலுள்ள முலைக்காம்புகள் நட்சத்திரங்களையே தொடுகின்றன.

உலகத்திலே, எதையும் இயற்கையை ஒட்டி முயற்சியால் செயலாற்றிவிடலாம். ஒவ்வொரு செடியும் விரிந்து

விரிந்து, வேர், இலை, பட்டை, முள் முதலியவற்றைத் தூவிக்கொண்டு வளருகிறது. உயிர் வளர்ச்சியின் முதலறையிலே, வயிறு, வாய், மூக்கு, நகம் எல்லாம் தேவைப்பட்ட இடத்தில் வளர்ந்து வருவதைக் காணலாம். உலகம் தன்னுடைய உயிரை, ஒரு வீரனிடமோ, ஆடுமேய்க்கியினிடமோ அள்ளிக் கொட்டிவிடுகிறது. தாந்தேயும் கொலம்பசும், தங்கள் காலங்களில், இதாலியர்கள்: இன்று அவர்கள் ரஷியர்களாகவோ, அமெரிக்கர்களாகவோ மாறிவிடுவார்கள். காலம் கனியக் கனிய, புது மனிதர்கள் தோன்றுவார்கள். இப்படி மாறி அமைவதால், எவ்விதத் துன்பமும் இல்லை. கால வளர்ச்சியில், பொருள் வளர்ச்சியில், குணம் வளர வளர, உலகத்தையே ஒருமைப் படுத்தி ஆட்டும் காரண சக்தி செயலில் முன்னேறிவருகிறது; பல பருவங்கள் தாண்டி, உன்னத நிலையை அடைகிறது, சிருஷ்டிச் சிறப்பின் அற்புதம்.

உலக மகாரகஸ்யம் இதுவே: மனிதனுக்கும் வெளி நிகழ்ச்சிக்கும் உள்ள சம்மந்தம். மனிதன் செயலாற்றுகிறான்; நிகழ்ச்சியும் மனிதனைத் திருத்தி அமைக்கிறது. காரணம் இரண்டும் ஒன்றையொன்று தழுவியே இயக்குகின்றன. நீண்ட சரித்திரக் காலங்களை குறுக்கே அளந்தால், மனிதச் செயல்களே மின்னிக்கொண்டு நிற்கும்: காலமே செயல், செயலே காலம். பெரியார்களின் செயல்களே காலவரைகள்: கதே, ஹெகல், மெடர்நிச், ஆடம்ஸ், கால்கூன், குஷோத், பீல், காப்டன், கோசுத், ராத்சைல்டு, ஆஸ்டர், புருனல், இன்னும் மற்றவர்களும் பெருஞ் செயலாற்றிய பெரியார்கள், அதிசய புருஷர்கள். மனிதனும், அவனைச் சுற்றியமைந்துள்ள கால நிலைகளும், ஆண் பெண் இணைப்பும், பிராணிகளின் வம்சங்களும், அவைகளின் உணவுத் தொடர்புகளும், தகுந்த மூலகாரணங்களுடனேயே இயற்கையில் அமைகின்றன. தொடர்பு மறைந்திருந்தால், விதி மனிதனுக்குப் புறம்பானது என்று எண்ணமுடியாது; அவன் மனதில் விதியின் வினை பதுங்கிக்

கிடக்கிறது: நிகழ்ச்சியே, உனது உருவத்தின் சாயை; செயலே உனது தோற்றத்தின் பிரதிபிம்பம். தான் செய்வது தனக்கேசரியென்றுதோன்றுகிறது. ஒவ்வொருவனுடைய உடல் மனக்கலப்பில், செயல்கள் ஜனிக்கின்றன. "விதியின் ஆத்மாவும் எனது ஆத்மாவும் ஒன்றே என்று இன்றே கண்டேன்" என்று ஆழ்ந்து கூறுகிறார், கவி 'ஹபீஸ்.'

மனிதனைத் தூண்டி வஞ்சிக்கும் உலக இன்பங்கள் எல்லாம்—வீடு, நிலம், பணம், இடம்ப வாழ்வு, அதிகாரம், புகழ்—நம்மை வாழ்க்கையில் ஏமாற்றும் கனவுத்தோற்றங்களேயாம். போர்வீரர்கள், தாங்களாகவே சண்டைக்குப் போகவில்லை யென்றும், ஏதோ விதி பின் நின்று ஆட்டி வைப்பதாகவும் கூறுவது பொருந்தாது. மந்திரவாதி, ஒரு பொம்மையை மயிர்க்கம்பியில் சுழற்றுகிறான்; ஆனால் இந்த உட் குட்டை உணரச் சக்தியற்று, ஆழமற்ற கண்களைக் கொண்ட நாம் குருடர்கள் போல் அதிசயப்படுகிறோம். காரணம், காரியம் இரண்டுக்குமுள்ள தொடர்பை நாம் அறிந்துகொள்ள முயல்வதில்லை.

இயற்கையின் சிருஷ்டியில், மனித நிலைகள் குணங்களைப் பொறுத்தே வளர்கின்றன: நீரில் வாத்தும், வானத்தில் கழுகும், கடலோரத்தில் நெடுங்கால் பட்சிகளும், காட்டில் வேடர்களும், கணக்கிடுவதில் கணக்காயர்களும், சண்டையில் போர்வீரர்களும் அமைந்திருக்கிறார்கள். எல்லாம் மனித குணத்தைத் தழுவி வளரும் செயல்களேயாம். மனித இன்பம், மனிதனின் உட்குணத்தை ஒட்டியதேயாகும். வாழ்வே ஒரு உணர்ச்சி வெறி. காதலில் எவ்வளவு பித்தேறிவிடுகிறது? இருண்ட தோற்றமும், காதலின் சிகரமாக இன்பவெறியில் மாறிவிடவில்லையா? பைத்தியம் பிடித்தவர்கள் தங்கள் உடை, உணவு, மற்ற வசதிகளையெல்லாம் அலட்சியம்செய்வது போலவும், நாம் கனவு காணும்போது அமைதியாக மிகக் கேவலமான

காரியங்களையும் செய்வதாகக் கனவு காண்பது போலவும், வாழ்க்கைக் கிண்ணத்தில் ஒருதுளி' ஒயின்' கூடச் சேர்ந்து விட்டால், நாம் எந்த வேலையிலும் எந்தக் கூட்டத்திலும் கலக்க மறுக்கவேயில்லை; எவ்வாழ்க்கையிலும் இறங்க நாம் கசப்பின்றிச் சம்மதித்து விடுகிறோம். ஒவ்வொரு உயிர் வாழும் ஜந்துவும், தன்னுள்ளிருந்து வருகின்ற நிலையையும் வெளியே தனக்கு வேண்டிய நிலையையும், தன் செயலால், தன் குணத்தால் தீர்மானித்து உறுதிப்படுத்துகிறது. நத்தை தன்னுடைய கூண்டை உள்ளிருந்து உருக்கி ஈச்சம்பழ இலையில் ஊற்றி அமைப்பதுபோலவும், ஆப்பிள் பழத்தை அழிக்கும் மயிர்க்கொடி வெளியே கொப்பளித்து வருவது போலவும், மீன் தன்னுடைய எலும்புக்கூட்டையும் அமைத்துக்கொள்ளுகிறது. இளமையில், நாம் நம்மை வான விற்களால் அலங்கரித்துக்கொண்டு, பல அண்டங்களையும் நாம் ஆளுபவர்கள்போல் வெளியே துணிந்து செல்லுகிறோம். முதுமையடைந்ததும், நாம் வேறு குணங்களையே காட்டுகிறோம்—கீல்வாதம், ஜ்வரம், தசைவாதம், நிலையற்றமனம், ஐயம், பேராசை, சலனம் முதலியன.

ஒருவனுடைய அதிர்ஷ்டங்கள், குணத்தின் கனிகள். அவனுடைய நண்பர்கள், அவனை இழுக்கும் காந்தமுடையவர்கள். ஹெரடோடஸ், புளுடார்ச் போன்றவர்களிடம், விதியின் அறிகுறிகளைக் காண்கிறோம்; நாமே விதியின் சின்னங்களல்லவா! நமது வாழ்க்கையில், நாம் விதியின் கையினின்று தப்பவேண்டுமென்று எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும், இறுதியில் நாம் தப்ப முடியாமல் விதியின் கையில் அகப்படுவதும் உறுதி. நம்முடைய ஒவ்வொரு செயலும், விதியின் வீதிக்கே நம்மை இழுத்துச் செல்லுகிறது.

ஒருவனை எதிர்நோக்கிவரும்நிகழ்ச்சிகள், அவனுடைய குணத்தின் சுடரையே எடுத்துக்காட்டுவதும் இயல்பு; குணம் அவனுட் பிறந்து, அவனை எப்போதும் எங்கும்

தொடர்ந்து செல்லுகிறது. குணம் விரிய விரிய, செயலும் நிகழ்ச்சியும் விரிந்துகொண்டே செல்லும். குழந்தைப் பருவத்தில், பொம்மைகளுடன் வாழ்ந்தான்; வளர வளர, அவனுடைய தன்மை விரிந்து விரிந்து, பெரிய காரியங் களில் ஈடுபட்டு, நண்பர்களிடமும், புகழிலும், செயலி லும், லட்சியங்களிலும் ஐக்கியமடைந்து விடுகிறது. அவன் ஒரு அதிர்ஷ்டச் சின்னமாகத் தோன்றுகிறான்—ஆனால் அவனே காரண இயல்பைக் காட்டும் ஒரு சின்னம்; அவனுள், காரணங்கள் பின்னப்பட்டு வளர்கின்றன. மனிதனே பல செயல்களின் காரணமாக அமைகிறான். எந்த நாட்டையும், எந்தச் சந்தையையும் மனிதன் தன் முயற்சியால் எழுப்பி வளர்க்கிறான். பல தேசங்களைக் கட்டிய பெரியார்களைப் பார்க்கும்போது, அவர்கள் சாதாரண மனிதர்களல்லர்; 'நடக்கும் நாடுகளாகவே' தோன்றுகிறார்கள். புது பிராட் போர்ட், லின், லவல், லாரன்ஸ், கிளிண்டன், பிட்ச்பர்க், ஹோலியோக், போர்ட் லண்ட், இன்னும் மற்ற வியாபார ஸ்தலங்களைக் கட்டி யவர்கள், பெரு முயற்சியில் ஈடுபட்ட பெரியார்கள்.

சரித்திரத்தில், இரண்டு சக்திகளே எதிர்த்துநின்று வளர்கின்றன—, இயற்கையும் சிந்தனையும். இரண்டு பையன்கள் கயிறு இழுப்பதுபோல, இந்த இரண்டு சக்தி களும் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. ஒன்று, தள்ள வேண்டும் அல்லது தள்ளப்படவேண்டும். ஜடமும் மனமும் மோதி மோதியே நிலைபெறுகின்றன. மண்ணில், இயற்கை யில், எந்த திடபதார்த்தமும் மனிதனுடைய சிந்தனைத் தீயில் உருகி உருகி உருவெடுக்கின்றது. மனநிலை உயர உயர, அதன்முன் எதுவும் எதிர்த்து நிற்காது; சூட்சம சக்தியுடன், மனம் தாவித் தாவிச் சென்று தீப்பதத்தில் எதையும் உருக்கி அமைத்துவிடும். மனித மனத்தின்முன், நகரம் வளர்கிறது, பாறைஉடைகிறது. மனிதமுயற்சியால், மன வேகத்தால், மரம், கனி, வஜ்ஜிரம், இரும்பு, எல்லாம் மனிதன் கையில் சிக்குகின்றன. சிந்தனைக் கம்பிகளில்,

உலக நிலைகளும் கனிகளும் சுழல்கின்றன; உழைத்தால், உறுதியாக அபூர்வ பலன்களை எங்கும் பெறலாம். ஒவ்வொருவனும் உழைத்து முன்னேறவேண்டும். கருத்தின் வேற்றுமையால், ஈஜிப்ஷனும், ரோமனும், ஆஸ்டிரியனும் அமெரிக்கனும் வேற்றுமைப் படுகிறார்கள். மேடையில் வந்து நிற்பவர்கள், ஒருவரோடொருவர் முன்பின் தொடர்புள்ளவர்களே. சிலர் கூர்மையான உள்ளறிவுடையவர்கள், மற்றவர்கள் அறிவதற்குமுன், பெரிய உண்மைகளைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஊசி முனையில் ஸ்பரிசிப்பது போல, சில பெரியார்களின் அபூர்வசக்திக்கு எதிர்பாராத உண்மைகள் வேகமாகவே புலப்பட்டு விடுகின்றன.

மனநிலையில், உடற்குறைகளும் வந்துமோதுகின்றன. கட்டிடம் சரியான பாகங்களுடன் அமைந்திருந்தால், கட்டிட உறுதியுடன் அழகும்வந்துகுவிகிறது. குறையுள்ள கட்டிடத்தில், அழகும் மறைகிறது. இரத்தக் குறை, கூனல், குரலில் வெடிப்பு, இவைகளெல்லாம், மனிதனின் மனநிலையையும் வந்து தாக்கிஅழிக்கும். மனிதன் தன் குணத்தால் தாக்கப்படுகிறான்; மனிதன் தன்னுடன் பிறந்த நோயால் மடிகிறான்.

ஒவ்வொரு மனிதனுள்ளும், செடிக்கிருப்பதுபோல, உயிரையழிக்கும் புழுக்கள் உண்டு. கொடியவனுக்குக் கொடிய விரோதிகள்: வீரனும் தப்பாமல் தாக்கப்படுகிறான். எவனையும் மோசம்பண்ணவும் அழிக்கவும் எதிரியுண்டு: வஞ்சனையாலும், தேன்மொழிப் பசப்பினாலும், ஏமாற்றம் நிகழ்ந்தே தீரும். இந்த மனநிலைப் பின்னலை, சாசர் என்ற கவியும் உறுதிப்படுத்துகிறார். சிலருக்கு, ஓசையின்பமும், சகுனமும், பருவ மாற்றமும், ஜோதிடமும் தித்திக்கலாம்: இதே குணமுள்ளவர்கள், ஒருவரையொருவர் மிக எளிதாக ஏமாற்றிவிடுகிறார்கள்.

விதி

நமது வாழ்க்கை, ஒரு நெருங்கிய வலைப்பின்னல். இது ஒரு வில்லங்கமான கட்டிடம். நாம் அலைந்தலைந்து, உண்மையைக் காண்கிறோம். ஆண் ஈ, பெண் ஈ வாழ்க்கையில் துணைகொண்டு விடுகின்றன; அதுபோலவே, மனித வாழ்க்கையிலும் ஆண் பெண் ஜோடிகள் அமைவதைப்பார்க்கிறோம். "தேடுவது கிடைக்கும், நாம் மறுப்பது நம்மையே மறுத்துவிடும்;"—இதுவே கண்கண்ட உண்மை, வாழ்வின் சிருஷ்டி இரகஸ்யம். இளமையில் நாம் தேடுவது, சில சமயங்களில், முதுமைப் பருவத்தில்தான் கிட்டக்கூடியதாயிருக்கிறது. ஆகையால், நாம் எதைத்தேடி முயன்றாலும், உயர்ந்த பொருளையே தேடவேண்டும்.

மனிதனுள் இரண்டு சக்திகள் சுழல்கின்றன. ஒன்று தன்னை யொட்டியது, மற்றொன்று உலக நிலையைப் பொறுத்தது. தனக்கு உதவாத நல்ல செயல்கள், உலக நன்மையைப் பின்னால் வளர்க்க உதவலாம். தன்னையும் உலகத்தையும் சுற்றியே, எந்தச் செயலும் நிகழும். ஒவ்வொரு செயலுக்கும், மேலே சொன்ன இரண்டு தன்மைகள் உண்டு. மனிதன் விதியினிடமிருந்து விலகும்போது, ஈசன்பார்வையில், உலக நன்மையில் ஐக்கியமடைகிறான். எந்த நிலையிலும், சிறுதுரும்பும் சுழன்று வந்து சேவை செய்யும்.

உலக சிருஷ்டியின் அழகையும் ஒருமைப் பாட்டையும் கண்டே நான் அதிசயப்படுகிறேன். உலகமே படக்காட்சியாக மாறி மாறி யமைகிறது. வான வில்லும், ஆகாசவளைவும், நீல வான் மூடியும், கண்ணின் நுட்பத்தால் நாம் அறியக்கிடக்கின்றன. உலக ஒற்றுமைக்கு நாம் திருப்பணி எழுப்புவோம்; ஒவ்வொரு அணுவும் சேவை செய்கிறது. குப்பையில் குண்டுமணிபோல் மின்னுகிறது இந்தப் பேருண்மை. இயற்கையில் இன்பமும் இசைச் சிறப்பும் திகழ்கின்றன.

விதி

உலக சிருஷ்டியின் கட்டாய அமைப்பில், எல்லாம் ஒருமைப்பாட்டை நோக்கியே அமைந்திருக்கிறது; வாதியும் பிரதிவாதியும், நண்பனும் எதிரியும், பிராணியும் கிரகமும், உணவும் உண்பவனும், ஒரேதன்மையில் தான் ஆக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். இயற்கையில், தத்துவமும் தெய்வத்தன்மையுமே கலந்து மிளிர்கின்றன; பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்ட நாம், ஏன் பஞ்சபூதங்களின் செயல்களைக் கண்டு நடு நடுங்கவேண்டும். விதியின் முடிவில், மனிதன் எதையும் தனக்கு வருவதைத் தடுக்கமுடியாது; வேண்டாததை வருவிக்க முடியாது. "வருந்தி அழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமி னென்றாற் போகா"—இதுவே உண்மையான முடிவு. விதியின் சட்டம் மனித அறிவிற்கு மேற்பட்டது; அதை மனிதன் அறிய முயல்வது வீண் முயற்சியாகும். ஆனால் மாசற்ற நெஞ்சத்தாருக்கு, விதி துணையே செய்யும், இன்னல் விளைவிக்காது; களங்கமற்றவர்களுக்கு, விதியே கடவுட் கலப்பாகத் தோன்றும்.

*

வால்டர் பேடரும் வசன நடையும்

1888-ல் வால்டர் பேடர் (Walter Pater) என்பவர் நிறைந்த ஆராய்ச்சியுடன், வசன நடையை எப்படி ஒரு ஆர்வம் நிறைந்த ஆசிரியன் சிருஷ்டிக்கிறன் என்பதைப் பற்றி "Essay On Style" என்ற விமர்ஸன வியாசம் எழுதியிருக்கிறர். வெளியே அனுபவித்த பொருள்களையும், அதனல் ஆசிரியன் உள்ளத்தில் நிறைந்து எழுந்த உணர்ச்சிகளையும், உணர்ந்தவாறு, நடைச் சிற்பமாக உதயமாகின்ற வசன நடையே உண்மையைத் தாங்கி நிற்கும் நடையென்றும், அதுவே ஆத்ம வெளியீடாக எழுந்த நடையென்றும், மற்ற நடைகள் எல்லாம் போலி நடைகளென்றும் உணர்ந்தவர் வால்டர் பேடர். அவர் 31-பக்கங்களில் எழுதியுள்ள வியாசத்தில், சுவை நிறைந்த சில பகுதிகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகிறேன். பிரெஞ்சு மொழி நிபுணரான பிளாபர்ட் (Flaubert) என்பவர் மிக அருமையாக வசன நடையின் சிறப்பைப் பற்றி எழுதிய கருத்துக்களைத் தழுவியே, வால்டர் பேடர் ஆங்கிலத்தில் தனது விமர்சனத்தை விரித்திருக்கிறர்:

ஆசிரியரின் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் ததும்பி அரும்பி மலர்ந்து சொற்றெடராக எப்படி மாறி அமைகின்றன ? உணர்ச்சி யலையினின்று துமிதெறிக்கும் போது, சொற்சிகரம் வளருகின்றது.

உலகத்தில் எக்கலை வளர்ச்சிக்கும், உள்ளுறையும் ஒற்றுமையும், புற வேற்றுமைகளுமே காரணம். கவிதைக் கும் வசனத்துக்கும் நடை வித்தியாசம் உண்டு என்பதை மறப்பதரிது. ஒவ்வொரு கலைப்பகுதிக்கும் தனித்தனி

---

* Walter Pater's Essay on Style

அழகுகள் உண்டு. காவிய இலட்சணம் தனியே இருந்தாலும், அதிலும் சில சுதந்திரங்களை வசனமும் அனுபவிக்கக்கூடிய சந்தர்ப்பம் நேர்ந்தால், அதை அழகேறும் சிகரத்தினின்று தடுக்கக்கூடாது. வசனம் (Bacon) பேகனுக்கு நிறத்துடன் மிளிர்கின்றது; (Livy—Carlyle) லிவி, கார்லைல் இருவருக்கும் படம் பொறிக்கின்றது; (Cicero, Newman) சிசரோ, நியூமன் இருவருக்கும் சங்கீத அலையாக அமைகின்றது; (Plato-Michelet-Sir Thomas Browne) பிளேடோ, மிஷிலே, சர் தாமஸ் பிரௌன் இம் மூவருக்கும் உள்ளொளிச் சிகரமாய் விளங்குகிறது; (Milton, Taylor) மில்டன், டெய்லர் இருவருக்கும் உயர்ந்த அலங்கார விஸ்தரிப்பாய்ப் பின்னி வளருகின்றது.

வசன நடை வெளியுலக அனுபவத்திற்குத் தேவையான நடையே தவிர, காவிய நடையின் இலட்சியப் பலனை அடைய முடியாது என்று சொல்லுவது சுத்த தவறு. அதுபோல், கவிதையும் வசன நடையின் எல்லைக்குள் நுழையக்கூடாது என்று கூறுவதும் தவறே. (Tennyson) டெனிசனைப்போல் வெளியுலக விஷயங்களை எழுதவும், (Browning) பிரௌனிங்கைப்போல் மர்ம நடையில் எழுதவும், (Wordsworth) வேர்ட்ஸ் வொர்த்தைப் போல, பழகிய விஷயங்களைப் புது நடையில் பக்குவப் படுத்தி எழுதவும், காவிய முறை பயன்படும் என்பதில் ஐயமில்லை.

கவிதையில் அழகுச் சுரங்கம் மலிந்து கிடப்பது போல், வசனத்திலும் அழகுக்கூட்டம் நிறைவதுண்டு. கவிதையில் வசன நடையின் குணம் எந்த அளவு நிறைந்திருக்கிறது என்று பார்ப்பதுபோல், வசனநடையிலும் காவிய இலட்சணம், கற்பனை சக்தியின் அலைச்சிகரம் தோன்றுவதை யறியவேண்டும். வசனநடையில் காவியக் கற்பனை கூடாது என்று தள்ளுவது சுத்த தவறு. (Dryden) டிரைடன் தன் காலத்தில் ஏற்பட்ட காவிய வசன வேற்றுமைக்

குழப்பத்தைக் கண்டுபிடித்து, நுட்பமாய்க் கண்டித்திருக்கிருர். ஆனுல் அவருடைய வசன நடையின் அழகலே, காவிய சொரூபத்தை மங்கவைத்து விட்டது. வசனத்தில் அவருடைய கவிதை புஷ்பிக்கின்றது; காவியத்தில், வசனம் குறுக்கிடுகின்றது. ஒவ்வொரு குறை வந்தாலும், டிரைடனின் வசன நடை உண்மையைச் சுத்தமாய்க் காக்கின்றது. நல்ல வசன நடை உண்மைக் கவசமே யாகும். பின்னர் காலம் மாற, வசன நடை மாற்றமடைய வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. காவிய நடையின் வேகம், வேர்ட்ஸ்வொர்த்திஞல் உயர்ந்தோங்க ஆரம்பித்தது. தளே, சீரின் வேற்றுமையைத் தவிர, காவியத்திற்கும் வசனத்திற்கும் எவ்வித வேறு வித்தியாசமும் இல்லையென்றும், இரண்டிலும் கற்பனே நுழைவதில் தோஷமில்லே யென்றும், (De-Quincey) டிகுவென்ஸி வகுத்ததுபோல் இலக்கியம் இரு வகைப்பட்டது—சக்தி இலக்கியம், அறிவிலக்கியம்; சக்தி இலக்கியமே, எழுதுவோனின் கற்பனேக் கண்ணுடியாகப் பிரதிபலிப்பது என்றும், காவிய நடை வசனநடை என்று பிரிப்பது முற்றும் தவறு என்றும் டிகுவென்ஸி கூறுகிருர்.

ஆகையால், கவிதைநடை, வசனநடை என்ற வேற்றுமையை வேர்ட்ஸ்வொர்த்தின் அனுமதியுடன் ஒழித்துவிட்டு, உயர்ந்த நடையின் அம்சங்களே ஆராய்வோம். கற்பனே கலந்த விஷயத்தில், நடை சிகரமேறுகிறது; கற்பனேயற்றதில் நடை ரசாயன முறையைத் தொடர்ந்து, உண்மையை வெளியுலகத்தில் கண்டவிதமே, தோற்ற மாற்றமில்லாமல் பேனு முனேக்கு வருகின்றது. ஆனுல் சரித்திராசிரியர்களும், சரித்திரத்தில்உள்ள உண்மையைத் தான் சொல்லுகிருர்கள் என்ருலும், தங்கள் அபிப்பிராயத்தை உறுதிப் படுத்தும்போது, நடை காவியச் சிறப்பையடைகின்றது. (Gibbon) கிப்பனின் சரித்திர ஆராய்ச்சியில், கற்பனேச் சிகரங்கள், மொழிச் சிகரங்களேப்பெற்று மிளிர்கின்றன. லிவி, டாசிடஸ், மிஷலே, வெளி விஷயங்களேக் கண்ணிற்பட்ட அளவு மொழிபெயர்ப்பவர்களல்ல.

கண்ணிற்பட்ட விஷயங்கள் கவிதைச் சிகரமேறி, கலைக் களஞ்சியமாக ஜொலிக்கின்றன. ஆசிரியரின் அனுபவக் கற்பனையலைகளில் கலந்த வெளித்தோற்றங்களே கலைத் தோற்றங்கள்! எக்கலைக்கும் உண்மை குறையக் கூடாது; உண்மை அழகுச் சிகரமேறிக் கலையாக மலர்கின்றது. உண்மையே அழகின் ஊர்ஜிதமான கால நிழல். மணிவார்ப்பிலும், வீண் ஒலி மணியாக மாத்திரமல்லாமல், கலையொளி நிறைந்த மணியாகச் சமைத்தலே சாலச் சிறந்தது; இதுவே கலையின் நாவாக விளங்கும்.

இலக்கிய ஓவியச் சிறப்பு, எழுதுவோனின் உள்ளத்தின் எதிரொலியாகப் பிரதிபலிக்கும். ஓவிய மணியெல்லாம் காவிய மணியாக ரீங்காரஞ் செய்ய வேண்டும். காவிய ரசம் நிறைந்த கற்பனைக் களஞ்சியமாய் விளங்கும் நூதன வசன நடை, பல நுட்பமான துளைகளையுடைய நாதஸ்வரக் குழலாகும்: சகல சுரங்களும் பேசுமியல்புடையது. சேர்த்தோ, பிரித்தோ, வருணித்தோ, உற்சாகமுடனோ, அல்லது சோக ரசத்துடனோ பாடும் இயல்புடைய குழல், சிறந்த வசன நடையேயாகும். அதுவே உள்நாத ஊதி. ஒவ்வொரு சப்த அலையும் நாத கீதத்துடன், அந்நடையில் ஒலிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சிசரோ, மிஷிலே, நியூமன் போன்றவர் இவ்வின்ப நடையை விளக்கும் ஆற்றலுடையவர்கள். அறிவின் நிறைவைப் பெற்றவனே, அந்த உன்னத வசன நடையை எழுதவல்லோன்; அறிவுக் கடலில் குளித்து, கலையின் அலையைக் கவ்வித்துள்ளிக் குதித்துக் கரைக்கு வருபவனே, கற்பனை நிறைந்த வசன நடை எழுத வல்லவன்; இலக்கிய உள்ளம் படைத்தவனே, இலக்கண வரம்பையும் மீறி, அழகை ஆவேசத்துடன் சமைக்கவல்லவன்; உள்ளொளியற்றவன், அறிவின் சுமைக் கல்லேயாவான்; இலக்கண முட்கள், உள்ளொளியற்றவனை முறியடிக்கின்றன. வசன நடையில் கற்பனைச் சிகரமேறுவோன், சாதாரணமாக அதில் சிற்பியின் சிலையோவியத்தையே காண்கின்றான். சாதாரண சொற்பாறை

களில் அவன் மோதி மறையான்; பழய துவண்ட கருகிய சொற்களில், தன் கருத்தையடையான்; நூதன காவிய ஓவியச் சிலிர்ப்பைக் கொடுக்கக்கூடிய சொற்சிகரத்தையே நாடி, கற்பனைத் தோற்றத் தொனி அலைகளைப் பாஷையின் காவிய உள்ளத்தில் நிறைத்து நிறைத்து, எக்கரையிலும் இன்பம் நுகருவான். அவனே வசன நடையில் இலக்கியச் சிறப்பைப் படைத்தவனுவான்; கலைவல்லோனின் கருணைச் சொல்லடுக்கே, அவன் மனச்சிறப்பை விளக்கும். அவன் மனோவிசாலத்தைப் பாஷையும் பெற்றுப் பெருகும்; சொற்கள் புதுவர்ணம் தீட்டப்பெற்று, நவ நவ அலங்காரம் கிரிக்கும் சக்திபெற்றுப் பொலிகின்றன. சொல்லகராதியின் எல்லைமீறி, அகராதியின் அழுக்கையும் செருக்கையும் போக்கி, அகராதியை அதிரூபலாவண்யத்துடன் புதுப்பிக்கின்ருன்.

மொழிபெயர்ப்பில், இரு பாஷைகளின் வேற்றுமை முட்களை எவனும் உணர்வான்; முதனூல் முற்றும் சுத்தமாயிருந்தால், மொழிபெயர்ப்பும் அதை உண்மையாகப் பின்பற்றும்; முதனூல் சொற்கேடடைந்திருந்தால், மொழிபெயர்ப்பும் முரணுகவே முடியும். கண்ணுடித்தாளில், பென்சில் படத்தை நெருங்கி வரைவதுபோல், முதனூலும் மொழிபெயர்ப்பும் ஒத்து ஓடும். எழுதுவோனின் மனச்சாயலே, அவனது தெளிந்த நடை; புதுமை நடையே இதய ஒலி. (Johnson) ஜான்ஸனின் இங்கிலீஷ் அகராதி தெளிவுக்குப் பொருந்தாது. ஆசிரியன் தனது அரிய சொல்லால், மனப் படத்தை விரிக்கவேண்டும். பாஷையின் மர்மத்தை யறிந்து, எழுதுவோனின் மனத்தைச் சொல்லில் வடிக்கின்ருன். பாஷையின் ரகஸ்ய நுட்பத்தை உணர்ந்து, பாஷைக்கும் நூதன சக்தியை வளர்ப்பவனே, நூற்சிறப்புடையோன். சென்ற நூற்ருண்டின் பாஷையின் சொற்குற்றங்களையும், சொல்லின் முட்கோபுரங்களையும், வேர்ட்ஸ்வொர்த்து (Wordsworth) இடித்துத் தகர்த்து, தனக்கென்று நூதன ஓவிய

நடையைத் தேடினர். சொல் வெற்றியே ஓவிய வெற்றி; பின் நூற்றுண்டிற்குப், நடைக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமைந்தார் வேர்ட்ஸ்வொர்த். இலக்கியச் சிகரத்தில் அறிவின் பூர்த்தியும் துலங்கி நிற்கின்றது. நிறைந்த எண்ணத்தின் நிறைந்த ஒளியே, நிறைந்த நடையாகும்.

சிறு சொற் கூட்டங்களும், நீண்ட சொல்லேயும் சேர்ந்தால், பாஷை நிறைந்து உண்மை ஒலிக்கின்றது; சாக்ஸன் (Saxon) சிறு சொல்லும், லாடின் (Latin) நீண்ட சொல்லும் கலந்தால், நடை உயர்ந்து மலர்ந்து உருவடையும். கருத்தும் சொல்லும் கவ்வுமாறு, நடையை சிருஷ்டியில் பூட்டவேண்டும்; இரண்டுக்கும் மத்தியில், அதிக வெளியிருந்தால், எண்ணம் உருக்குலேந்து விடும். 'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்'—என்பதே உண்மை நடை. எண்ணச் சிதைவில்லாமல், சொற் சோர்வில்லாமல், நடையைத் தோற்றுவிக்கவேண்டும். தன்னடக்கம், சொல்லடக்கம், நடைக்கு ஒரு அழகைக் கொடுக்கின்றன; அதுவே உண்மைச் சிகரம், அழகின் வெற்றி.

வெளியுலகச் சந்தையினின்றும், தன் மர்ம நடையில் சாந்தியடைய மறைவதற்கு முயலுவான், நூல்வல்லோன். அதுவே தனிமையில் இனிமை, தனிமையின் உள் வெற்றி ஜோதிச் சுரங்கம். மில்டனின் காவியம் (Lycidas), தாக்கரேயின் எஸ்மண்ட் (Esmond) நாவல், நியூமனின் சர்வ கலாசாலேயின் கருத்து (Idea of a University)-இந்நூல் நிலேயங்களில் அந் நூற் பெரியார்கள் தேடுவதும் தனிமையின் இனிமையே! சொல்லோவியம் அமையும்போது, வீண் சொற்கள் குவியாமல், நடையின் கட்டிடத் தேவையின் ஒவ்வொரு சிறுபாக அமைதிக்கும் அவசியத்திற்கும் இன்றியமையாத உண்மைச் சொற்களே தங்கி, நெருங்கி உரம் பெறுகின்றன; மேற் சொற்கள் வேண்டாதவையே. ஷில்லர் சொல்லுவதுபோல், எதை வேண்டாமென்று ஒதுக்குகிருனே, அதனின்றே ஒரு ஓவியக்காரனின் ரகஸ்

யப் பயிற்சி புலனுகின்றது. தொட்டெழுதுவதைத் தொட்டெழுதி, விட்டெழுதுவதை விட்டெழுதினுல், அவன் ஓவியப் புலமை வியக்தமாகத் தெரிகிறது; உண்மை உள்ளிருந்து ஒளிவிடுகிறது. பயனற்ற சொற்கள் பயனற்ற எண்ணங்களைப் புகுத்தும்; அலங்கார ஜடைத் தொங்கல்கள் எல்லாம், உண்மையைக் குறைக்கும், உண்மையை மறைக்கும், உண்மையைச் சிதைக்கும். (Flaubert) பிளாபர்ட் எழுதிய "Madame Bovary," ஸ்டெண்டால் (Stendhal) எழுதிய "Le Rouge et Noir" போன்ற நூல்களில் தேவையற்ற அலங்காரத் தொங்கல்கள் கிடையா. அவசியத்தையும் உபயோகத்தையும் உள்ளுணர்ந்தே நல்ல நூல்களின் நடை உதயமாகும். சொற்குப்பை வளராது ஒழியும். அழகையும் உண்மையையும் நுட்பமாய் விளக்கும் சிகரங்களே வளர்ந்து மின்னும் கலையின் விநோதம் இதுவே. கல் செதுக்கிப் பட்டையடிப்பவன், ஆரம்பத்தில் கரடு முரடான நிலையுள்ள கற்குகையினின்று, கடைசியாகத் துளைத்த தூசியை ஊதி விலக்கும் வரை, கலையின் வளர்ச்சியில் ஈடுபட்டு வளர்கின்முன். இருண்ட கற்குகையினின்று கலையின் ஜோதி உதயமாகின்றது என்று மைகேல் ஏஞ்ஜலோ (Michel Angelo) அனுபவித்து, அந்த ஆத்ம உணர்ச்சியை விமர்சனம் செய்கின்முர். கற்பாறையின் அடிவேரின் வர்ண ஜொலிப்புப்போல், சொற்பாறையிலும் அடிவேர் வரை அழகு ததும்பி ஜொலிக்கின்றது; ஆனுல் அது சிற்பியின் அகக்கண்ணுக்கே புலப்படும். நூல் வல்லோனின் பேனு முனையில், சொல்லின் அழகுச் சுமை வந்து குவியும். உண்மை நிறைந்த சொல்லணியையே கவனித்து அவன் பருகிவிரிப்பான்; சோம்பற் சொற் கூட்டம் அவன் பேனு முனைக்கு அணுகவே அணுகாது. பாஷைக்குப் பிறவியில் ஏற்பட்ட உள்ளழகும், உள்ளணியும் அறிவில் ஊறிய பண்டிதருக்குச் சுலபமாய்ப் புலனுகும்.

புஷ்பங்களுக்கு, அழகும் ரூபமும் தோன்றும்போதே விளைவதுபோல, பாஷைக்கும் தோன்றும்போது சில அழகம்சங்கள் உண்டாகின்றன. நல்லமொழி நடைக்கு இந்தக் கல்வி மணமும் அவசியமே யாகும். கலையில் தோய்ந்தவன் அதிகச் சொல்லை விரும்பான்; கட்டிடச் சிற்பிபோல், துவக்கும்போதே முடிவின் அழகையும் அவசியத்தையும் நன்கு ஆராய்ந்து தீர்மானிப்பான்; பின்னேவியப் பூர்த்தியும், முற்கட்டில் நுகர்ந்து கொள்ளு வான். வாக்கியத் துவக்கத்திலே முடிவின் லட்சியத்தை, வாக்கியக் கட்டின் ஒவ்வொரு பாகத்திலும் மறவாது பார்த்துச் சிறக்க உறுதி செய்வான். அதுவே மொழியின் மன வளர்ச்சியாக, ஊறி வளர்வதாகும். ஒரு நுட்பமான வேதாந்தி டீன் மான்சல் (Dean Mansel) என்பவர் இலக்கியச் சிறப்புடன், உருக்கமான நெருங்கிய அழகிய நடையில், மன ஒருமையை விளக்கும் ஓவிய நடையை எழுதிக்காட்டி வெற்றி பெற்றிருக்கின்ருர். சொல்லும் கருத்தும் செவ்வனே மனப்பற்ருேடு இணைக்கப்பட்ட சித்திரம் என்பதை நடையழகில் முழுமொழியில் நிரூபித் திருக்கின்ருர். சொல், வாக்கியம், முழு வியாசம், பாட்டின் பூர்த்தி—இதை நாடி ஒவ்வொரு அம்சமும் நிறைவேற்றப் பட்ட நடையையே, நடையழகு என்று கருதலாம்.

நடைக்கு ஜீவிய சாகஸம் வேண்டும்; உடையாது வள ருஞ் ஜீவிய மொழிஜோதி வேண்டும். நீண்ட பின்னப் பட்ட வாக்கியத்துடன், சிறுசூடான வாக்கியமும் கலந்து, நடையழகைப் போற்றக்கூடும்; சிறு வாக்கியமே, குழந் தையின் தேவையைச் சுட்டிக்காட்டும் சக்தி வாய்ந்தது. ஒரு சிறு சொல்லின் விளக்கமாய்ப் பூர்த்தியாகும் நீண்ட வாக்கியமும் அழகுவாய்ந்ததே. எண்ணச்சுடரை எடுத்துக் காட்டும் சுத்தமான சொற்ருெடரைச் சுத்தப் படுத்திப் பயன்படுத்திக் கொள்ளுவதே, இலக்கிய நடையின் ஓவியச் சிகரமாகும். சொல்லைத் துடைத்துக் கருத்தை மொழியில் உண்மை விளங்க அலங்கரிக்க வேண்டும். சுத்தமான

நடையிலும் இயற்கை இல்லம் கட்டிய ஆசிரியன், நூலின் உண்மையை மிக நுட்பமாக விளக்கிக்காட்டி நிற்கின்றான். மொழிப் பயிற்சியே, காவிய ஓவியக் கட்டிடப் பயிற்சியாகும். கற்பனைக் கட்டிடமே காவியக்கட்டிடம்; அதுவே மொழி அரண்; சொற் சிகரமே காவியச் சிகரம்.

மொழியின் சாயலில், மனமும் ஆத்மாவும் கலந்துபரவுகின்றன. மனமேற்றமுள்ள காலத்தில், (Blake) பிளேக் என்ற கவிஞன், ஆத்ம விமர்சனக் கவியை எழுதிப்போந்தான். சந்நதப் பிரளயத்தில், ஆத்மச் சொல் அரும்பி மலர்கின்றது. அதுவே உடன் பிறந்த உள்ளுணர்ச்சிச் சொல்லாகும். பிறரின் ஊனக் கண்ணுக்குக் காரணம் புலனுவதில்லை; கவியின் அகக்கண்ணுக்கு, ஆத்ம விமர்ஸனம் சொல்லலையைக் காட்டுகின்றது; மத சம்பந்தமான பிரசங்க வெள்ளத்திலும், ஆத்மச் சொல் பிறந்து புலனுகின்றது; அதுவே சந்நத விமர்சனம், உள்ளொளியின் தெளிவு; ஞான ஊற்றின் பெருக்கு. ஆத்மச் சொற்களில் ஒரு மின்சார ஓர்மை மிளிர்கின்றது. (Bible) பைபிளிலும், வேதப் புத்தகங்களிலும், ஆத்ம அலைகளின் விமர்சனச் சொற்களே ஒளி வீசுகின்றன; இதுவே சுடர் நடை. கலை விளக்கத்தில், இலக்கிய வளர்ச்சியின் ஆத்ம பிம்பத்தை அறிவோர் சிலரேயாவர்.

இலக்கிய வளர்ச்சியில் தியாக மூர்த்தியாக விளங்குகிறார், கஸ்டேவ் பிளாபர்ட் (Gustave Flaubert) என்பவர். இருபத்தைந்தாவது வயதில் அவர் ஒரு பெண்ணுக்கு எழுதிய கடிதத்தில் ஆத்ம இலக்கிய விரிவையே வற்புறுத்துகின்றார். இலக்கிய அழகில் இன்பங் குளிப்பதே, சிறந்த ஆனந்தம் என்கின்றார். அவரைப் பற்றி மற்றொரு நண்பர் எழுதுவதில், சிலமொழி ரகஸ்யங்களை அவர் எப்படிப் பெற முயல்கிறார் என்பதைப்பற்றி வருணிக்கிறார்; பிளாபர்ட் என்பவர் விடா முயற்சியால், நிகரற்ற சிகரத்தையே நாடி யுழைக்கின்றார்; ஓர் ஒப்பற்ற தனி அழகு நிறைந்த

பரிபூரணச் சொல்லையே தேடியலைந்து அடைகின்றார். முயற்சியின் முதிர்ச்சியால், தன் ஆத்ம மோனத்தில் உண்மைச் சொல்லைப் பற்றிப்பிடிக்கின்றார். ஓர் கருத்துக்கு ஓர் சொல், ஒப்பற்ற ஒரே வார்த்தை—இதுவே நடையின் பிரச்னையை முடிவில் தீர்ப்பதாகும். கருத்தும் சொல்லும் கவ்வியணைவது—காதற் கனலுடன் கூடி ஜொலிப்பது—இதுவே சொல்லன்பின் முடிவு. (Blake) பிளேக்கின் கவிதையில், கருத்தும் சொல்லும், ஆன்மாவும் உடலும் போல் கூடிக் குதிக்கின்றன. கருத்தும் சொல்லும், பிரிக்க முடியாத ஓர்மையைப் பெற்றிருக்கின்றன. எண்ணமும் மொழிக் கவசமும் பிரித்தால் உடையும், நொருங்கும். சிலருக்கு நடை விரைவில் தோன்றும்: அது உட்பிரவாகத் தோற்றம். சிலருக்கு நடை மெதுவாகவே அமையும். ஆனால் நடைப் பிழையைக் கண்டு திருத்தி, மொழி ஜோதியைச் சிருஷ்டிக்க வேண்டும்.

ஒரு சொல்லின் சிறப்புத் தோற்றம், இலக்கிய உள்ளத்திற்கே நன்கு புலனாகும். "என் காது சுத்தமாக சப்த அலைகளைப் பிடித்தாலும், அந்த கீதத்தை வீணையில் திரும்ப அமைக்க சக்தியற்றவன்போல் தவிக்கின்றேன்" என்று நடைபழகும் பிளாபர்ட் (Flaubert) உணர்ச்சியுடன் கூறுகின்றான். உள்ளொளியினின்று ஒருவன் எழுதினால், படிப்பவனுக்கும் அகக்கண் அருள்வேண்டும்! உள்ளொளியே வெளிமொழியாக, மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது. அதுவே சந்தச் சிகரம்: உட்பிரவாகமே காவிய கங்கையாக உதிக்கின்றது. பிளாபர்ட்டின் தன்னடக்க நடை, உண்மை யழகை இரட்டித்துக் காட்டுகின்றது. "நடையே மனிதன்" (Style is the man) என்ற இலக்கியப் பழமொழி இவ்வாறே தோன்றிற்று. எவ்வகையிலும் நடையின் இலட்சியம், உண்மை விளக்கமே. மனப்படம் மொழிப் படமாகப் பிரதி பலிக்கின்றது.

சங்கீதமும் வசன இலக்கியமும் வெவ்வேறு கலைப் பகுதிகளானலும், சங்கீதச் சிகரத்தில் இலக்கிய விமர்சனம் ஐக்கியமடையலாம். நற்கலை பெருங்கலையாகாது; விஷயத்தில் வித்தியாசமுண்டு. விஷயச் சிறப்பால், தாக்கரே (Thackeray) எழுதிய 'எஸ்மண்டு' (Esmond), அவரே எழுதிய 'வானிடி பேர்' (Vanity Fair) என்னும் நாவலைவிடச் சிறந்தோங்கியது. டிவைன் காமெடி (Divine Comedy), சுவர்க்க நீக்கம் (Paradise Lost), ஏழை படும்பாடு (Les Miserables , வேதப் புஸ்தகம் (Bible)—முதலிய உயர்ந்த நூல்கள், பெருங்கலையாக விளங்கிப் பொலிகின்றன. இவ்வுலகில் நமது வாழ்க்கையின் சிறப்பை வளர்க்கும் தன்மையிருந்தால், தாந்தேயின் (Dante) நூல் இறைவனின் சிருஷ்டிச் சிறப்பையும் கூட்டும். மனித வாழ்வில், ஆன்மப் பொக்கிஷமாய் விளங்குவது, இலக்கிய மொழிச் சிகரமேயாகும். சொற்சிலம்பாடுவோன், சொல்லின் செல்வனே.

★

டி. கே. சி. யும், கோலரிட்ஜும்

இலக்கிய ஆராய்ச்சி என்பது ஒரு விளையாட்டான காரியமல்ல. ஒரு அருட்கவி பிறப்பது போல, ஆராய்ச்சி யாளனும் உண்மையாகவே அருளுடன் பிறக்கிறான். கல்லூரிப் புலமையில், கவிதையோ ஆராய்ச்சியோ உதய மாகாது;பழைய பாடத்தை வேகமாய் ஒப்பிக்கும் திறமை, வரண்ட திறமைதான் ஏற்படும்; உண்மைப் பயிற்சி ஏற்படாது. பள்ளிப் படிப்பில், அதுவும் தற்காலப் படிப்பில் ஆசிரியனும் மாணுக்கனும் பழைய பாடத்தை ஞாபக சக்தியிலிருந்து யந்தமாய்க் கயிறுகட்டி யிழுப்பதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம்.

இலக்கிய ரஸனையில் பயிற்சியுள்ள ஒருவன், தான் ஆராயும் காவியங்களின் நயங்களையும் குறைகளையும் எடுத்துக்காட்டும் ஆற்றலுடையவன்; மேடு பள்ளங்களைக் கண்டு, கலையின் குறைகளை விலக்கவும் வழிதேடுவான். இலக்கியங்களின் மூலத்தை நன்கு ஆராய்ந்து, ஆசிரியனின் இதையபாவத்தையொட்டி, சொற்களின் நயங்களையும் குறைகளையும் அபூர்வமாக அலசிப் பார்க்கும் ஆற்றல் அவனுக்கு விசேஷமாகஉண்டு. காவியக் கட்டுக்கோப்பை யும், கலையின் மலர்ந்த உணர்ச்சிக் கோபுரத்தையும், மனோபாவத்தால் அவன் உணர்கிறான். உணர்ச்சியற்றவன் இலக்கிய ஆராய்ச்சி செய்ய முடியாது.

இப்போது சிலர் புலமைச் சுமையைக்கொண்டு, ஆராய்ச்சி நூல் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் பேரைக் குறிப்பிட நான்விரும்பவில்லை. விறகுக்கட்டுகள் போல, சொற்கள் வந்து விழுந்திருப்பதைத் தவிர, அவ்

வகையான நூல்களை ஆராய்ச்சிஎன்று நாம் உண்மையாக ஒப்புக்கொள்ளமுடியாது. புலமைக்குப்பையில், ஆராய்ச்சி ஒளி பிறந்துவிடாது.

ஆனால் தமிழ்இலக்கியப் பொக்கிஷத்தையே சாதாரண ஜனங்களும் அறியுமாறு செய்த பெரியார்-ஆராய்ச்சி நிபுணர் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள்தான் என்று நான் துணிந்து கூறுவேன். அவர்களை நான் ஐரோப்பிய இலக்கிய ஆராய்ச்சி மேதை (Coleridge) கோலரிட்ஜூடன் ஒப்பிட்டு மதிக்கிறேன். கோலரிட்ஜ் ஆராய்ச்சி மன்னர்; ஷேக்ஸ்பியருக்கு அவர் செய்திருக்கும் ஆராய்ச்சி அபூர்வமானது; பல ஆராய்ச்சி உண்மைகளைக் கொண்டது. அவர் எழுதியிருக்கும் 1. Lectures On Shakespeare 2. Biographia Literaria-என்ற இரண்டு நூல்களும் இலக்கிய ஆராய்ச்சிச் சுரங்கம். இந்த ஆராய்ச்சிச் சுரங்கத்தில், சிந்தனைத் தங்கமும், உணர்ச்சி பவனங்களும் அகப்படுகின்றன. சொற்கள் கவிதைமணக்கின்றன; உணர்ச்சியை அள்ளிக் கொட்டுகின்றன; ஆராய்ச்சியின் இரகஸியங்களைக் கண்ணாடி போலப் பிரதிபலிக்கின்றன; கவிதைக் கடலின் எல்லை தெரிகிறது. அதேபோல திரு. டி. கே. சி. அவர்களின் ஆராய்ச்சியும், கலையின் உள்ளத்திலும் ஆழமாய்ப்பாய்கிறது. கம்பன் எழுதினால் என்ன, முத்தொள்ளாயிர ஆசிரியர் எழுதினாலென்ன, கலையின் கோபுரம், காவிய மாளிகை மங்காமல் தெரிகிறதா—இது தான் அவருடைய முதல் கேள்வி. இலக்கிய உருவம் (Literary Form) சிதறாமல், அலங்காரமாகக் கலையின் உண்மைத்யை தாங்கிக்கொண்டு ரஸிகன் உள்ளத்தில் விளையாடுகிறதா? இது ஒரு நல்ல கேள்விதான்—நுட்பமான கேள்வி! இந்தக் கேள்வியையும், ஒரு ஆராய்ச்சி நிபுணன் தான் உணர்ந்து கேட்கக்கூடும். இது ஒரு ஆனந்தமான கலைக் கேள்வியல்லவா? கவிஞனின் சிருஷ்டி யுள்ளம் சாதாரணமக்களின் இதயத்தில் பிரதிபலிக்கிறதா? அப்படியானால்; எப்படி? கலையில் உலகு முழுதும், ஒரு பொது

மனநிலை எங்கும் சுழல்கிறதல்லவா? (Cosmic Consciousness.) இதைத்தான் இரஸிகன், உண்மை ரஸிகன் உணர்கிருன்—அதன் மர்மங்களையும் உள்ளத்தெளிவுடன் கண்டு பிடிக்கவும் முயல்கிருன்.

"முத்தொள்ளாயிர" ஆராய்ச்சி, டி. கே. சி. அவர்கள் செய்திருப்பதும் மிக நுட்பமான ஆராய்ச்சி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. 2700 பாடல்களில், மறைந்தன போக, மிஞ்சிய 108 பாடல்களில், பாடம் சிதைந்து இலக்கணப் பொருத்தமில்லாமலுள்ள 9 பாடல்கள் நீங்கலாக 99 பாடல்களையும் எவ்வளவு நயமான முறையில், மூலத்தின் அழகு மங்காமல், டி. கே. சி. அவர்கள் ஆராய்ந்திருக்கிருர்கள், பார்த்தீர்களா? எனக்கொரு சந்தேகம். முத்தொள்ளாயிர ஆசிரியரே, இரண்டாயிரம் வருஷங்களுக்குப்பின் டி. கே. சி. யாக மீண்டும் வந்து பிறந்திருக்கக் கூடுமோ?—என்ற எண்ணம் என் நெஞ்சில் ஆர்வத்துடன் உதிப்பதுண்டு. இதைக்கண்டு சிலர் வியக்கலாம். நான் சொல்லுவதெல்லாம், ஆராய்ச்சியில் மூலத்தின் கலாதீபத்தை எடுத்து விளக்கும் அபூர்வ ஆற்றலுடைய ரஸிகர், முதனூலாசிரியரின் இதயப் பண்பையும் கவிதை ரேகையையும் ஆழ உணர்ந்தவராகவேயிருக்கவேண்டும். இதுவே டி. கே. சி. யின் கவிதையாராய்ச்சி—இதய மொழி மர்ம விளக்கம்.

ஆங்கில ஆராய்ச்சி நிபுணர் கோலரிட்ஜ் (Coleridge) ஷேக்ஸ்பியரின் நாடகக் கலையையும் கவிதைப் பண்பையும் பற்றிச் சொல்லும்போது, மிக நுட்பமாக ஆராய்ந்து கூறுகிருர்: "உண்மைக் கதையில், கவியின் இதயம் மலர்கிறது; கற்பனை மலர்கிறது; மொழி மலர்கிறது; உணர்ச்சி மலர்கிறது; சிந்தனை புஷ்பித்து மணம் வீசுகிறது." இப்படி ஷேக்ஸ்பியரின் கலை சம்பந்தப்பட்ட வரையில், அவர் கலைக் கடலிலும் கவிதைக் கடலிலும் மூழ்கி முத்தெடுத்துக் காட்டுகிருர். அதே முறையில்தான், நமது இலக்கிய ரஸிகர்

டி. கே. சி. யும், கோலரிட்ஜும்

டி கே. சி. யும் தமிழ்க் கவிதையின் பண்பைக் கண்ணுடி போலக் காட்டுகிருர். "கம்பன் யார்?"– "இதய ஒலி"– "முத்தொள்ளாயிரம்"– இம் மூன்று நூல்களிலும், ஆராய்ச்சியின் உன்னதமான தத்துவங்கள் மின்னிப் பொலிகின்றன. சொற்களேயும் இலக்கணத்தையும், முன் பின் தொடர்பின்றி வேட்டையாடும் ஒரு பிடிவாதமான மனநிலேயுள்ள சில பண்டிதர்கள் இத்தகைய ஆராய்ச்சியைச் செய்ய முடியாத நிலேயில்தான் இருக்கிருர்கள். பண்டிதர்கள் எழுதும் சாதாரண வாக்கியங்களில்கூட, இலக்கண விலங்கமும் மொழிப் பின்னலும் இல்லாமலில்லே. அதனுல்தான் மாணவர்கள் அர்த்தம் புரியாமல் பாடங்களே தங்கள் ஞாபகசக்தியில் ஆணியடித்து மாட்டி வைக்கிருர்கள். இவர்கள் பெறும் நற்சாட்சிப் பத்திரங்களுக்கு (Certificates) ஏதாவது பொருளுண்டா?

ஒரு உண்மைக் கவியின் இதய பாவத்தை எவ்வாறு ஒரு சிறு குழந்தையும் உணர்ந்து அனுபவிக்கலாம் என்பதைத்தான், பல சித்திரப் படலங்களாக, மொழி மின்னல்களாக, ஒளிப்படலங்களாக, ஒலியோவியங்களாக டி. கே. சி. எடுத்துக்காட்டுகிருர். கவிதையின் அபூர்வ உறுப்புக்களேயும், இலட்சணங்களேயும், ஆராய்ச்சித் தராசில் பிரித்துக்காட்டி, காவிய அணுக்களேத் துருவித் துருவி ஆராய்ந்து எடுத்துக்காட்டும் சக்தி (Analytical Power) இவ்வாராய்ச்சியாளரின் இதயத்தில்பிறவியிலேயே ஊறிக்கிடக்கிறது; அவருடன் கூடப்பிறந்தது ஆராய்ச்சி ஒளி; முதனூலாசிரியனே, நிழல்போலப் பிரதிபலித்துப் பின்பற்றிச்செல்லும் ஆற்றலுடையவர். அதனுல்தான் நீண்டநாள் பொது ஜனங்களின் கண்ணில் படாமல் மங்கி மறைந்து கிடந்த முத்தொள்ளாயிரச் சித்திரம் டி. கே. சி. யின் ஆராய்ச்சிமேடையில் கலேயாவேசத்துடன் உதயமாகியிருக்கிறது.

முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாட்டைப் பாடிப்பார்ப்

டி. கே. சி. யும், கோலரிட்ஜூம்

போய்:— புதுமைப் பதிப்பக வெளியீட்டில், [பக்கம் 51–52] காதல் வெறிகொண்ட பெண், தனது காதல் நோயைச் சோழனுக்கு அறிவிக்கும்படி ஒரு செங்கால் நாரைப்பட்சியிடம் சொல்லும் சந்தர்ப்பம்:

"செங்கால் மடநாராய்!
தென் உறந்தை சேறியேல்
நின் கால்மேல் வைப்பன் என்
கையிரண்டும்; வன் பால்க்
கரை உரிஞ்சி மீன்பிறழும்
காவிரி நீர் நாடற் (கு)—
உரையாயோ யான் உற்ற
நோய் (பாட்டு 21)

இந்தப்பாட்டில், இயற்கையின் சஞ்சலமும், காதலின் அபூர்வ வேகமும், எளிய சிறு சொற்களில் சித்திர மொழியாகவே அமைந்திருப்பதைக் கண்டு வியக்காமலிருக்க முடியுமா? இதில் காவியம் ஓவியமாகவே உதயமாகிறது! இதன் ஆழ்ந்த கலைப் பண்பை, டி. கே. சி. அவர்கள் இரண்டு பக்கங்களில் ஆராய்ச்சிக் குறிப்புடன் விளக்கியிருக்கிறார்கள். இதேபோல, மற்ற பாடல்களுக்கும் ஆராய்ச்சி ஒளி, வெள்ளமாய் வீசுகிறது.

பக்கம் 106ல்உள்ள ஆராய்ச்சிக் குறிப்பைக்கவனித்து இன்புறுங்கள்; முத்தொள்ளாயிர ஆசிரியர் பாண்டி நாட்டை நன்றாய்ச் சுற்றிப்பார்த்து அனுபவித்தவர். பாண்டியனது பக்கத்திலேயே இருப்பவர். சபா மண்டபத்தில் வரும் பொன் முடிச்சுக்களைப் பற்றியும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் ஊரில் அனுபவித்துக் கொண்டிருக்கும் மனநிலையைப் பற்றியும் விரித்துக் கூறுகிறார்; பாண்டியனது சமுத்திரம் என்றால் வளையல்கள் செய்வதற்கான சங்கின் குவியல்கள்தான்; கொஞ்சம் ஆழத்தில் முழுகினாலோ, கைக்கு வருவது முத்துக்கள்தான்

என்றெல்லாம் வியக்கிருர். மலைவளத்தில்வரும் யானைக் கூட்டமும், பாண்டியனது வீர வேலும் தெரிகின்றன. இக்கருத்துக்கள் பாட்டில் அமைந்திருப்பதைப்பாருங்கள்:

“பார் படுப செம்பொன்,
  பதி படுப முத்தமிழ்,
நீர் படுப வெண்சங்கும்
  நித்திலமும், சாரல்
மலைபடுப யானை
  வயமாறன் கூர்வேல்த்—
தலைபடுப தார்வேந்தர்
  மார்பு” (பாட்டு—47)

இது ஒரு அபூர்வ சொற்சித்திரம்: கவிதை நாணில் தெறித்து வந்த சித்திரமல்லவா!

தமிழ்ப் பாஷையானது தனித்த வளம், வேகம், எல்லாம் ஆயிரக்கணக்கான வருஷமாகப் படைத்து வந்திருக்கிறது, என்று டி. கே. சி. அவர்கள் உணர்ந்து உணர்ந்து அனுபவித்து நிரூபிக்கிருர்கள்.

உணர்ச்சிப் படலங்களே, ஒளிவீசும் மொழிப்படலங்களாக உதயமாகின்றன என்று கோலரிட்ஜ் அனுபவித்துக் கூறுகிருர். இதுவே நமது தமிழ்ப்பெரியார் சிதம்பரநாதரும் கண்டுபிடித்த உண்மையுமாகும். இரண்டாவது கோலரிட்ஜ் பிறக்கவில்லை; இரண்டாவது டி. கே. சி. யும் கிடைப்பது அரிது.

கம்ப ராமாயணத்திற்கும் முத்தொள்ளாயிரத்திற்கும், டி. கே. சி. எழுதியிருக்கும் அபூர்வமான மின்னற் கண்ணுடியான முன்னுரைகள் அழியாப் பொன்னுரைகளே. கலையின் எல்லையும், கவிதையின் இதயக் கொந்தளிப்பும், சொற்களின் இசைச் சிறகுகளும், நமது ஆர்வக் கண்களின்

முன் இன்பமாய் விளையாடுகின்றன; நாம் படித்துப் படித்துக் குதித்துக் குதித்து விளையாடுகிறோம். கவிதையின் கிரீடம் ஆராய்ச்சி! ஆராய்ச்சியின் மந்திரச் சொல், சுடர் விசி பவனி வருவதைப் பாருங்கள்.

டி. கே. சி.யின் முத்தொள்ளாயிர ஆராய்ச்சிப் பதிப்பு, ஒவ்வொரு தமிழனும் இடையருது படித்து இன்புற வேண்டிய நூல். இது ஒரு இலக்கியச் சுரங்கம்— காதல் ரீங்காரம்— சிந்தனையோடும் தேனுறு — கவிதைச்சுனை — உணர்ச்சி மின்னல் வளையம்.

ஆராய்ச்சி அவசியமா?—என்று சிலர் கேட்கிறார்கள்', கலையின் ஜன்னலை, ஆராய்ச்சியாளனே நுட்பமாகத் திறந்து வைக்கிறான். உள்ளே ஒளியும், காற்றும் உலவும்போது கலைக்கோயிலுக்குள் சாதாரண ஜனங்களும் எதையும் சுலபமாக அறியக்கூடிய நிலை ஏற்படுகிறது. இதுவே ஆராய்ச்சியின் அவசியத்தை நன்கு காட்டுகிறது. மேல் நாட்டில், ஆராய்ச்சியின் வளர்ச்சியால், இலக்கிய பிருந்தாவனம் ஓவியமாக விரிந்து விட்டது. கலையின் உள்ளமும், குழந்தையின் உள்ளமும் இலக்கியப் பூங்காவில் சந்திக்கும் வசதியும் அதனால் தான் நிகழ்ந்திருக்கிறது.

கோலரிட்ஜ், ஸ்வின்பர்ன், ஹாஸ்லிட், லாம்ப், டிகுவென்ஸி, பிராட்லி, டெளடன், ஹெர்போர்டு, ராபர்ட்ஸன், ராட்ரே, பிரீஸ்ட்லி, மிடில்டன் மரி, ஆபெர் குராம்பி, புரூக், ஆர்னல்ட் பென்னெட், எட்வேர்ட் ஷாங்க்ஸ் முதலானவர்கள் செய்திருக்கும் ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி உயர்ந்த படியில் உள்ளது. டி. கே. சி. அவர்களும் நமது தமிழ் இலக்கிய ஆராய்ச்சிப் பணியில் மிக உயர்ந்த படியில் இருக்கிறார்கள். இதைத் தமிழன் நன்கு ஆழ உணரவேண்டும். ஆதர்சங்கொண்ட அருட்காவியங்களை சாதாரண ஜனங்களுக்கு எளிய முறையில் எடுத்துவிளக்குவதே, உண்மையான இலக்கிய ஆராய்ச்சி என்று 'அனடோல் பிரான்ஸ்' தித்திக்கும் படியாக அனுபவித்துக் கூறியிருக்கிறார்.

‘தேவி’யும் உமர் கயாமும்

நமது தமிழ்க் கவிமணி உயர்திரு தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள், உயர்ந்த அருட்கவிதை செறிந்து விளங்கு பவர்கள். பாரசீகக் கவி ‘உமர் கயாம்’ கவிதைப் பண்பு நிறைந்த உள்ளம் படைத்தவர். அவர் பாரசீக பாஷையில் பாடிவைத்த ‘ரூபையத்’ (RUBAIYAT) என்ற தத்துவப் பாடல்களை ஆங்கிலக்கவி ‘பிட்ஜெரால்டு’ (FITSZERALD) மொழி பெயர்த்தார். இந்த ஆங்கில மொழி பெயர்ப்பைத் தழுவியே, நமது கவிமணி ‘தேவி’ அவர்கள் தமிழில் அதே கருத்துக்களை ஆர்வத்துடன் ஜீரணித்து, நமது தமிழ் மொழியில் அழியாத அமுத நடையில் பாடி வைத்திருக் கிறார்கள். நமது பிள்ளையவர்கள் பாட்டில், ஒரு அபூர்வக் கவிதை மின்னலும், இன்பச் சிலிர்ப்பும் சுழன்று நமது இதயக் கடலையே முற்றுகையிடுவதைக் காணலாம். உயர்ந்த நுட்பமான வெள்ளைச் சொற்கள், நமது உள்ளத் தைக் கொள்ளை கொள்கின்றன. சின்னஞ்சிறு சொற்கள் தத்துவப் பூங்கொடிகளாகப் படர்ந்து வருகின்றன.

பிட்ஜெரால்டின் முதலாவது மொழிபெயர்ப்பு 75 பாட்டுகள் அடங்கியது; அவர்செய்த இரண்டாவதுமொழி பெயர்ப்பு 110 பாட்டுகள் அடங்கியது. நயமான, முக்கிய மான கருத்துக்களை, நமது நாட்டுக்குப் பொருந்திய மொழி யில், பிள்ளையவர்கள் 61 பாட்டுகளில் பாடிவைத்திருக்கி றார்கள்: அவை, “நிலையின்மை, உயிரின் சிறுமை, உயிர் ஒன்றே, உலக இயற்கை, விதி, செயலின் பயனின்மை, காலை, வாழ்க்கையின்பம், வாழும்வகை” முதலியவை பற்றிய பாடல்கள்.

'தேவி'யும் உமர் கயாமும்

சொற்கள், கவிஞனின் இதயக் கடலில் நீந்திவருவது போலத் தெரிகிறது. சொற்கள் இதய முத்திரையுடன் பிறந்து வளர்ந்து உண்மைக் கொடிதாங்கி நிற்கின்றன: களங்கமற்ற புனிதமான சொற்கள், கலைவாணியின் நெற்றியில் மின்னுகின்றன. 61 பாட்டுகளையும் ஒரே மூச்சில் படித்தால், இன்பத்தின் உச்சியைக் காணலாம். விட்டு விட்டுப் படித்தால், இன்பம் சிதறிப் போகும்.

"நிலையின்மை" என்ற தலைப்பின் கீழ் 7-வது பாட்டைப் பார்ப்போம்;

வீடும் பழவீ டாகுதடா
  விட்டம் கூரை சுவரெல்லாம்
ஆடி யலைந்து விழுநாளும்
  அண்டி அண்டி வருகுதடா
நாடி யிதனை யின்னும்நீ
  நம்பி மோசம் போகாமல்
பாடிப் பாடி எம்பெருமான்
  பாதம் போற்றி வாழ்வாயே.

"உயிரின் சிறுமை" யைப்பற்றி:

மண்ணை மண்ணில் உதறிவிட்டு
  மாசு மறுவொன் றில்லாமல்
விண்ணிற் செல்ல வல்லதெனில்
  விளங்கும் ஆன்மா இப்புவியில்
நண்ணி இந்த நாள்வரையும்
  நலிந்து சிறையில் இருந்ததனை
எண்ணி வெட்கம் அடையாதோ
  இதன்மேல் வெட்கம் வேறுண்டோ.

"உயிர் ஒன்றே" என்பதைப்பற்றி:

மண்ணை ஒருநாள் ஒருகுயவன்
  மயக்கிப் பிசையும் வேளையிலே

திண்ணை யருகு சென்றிருந்தேன்
செய்யுந் தொழிலும் கண்டிருந்தேன்.

* * *

உண்ட வெறியில் முன்னொருநாள்
உண்ட கலத்தை உடைத்தெறிந்தேன்
துண்டு துண்டாய்ப் போன கலம்
துணிந்து மெல்ல எனை நோக்கிப்
'பண்டு யானும் உன்வாழ்வைப்
பாரில் அடைந்தேன் நீயுமெனக்
கண்டும் இந்த வாழ்வையினி
அடைவாய் உண்மை' என்ற தம்மா.

இனி 'விதி' யைப்பற்றி:

வந்த வந்த மனிதரெலாம்
வளைவும் நெளிவும் கண்டெனனைச்
சந்த மில்லாப் பானையெனத்
தள்ளி வைத்துச் சென்றனரால்
அந்த நாளக் குயவன்கை
ஆட்டத் தாலே நேர்ந்தபிழைக்
கிந்த நாளில் ஏழை எனை
ஏனோ குறைகள் கூறுவரே.

* * *

எல்லாம் இங்கோர் சூதாட்டம்
இரவும் பகலும் மாருட்டம்
வல்லான் விதியே ஆடிமகன்
வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்
ஜோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லாதாக்கி ஒவ் வொன்றுய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்.

* * *

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்

தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யொன்றை மாற்றிடுமோ
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ.''

விதியின் சுழற்சியைக் காட்டி நிற்கும் சொற்கள் கறங்கு போல் சுழல்கின்றன: விதியின் சுடுசரமோ என்று நாம் ஐயுறுகிறோம்.

"செயலின் பயனின்மை" என்பது பற்றி:

திட்டிக் கதவு தெரிந்ததடா
திறவுகோலும் இல்லையடா
கட்டித் திரையும் கண்டதடா
கண்ணும் மயங்கி நின்றதடா
ஒட்டிச் சிறிது நீ நானென்
றுரைத்த உரையும் கேட்டதடா
நட்ட காலம் பின்னையடா
நான்நீ யற்றுப் போச்சுதடா.

இனி 'வாழ்க்கை யின்பம்' பற்றி:

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந்தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ.

இனி 'வாழும் வகை' யைப்பற்றி:

ஆழி சூழும் உலகாளும்
அரச னாக வேண்டுமெனில்

வாழும் வாழ்வில் உன்னையும் நீ
  மறந்து வாழ வேண்டுமடா
ஏழை யாகி எளியவரின்
  எளிய னாக வேண்டுமடா.
தோழனாகி யாவர்க்கும்
  தொண்டனாக வேண்டுமடா.

* * *

ஈசன் அருளைப் பெறுவதிலும்
  இடையே தரகர்க் கிடமுண்டோ
பேசின் இவர்செய் சூதுலகில்
  பெரிய சூதென் றறியாயோ
பூசு நீறும் தாவடமும்
  புரிமுந் நூலும் பூண்டதலால்
காசு பணத்தின் ஆசையவர்
  கடந்த தில்லை இல்லையடா.

ஆஹா! எவ்வளவு பெரிய உண்மைகள், எவ்வளவு எளிய சொற்களில் உதய மாகின்றன, பார்த்தீர்களா? இதுதான் உண்மைக் கவிதையில் மின்னி உதயமாகும் சிருஷ்டிச் சிறப்பு! உள்ளே தெளிந்து வெளியே மின்னிச் சுழன்று வருவது! 'தேவி'யின் மொழியில், ஊமைச் சொற்கள் இல்லவே இல்லை! கவிமணியின் சொற்கள், இதய மலர்கள், இதய மழை மின்னல்கள்! கருத்தின் நீண்ட தங்க மின்னலை, எடுத்துக் காட்டும் சொற் கொண்டலே இந்தப் 'பாரசீகக் கவியமுதம்'.

★

தாகூரைப்பற்றி ஐரிஷ் கவிஞர்

நமது கவிஞர் தாகூரைப்பற்றி, ஐரிஷ் கவிஞர் ஏட்ஸ் தமது மனப்பூர்வமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். தாகூரின் கீதாஞ்சலியில் மண்டிக்கிடக்கும் இலக்கியச் சுவையின் நிழலை, ஆங்கில மொழி பெயர்ப்பில் கண்ட மாத்திரத்திலேயே, ஏட்ஸ் பெரிதும் அதிசயித்து விட்டார்.

"மொழிபெயர்ப்பில் வெறும் வசன காவிய நிலையி லேயே, இவ்வளவு எண்ணப்பொலிவும், கற்பனைகதியும், சிந்தனையொளியும், உள்ள அமைதியும், சொல் இனிமை யும், ஆத்ம விமர்சனமும் கலந்து மிளிரும்போது, மூல வங் காளியில் உண்மைச் சுடர் களங்கமற்று ஜொலிக்குமல் லவா? மூலமொழியில் கீத அலையும் சேர்ந்து வீசி இசைச் சிகரமாக வளர்ந்திருக்க வேண்டுமல்லவா? மூலத்தில் உள்ள சங்கீதச் சுடரின் ஜோதி வெள்ளத்தை, ஆங்கிலத்தில் எப்படி அழகுடன் மொழிபெயர்த்து அமைக்க முடியும்? நான் இந்தக் கீதாஞ்சலியின் ஆங்கில மொழிபெயர்ப்பை வசன காவிய நிலையிலே உணர்ந்து, அச்சிடுவதற்கு முன் னமே, கைப்பிரதியைப் படித்துக் களிப்படைந்திருக் கிறேன்..................மோட்டாரிலும், டிராமிலும் இதை விடாது படித்து மகிழ்ந்திருக்கிறேன்" என்று ஏட்ஸ் கூறு கிறார். இதுவே புதுமைக் கவியென்றும், இலக்கிய மறு மலர்ச்சி என்றும், ஓர் உண்மைக் கவியே ஆத்ம அழகை இயற்கை உள்ளத்துடன் சமைக்க ஆற்றலுடையவன் என்றும், உண்மைக் கவியின் உள்ள வெளியீடே கீத கோபுரமென்றும் ஏட்ஸ் நன்கு உணர்ந்திருக்கிறார்.

ஒரு ஜெர்மன் கவிஞரைப்பற்றி, அவர் எழுதிய கவி களிலிருந்து மாத்திரம் பூரா வரலாற்றையும் ஒருவன்

தெரிந்துகொள்ள முடியாது. அதுபோலவே தாகூர் எழுதிய கீதாஞ்சலியைப் படித்துவிட்டு ஆசிரியரின் வரலாற்றைப் பூராவும் எவனும் தெரிந்துகொள்ளமுடியாது. அந்த வரலாற்றைத் தெரிந்துகொள்ளத் தமக்கு மிகுந்த ஆவல் உண்டானபடியால், ஒரு வங்காளி டாக்டரிடமிருந்து அதைக் கொஞ்சம் தெரிந்துகொண்டு மனந்தெளிந்து பரவசமடைந்ததாகவும் எட்ஸ் கூறுகிறார்.

தாகூரின் வாழ்க்கை சம்பந்தமான சில உண்மைகளை எட்ஸுக்குக் கூறினர், வங்காளி டாக்டர்: "தாகூரின் கவிகளை நான் தினசரி படிக்கிறேன். உலகக் கவலைகளைப் போக்க, அவரது கவிகளின் ஒரேவோர் அடியே சிறந்த ஆத்ம சாதனமாக இருக்கிறது. வங்காளத்தில் பல கவிகள் இருக்கிறார்கள்; ஆனால் தாகூருக்கு எவரும் நிகரில்லை" என்று அவர் கூறினர். நவீன இலக்கிய மறுமலர்ச்சியை வங்காளிகள் தாகூரின் கலை இயக்கமாகக் கொண்டாடுகிறார்கள். வங்காளிகளிடம் தாகூர் கீர்த்தியில் வளர்ந்தோங்கியிருப்பதுபோல், ஐரோப்பியக் கவிகள் யாரும் கீர்த்திபெற்றிருப்பதாகத் தெரியவில்லை. கவிதையிலும் சங்கீதத்திலும் சம உச்சியைத் தொட்டு, செவிநுகர் கனியாக ஆழ்ந்து அனுபவித்தவர் தாகூரே. வங்காளி பாஷை பரவிய இடமெல்லாம் அவருடைய பாட்டு எல்லோராலும் பாடப்படுகிறது. இளமையில் அவர் எழுதிய முதல் நாவலும் அதன்பின் எழுதிய நாடகங்களும் இன்னும் கல்கத்தாவில் நடித்து அனுபவிக்கப்பட்டு வருகின்றன. இளமை முதல் பூந்தோட்டத்தில் நுழைந்து, உள்ளத்தை இயற்கைக் கோயிலில் பறிகொடுத்து, விசித்திர சங்கீதமும் சித்திரக் கவிதையும் வளர்த்துப் புகழ் மண்டியவர் தாகூர். தமது இருபத்தைந்தாவது வயது முதல் முப்பத்தைந்தாவது வயது வரையில் துக்கப்பொய்கையில் வளர்ந்தோங்கிய காதற்கவிதைப் போதை, உள்ளம் பூரித்து நிகரற்ற வங்க மொழியில் அவர் வரைந்து வைத்திருக்கிறார். அவரே வாழ்க்கையைக் கண்டு பயந்து வெறுக்காத உண்மை முனிவர்; தத்துவ

ஞானி. அவருடைய கவிதைத் தருவில் ஒளிர்வதெல்லாம் வாழ்க்கையின் உண்மைக்கனிகள்; எல்லாம் உண்மைச் சுடர்கள்.

கவிஞர் தாகூர் தினந்தோறும் காலையில் மூன்று மணிக்கு எழுந்து, தியானத்தில் ஆழ்ந்து, மனச்சாந்தியுற்று, இரண்டு மணி நேரம் கடவுளையே சிந்திப்பதாகவும், தாகூர் பிறந்த குடும்பமே கலைக் குடும்பமென்றும், தாகூரின் கவிதை, கலை அரணில் உதயமாகி உலகெங்கும் சுடர் பரப்புகிறதென்றும், கவி எட்ஸுக்கு மற்றோர் இந்தியர் விவரித்தார். இதைக்கேட்ட எட்ஸ் உள்ளம் பூரித்தார்.

வங்காளக் கவிதையும், மதமும் ஒன்றையொன்று அணைந்து ஐக்கியம் பெற்று வளர்கின்றன. எத்தனை யுகங்கள் மாறினாலும், எவர் நாவிலும் இன்பத்தோடு தவழும் இயல்புடையது 'கீதாஞ்சலி'. யாரும் வீதியிலே பாடிப் பாடிப் பரவசமடையத்தக்கது அது. படகோட்டிகளும் கூட இவ்வின்னிசையில் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுவார்கள்.

கீதாஞ்சலியின் மூலமான வங்காளக் கவிகளில் ஓசை இன்பம் மிக நுட்பமாய் அமைந்திருக்கிறதென்றும், புது முறையான சங்கீத மெட்டுக்களிலே அவை இயன்றிருக்கின்றன வென்றும், வேறு பாஷைகளிலே மொழிபெயர்க்க முடியாத இன்பவெள்ளம் அவற்றிலே நிறைந்திருக்கிறது என்றும் எட்ஸுக்கு அந்த இந்திய நண்பர்கள் சொன்னார்களாம்.

தாகூரின் கீதாஞ்சலியிலே, எட்ஸின் சொந்த அனுபவம் என்ன? "உயர்ந்த கலையின் மறுமலர்ச்சியாகவே, அவருடைய கருத்தைக் கீதாஞ்சலியிலே நான் இன்பத்துடன் சுவைக்கிறேன். இருந்தாலும், வெறும் மண்ணிலிருந்து வளரும் பசும்புல்லும் நாணலும்போல அது மண்டி

கிறது. பல தலைமுறைகளாய் உயர்ந்தோங்கிய எண்ணங்களின் வெளியீடாய் வளர்ந்து இலக்கியம், இந்தக் கவிஞரின் வாயிலாக, உவமையணியாகவும் உணர்ச்சிச் சித்திரமாகவும், திருப்பவும் சாதாரண ஜனங்களின் உள்ளத்தில் வந்து பாய்கிறது. ஆங்கிலத்திலே சாஸருக்கு முன் தோன்றியவர்கள்போல, தாகூர் தம்முடைய பாசுரங்களில் அமையும் சொற்களுக்குச் சங்கீதம் ஊட்டுகிறார். சொற்கள் இயற்கையாகவும், நிறைமொழித் தேனாகவும், வெள்ளப் புரட்சியாகவும், விந்தை பொதிந்த இனிமை சுரந்த நாதகீத அலைச் சுடராகவும் சாந்தம் நிறைந்த சிந்தனைத் தீபமாகவும் வளர்ந்து, சொல்லோவியம் தீட்டுகின்றன. கீதாஞ்சலியைக் காதலர்கள் பாடினால், கடவுட் காதல் வளர்ந்து, அதிலே துக்கம் கரைந்து, காதலர்களின் இனிய யௌவனம் திரும்புகிறது. ஏழைகளின் உள்ளத்திலும் இன்பத்தேன் கொட்டும் ஆற்றலுடைய எளிய இனிய உண்மை ஒளிபரப்பும் நடையில் சிறந்தவை இக்கவிகள். மலர்களும், ஆறுகளும், சங்கநாதச் சிறப்பும், இந்தியாவில் ஜூலையிலே பொழியும் தாங்கமுடியாத மழையும், நெருப்பும் வெயிலும், காதலர்களின் உறவையும் பிரிவையும் விஸ்தரிக்கும் உவமையணிகளாய் இவற்றிலே அமைகின்றன. ஆற்றிலே மிதந்துவரும் படகில் முரளி வாசிக்கும் ஓர் உருவம், சீனர்கள் வரையுமொரு சித்திரத்தில் உள்ளது போல், இவற்றிலே தெய்வக் காட்சியளிக்கிறது. மேல் நாட்டாராகிய நமக்கு முன்பின் தெரியாததொரு நாகரிகக் கலையே இந்தக் கவியின் உள்ளத்தில் கற்பனை சன்னதமாக உருக்கொண்டிருக்கிறது. அதிலே சிற்சில சமயங்களில் ராஸெட்டியின் சிந்தனைச்சுடர் அலைவீசக் காண்கிறோம். தாகூரின் கீதாஞ்சலியில், ஒவ்வொரு சொல்லும் ஒரு தியாகச் சுடராகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அவரது கவிதை ஓர் உண்மைப் பேரோவியமாக, உணர்ச்சிக் கோபுரமாக, விந்தைச்சிறகுடன், காவிய உள்ளம்பெற்று, உள்ளும் புறமும் ஊடுருவிப் பாய்கிறது. அதிலே நான்பெற்ற இன்பம் முடிவற்ற இன்பம், வற்றாத இன்பம்" என்று கவிஞர் ஏட்ஸ் அருமையாக அனுபவித்து முடிவுகட்டுகிறார்.

தாகூரை உலகறியச் செய்த ஏட்ஸ்

ஏட்ஸ், ஐரிஷ் கவி பாடுவதில் அதிகத் திறமையுடையவர், தம்மை ஒலியலைக் கைதியாகவே அல்லும் பகலும் கனவு காண்பார். கீதக் தூலிலே சிக்குண்டு, கீதமே கொட்டிக்கொண்டிருப்பார். வீணையில் உறங்கி விழிக்கும் இன்னிசைபோல், அவருடைய இதய பரவசத்தில் சொற்கள் உறங்கிவிழிக்கும். அவருடைய முகம் அருள் நிறைந்தது. கவிதையின் அருட்சோபை அவருடைய முகத்திலும் கண்களிலும் மின்னி மின்னி வட்டமிடும்.

ஐரிஷ் இலக்கிய மறுமலர்ச்சிக்குக் காரணமான ஏட்ஸ் டப்ளினில் 1865-ஆம் ஆண்டு பிறந்தார். ஒன்பதாவது வயதில் தமது பெற்றோர்களுடன் லண்டனுக்குச் சென்றார். ஹாமர்ஸ்மித்தில் உள்ள கொடால்பின் பள்ளிக்கூடத்தில் முதலில் படித்தார். அவருடைய தகப்பனர் ஜான் பி. ஏட்ஸ் டப்ளினுக்குத் திரும்பி வந்ததும், ஹார்க்கோர்ட் வீதியிலுள்ள ஹைஸ்கூலில் படித்து அதன்பின் மெட்ரோபாலிடன் கலைக் கலாசாலையில் ரஸ்ஸலுடன் துணை மாணாக்கனுகப் படித்து வந்தார். ரஸ்ஸலுடன் நெருங்கிப் பழகியதில், அவருடைய ஆப்தநண்பனுக மாறிவிட்டார். லண்டனிலும் டப்ளினிலும் அடிக்கடி வசித்துவந்தாலும், தாயின் ஊராகிய ஸ்லைகோவிலே அவருடைய கற்பனை வளர்ந்து கொழுந்துவிட்டெரிந்தது. 1891-ம் ஆண்டு அவர் வெளியிட்ட நாவலான ‘ஜான் ஷெர்மன்’ ஸ்லைகோ கிராமத்தின் வர்ணனையும் லட்சணங்களும் நிறைந்திருக்கிறது.

அவரது ‘இன்னிஸ்ப்ரீ’ என்ற பாட்டு, நிறைந்த கீதச் சுழற்சியுள்ளது. சொற்கள், சின்னஞ் சிறு சொற்கள் — வளைந்து வளைந்து வட்டமிட்டு, உண்மையைக் கொட்டி

முழக்கிப் பாடிவருகின்றன. அதிலே இயற்கையின் இதய ஒலி ரீங்கார மிடுகிறது. சாந்தி நிறைந்த ஏரியின் அமைதிக் குரல் எட்ஸின் காதில் இன்பத் தேனைப் பொழிகிறது. ஏரி அலையின் மர்மத்தை, கவியின் இதய கீத அலை தொட்டுக் கொஞ்சுகிறது.

நாடக சிருஷ்டியே எட்ஸின் கலை யுள்ளத்தை அதிகமாய்க் கவர்ந்தது. ஐரிஷ் தேச முன்னேற்றத்தை ஓம்பவும் நாடகக்கலையை வளர்க்கவும், அவர் அநேக நாடகங்கள் எழுதியிருக்கிறார். பல மன நிலை, குணநிலைகள் பற்றிய தத்துவங்களை விளக்கும் நோக்கத்துடன், பற்பல நாடகங்கள் எழுதியிருக்கிறார், ஐரிஷ் நாடகமேடை நிபுணர் எட்ஸ்.

எட்ஸின் நடை ஆரம்பத்தில் கொஞ்சம் தெளிவு குன்றியிருந்தது. கலை வளர வளர, எண்ணத்தின் கூர்மை, மொழிக் கூர்மையாக மாறிவிட்டது. அனுபவ முதிர்ச்சியில், அவருடைய இன் சொற்கள் எல்லாம் மொழி விந்தையாக மாறிவிட்டன. எளிமையே இனிமை; இனிமையே உண்மை—இந்த அனுபவத்தைக் கடைசியிலே அவர் பெற்றுவிட்டார்.

இவர் நமது வங்காளக் கவி ரவீந்திரநாத தாகூரை நன்கு உணர்ந்து அனுபவித்தவர்; ரவீந்திரரின் 'கீதாஞ்சலி' என்ற அருள் நிறைந்த நூலை ஆங்கில மொழி பெயர்ப்பில் லண்டனில் சதா படித்து அனுபவித்துத் தாகூரை உலகறியச்செய்ய முயற்சித்த பேரன்பர் கவிஞர் எட்ஸ். கீதாஞ்சலிக்கு ஒரு முன்னுரையையும் இவரே அன்புடன் எழுதியிருக்கிறார். 'கீதாஞ்சலி' அழகும் உண்மையும் நிறைந்த நூலென்றும், உலகத்தில் எவராலும் எழுத முடியாத அருமையான நூல் என்றும், அதுவே இந்தியாவின் கலைப் பொக்கிஷம் என்றும், நீதிப் பொக்கிஷம் என்றும், மூல வங்காளியிலே தாகூரின் கீத அலை அடிக்கிறதென்றும், ஆங்கில மொழி பெயர்ப்பு வசன மொழிபெயர்ப்பென்றும்,

அருமையாக, நிறைந்த அன்புடனும் ஆர்வத்துடனும் இவர் எடுத்துக்கூறுகிறார்.

ஏட்ஸ், ஓர் உண்மைக்கவி. அவருடைய உள்ள நிலையே இதய ரீங்காரமாக ஓசை இன்பத்தை எழுப்புகிறது. அவர் எழுதும் முறையே அலாதியானது. வேறு எவராலும் காபியடிக்க முடியாத உயர்ந்த மனோதத்துவம் வாய்ந்தது அவர் கவிதை. தாம் எழுதும் நடையழகை அவர் கவனிப்பதில்லை; ஆத்ம பரிபூர்ணத்தை உண்டாக்கும் இதய சாந்தியையே, அவருடைய கவிதா விமர்சனம் மொழியிலே நிலைக்கச் செய்கிறது. அவரது இதயச் சுடரே மொழி யோகியமாக வளர்கிறது. ஒவ்வொரு சொல்லிலும், அவர் தம்மையே கண்டு, தம்மையே அறிந்து, தம்மையே சிருஷ்டிக்கிறார். ஆரம்ப காலத்தில் அவர் எழுதிய கவிகளில் சில குறைகள் தோன்றினாலும், மன முதிர்ச்சியில் எழுந்து பின்வந்த பாசுரங்களில், இதயச் சித்திரம் இதய ரீங்காரமாகவே ஓசை யிடுகிறது. இதுவே உண்மை ததும்பும் இதய ஒலி; இதுவே உண்மை யொலிக்கும் இதய ஒளியுங்கூட; மொழியின் சிறகடிப்பில், கடவுட் காதலும் இன்ப ஓசையை எழுப்புகிறது.

ஏட்ஸ் எழுதிய ஐரிஷ் நாடகங்களில், அவருடைய மர்ம நடை சிலருக்கு ஐர்லாந்தில் விளங்கவில்லை. பொது ஜனங்கள் புரிந்து கொள்ளக்கூடிய தெளிந்த சாதாரண நடையில் அவர் எழுதாததே அவரது பெருங்குறை. சிறு சொற்களிலும், உள் அர்த்தம் நிறைந்து மர்ம நிலையடைந்து விட்டது. ஆயினும், அவரது நாடகங்கள், நடிகக் கலையைத் தாங்கிய ஒவிய சிருஷ்டிகளாகும்.

1920-ல் ஓர் இரவு ஆக்ஸ் போர்டில் நமது இந்தியக் கவி ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயாவை, ஐரிஷ் கவி ஏட்ஸ் விருந்துக் கழைத்தார். பேல் மாடிக்கு ஏறிச் செல்லும் படிகளில் வரிசையாக ஏராளமான மெழுகு திரிகளை ஏற்றிவைத்துவிட்டு ஏட்ஸ் பாட ஆரம்பித்தார்; அவருடைய

அறை ஒளி நிறைந்து ஜோதி பெருக்கியது; மெழுகு திரிகள் மணமாகாத கன்னிப்பெண்களின் கூட்டம் போல், அழகும் சுடரும் வீசிக் கொண்டிருந்தன. இதை ஹரீன் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, காதல் பாட்டு ஒன்றை ஏட்ஸ் பாடி முழக்கினர்; அது ஹரீனின் இசைக் காதை நிறைத்து வழிந்தோடியது. ஏட்ஸின் இதயத்தில் காவிய உணர்ச்சி எழுந்து கூத்திடும்போது, அவர் பொழியும் இன்னிசைக் கடலில், வெளி உலக இரைச்சல் ஒன்றும் செவிப்படுவதில்லை; உள்ளோசை யின்பத்தின் ஆழ்ந்த அலையில் அவர் மூழ்கி விடுகிறார்.

இந்திய உபநிஷத்துக்களையும் இதர வேதாந்த நூல்களையும் நன்கு கற்றவர் ஏட்ஸ்; எல்லாவகையிலும் அறிவு நிறைந்தவர்; அத்துடன் இயற்கைப் புலவர், அருட்கவி, உணர்ச்சி நிறைந்த ஆத்மானுபவக் கவி. சிந்தனை தேக்கிய முகத்துடன், உலக நிலையை அவர் ஆராய்ந்து வந்தார். 1923-ல் தமது 58-வது வயதில் நோபல் பரிசுபெற்று உலக மதிப்பில் உயர்ந்தார்.

1939 ஜனவரி 29ல் ஏட்ஸ் உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது 74. அவர் மறைவு, காவிய உலகத்துக்கே நஷ்டமாகும்; அந்த நஷ்டத்தில் பங்கு நமக்குமுரியதுதான்.

★

வங்கக் கவிஞர்

ஹரீந்திரநாத் கவிதை மலர்கள்

வங்கக் கவிஞர் ஹரிந்திரநாத், ஆங்கிலத்தில் அருமையான கவிதைகள் எழுதியிருக்கிறார்: மிக மிக ஆழ்ந்த சிந்தனைகள் அடங்கிய, நடை யெழிலோடு உதயமாகும் கவிதை மலர்கள், வாசகர்களின் உள்ளங்களிலே கவிதை மணத்தை வாரி இறைக்கும் ஆற்றல்வாய்ந்தவை. ரவீந்திரரின் ஆங்கில நடையை விட, ஹரிந்திர நாதரின் நடை கூர்மையும் வேகமும் மின்னல் வெறியும் கொண்டது. ஹரீன் அருமையாகப் பாடுவார், நுட்பமாக வாழ்க்கையின் சஞ்சலங்களை நாடக அரங்கில் நடித்துக் காட்டுவார், உணர்ச்சிவெறி அதிகம்; அந்த வெறி, மன மோகனவெறி, அவருடைய ஆங்கில நடையிலும் புகுந்து பரிமளிக்கிறது. சின்னஞ்சிறு சொற்கள், கவிஞன் உள்ளத்தில் ஊறி அதிகமான ஆற்றல் பெற்றுப் பறந்தே வருகின்றன.

கவிக்குயில் சரோஜினி தேவியாரின் சகோதரர்தான்,- ஹரின்: மகான் அரவிந்தர், அவரைச் சிறந்த கவிஞர் என்று மனமார வாழ்த்தியிருக்கிறார். ஹரீன் 17-வது வயதில் பாட ஆரம்பித்தார்; ஆனால் சரோஜினிதேவியோ 12-வது வயதிலே இசை நயத்துடன் பாடினார்.

வாழ்க்கையின் பல அம்சங்களைப்பற்றியும், பல கோணங்களிலிருந்து சித்திரித்திருக்கிறார், ஹரின்; வாழ்க்கையின் வெறுமையும், சிறுமையும், வறுமையும், குழந்தை உள்ளமும், காதலின் வெறியும் வெற்றியும் தோல்வியும், யோகவெற்றியும், கவிதை வெள்ளமாகவே பெருக்கெடுத்து ஓடுகின்றன. நமது பாரதியாரின் தமிழ்க் கருத்துக்களைப்

போலவும் நடையழகைப்போலவும், ஹரினின் சிந்தனைப் புரட்சியும் நடைப் புரட்சியும் கலந்து மின்னலிடும்.

அவருடைய கவிதைகள், பெரும்பாலும் பாடல்கள்: மேல் நாட்டில், அவருடைய பாடல்களுக்கு (LYRICS) நல்ல செல்வாக்கு; வெள்ளையன் கண்டு அதிசயிக்கத்தக்க நடையில், சிந்தனைக் கோவிலாக அமைந்திருக்கும் அவருடைய கவிதைகளை, நாமும் இன்புற்று அனுபவிக்கலாம். அவருடைய LYRICS 'லிரிக்ஸ்' (பாடல்கள்—40-ல்) சில பாடல்களின் கருத்துக்களை கீழே தருகிறேன்.

"காலம்"—ஒரு சல்லடை

கவிஞனின் கவிதை, ஒரு நிகரற்ற இரத்தினம்: குற்றம் கண்டுபிடிக்க முயலும் ஆராய்ச்சியாளன் கையில், இந்த மாணிக்கம், மங்கிச் சிதறுண்டு கேவலம், பொடியாகி விடுகிறது.

ஓ கவிஞனே! சிருஷ்டி எழில் நிறைந்த, உனது பாடல், விலை மதிக்கமுடியாத மாணிக்கம்தான்! இதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது.

சாதாரண மனித விமர்சகர்களைவிட, காலமே ஒரு சிறந்த விமர்சன மேதை; எதையும் மதிப்பு அறிந்து வடிகட்டி, முத்தெடுத்துக் காட்டும் சல்லடை. சாதாரண விமர்சகர்களின் தீர்ப்பை, அடியோடு மாற்றிவிடும் ஆற்றல் உடையது, காலத்தின் தீர்ப்பு.

கவிஞனே! உனது உள்ளொளியின் ஜோதியை, யாராலும் மறைக்கவோ, அணைக்கவோ முடியவே முடியாது; மேதை உலகிலே சுழல்கின்ற உன் அரிய பாதங்களை, விமர்சகர்கள் தடுக்கவோ பிணைக்கவோ முடியவே முடியாது! விரியும் ஜோதியை, மேகச் சிதறலால் மறைக்க முடியுமா?

உனது அரிய கவிதை மலர்களை, அறிவிழுந்த விமர்சகன் கிழித்தெறிந்து அலங்கோலப் படுத்தலாம்; ஆனால் அவனுடைய அதிகப் பிரசங்கமான கொடிய தீர்ப்பைக் கிழித்தெறிய, காலம் என்ற தலைசிறந்த ஆராயும் சக்தி என்றும் தயாராக இருக்கிறது.

"காதல்"—(இருண்ட ரோஜா)

காதலியின் புனிதமான தொடையிலே, நான் தலை சாய்த்துப் படுத்திருக்கிறேன்; இருவருடைய இதயங்களும் இசைந்து பாடுகின்றன; இன்றே வாழ்வின் இன்னல்கள் ஒழிந்தே போகின்றன; காதல் விந்தையின் உச்சியிலே, வாழ்வின் அமைதி மன அமைதியிலே சாந்தி எய்தி இன்புறுகின்றது;

காதலியின் தொடையிலே நான் தலைசாய்த்துத் தூங்கும்போது, என் முகத்திலே இன்ப ஒளி பரவி நிற்கின்றது; எனது களைப்பு மாறி, மௌனமுற்று, இன்ப உச்சியில் துயில்கின்றேன், ஆஹா! என்ன இன்பம்!

வாழ்க்கை, ஒரு பலவர்ணப் பொறி; சிறையுண்ட பட்சிபோல, ஆன்மா உள்ளே துன்பத்திலும் துர் அதிர்ஷ்டத்திலும் துடித்துக் குமுறி நிற்கிறது. வாழ்விலே, காதலன்-காதலி இன்பம், துடித்துத் துடித்துப் பறந்தே போய் விடுகிறது; நமது வாழ்க்கையே, மரணம்வரை ஒரு ஜ்வர ஜ்வாலையாகத்தோன்றி மறைந்து விடுகிறது; ஆனால், துன்பத் தீயைத் தடைத்தெறிய, காதலின் அகண்ட சக்தியே பயன்படும்; துன்ப மேகத்தைக் கிள்ளியெறிய, காதல் ரோஜாவே வாசனை வெள்ளமாகக் காட்சியளிக்கிறது; நமது வாழ்நாட்கள், கனவற்ற வெறுமை மண்டிய விபரீதத் தோற்றங்கள்; ஆனால் காதல் ஒளியிலே, துன்பமேகம் சிதறியோடி மறைந்தேபோகும். இருண்ட ரோஜாவிலும், இன்ப வெறி கனல்கின்றதல்லவா?

"காதலன்"

நான் காதலையே காதலிக்கிறேன் என்பதல்ல; இயற்கை அனைத்தையும் காதலிக்கிறேன்; நிர்வாண மலையையும், கிழிந்த மேகத்தையும்தான் நான் காதலிக்கிறேன்; இரு மேகச் சிதர்களுக்கிடையே, தோன்றுகின்ற வெட்ட வெளியையும்தான் காதலிக்கிறேன்; மலர்களுக்கு உயிரும், வருணமும் ஊட்டும் மண் தூசியையும்தான் காதலிக்கிறேன்; அழகையே எங்கும் காட்டிநிற்கும் அழகுக் கூட்டம் அனைத்தையும் நான் காதலிக்கிறேன்; வெள்ளி வானத்தையும், நீல நீரையும் நான் ஆசையுடன் காதலிக்கிறேன்; பெண்ணே! அதனால்தான், நான் உன்னை மட்டுமே பூராவும் காதலிக்க முடியவில்லை.

"மணிகள்"

காலச் சிறையில், இருண்ட அறையில், மணிகள் உறங்குகின்றன; துன்ப மிகுதியால், வயதுக்கு முன் முதுமையடைந்து நரைத்து அலங்கோலமாக நிற்கின்றன, பொலிவிழந்த மணிகள்; வருந்தி வருந்திக் கண்சிவந்து நிற்கின்றன மணிகள்; ஒவ்வொரு மணியும், தன் இறுதி மரணக் குரலிலே மயங்கி மடிந்தே போகிறது; பல யுகங்களாகவே, மணிகளின் தலைவிதி இப்படியாகிவிட்டதே! மரண முனையிலே, துன்ப வெள்ளத்தில், விதியின் இறுதிக்குரலை எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றன, மணிகள்! ஐயோ! ஆம், காலமே, கடவுளின் பூர்வீகத் தனி அறை: இருண்ட அறையிலே, மணிகளாகவே உடைக்கப்பட்டு, இறையின் காலம் அறையிலே உறங்குகிறது; இந்த இருண்ட மூலையிலே நின்றுகொண்டு, சூரியனின் அஸ்தமனத்தையும், சந்திரனின் மங்கிய மறைவையும், நக்ஷத்திரங்களின் முழுமறைவையும், கடவுள் கண்ணால் சிறைக் கதவுகளினூடே கண்டு கண்கலங்கி நிற்கிறார்; மனிதனின் ஞாபகமற்ற மறதியிலே, மணிகள் தூக்கிலிடப்பட்டு மடிகின்றனவே! இறைவனின் இறுதிக் கண்பார்வையிலே! ஐயோ! மணிகள், ஹிருதயத்தையே இழந்து துடிக்கின்றனவே! துடிக்கின்றனவே!

"அழகு"

அழகு, என்னுள் விழிப்புற்றிருக்கிறது: துன்பத்தின் ஆழ்ந்த கண்ணாடியில், அழகு குமுறி நிற்கின்றது. நெற்கதிர்கள், என் இதயத்தில் அழகுணர்ச்சியிலே வளர்ந்து, மழையின் வயிரத் துகள்களிலே மின்னித் துடித்தே மறைகின்றன; என்னுள், வான வில்லின் வெளிறிய தழுவலிலே மயங்கி நிற்கின்ற இருண்ட மலைச் சிகரங்கள் மின்னலிடுகின்றன; தனிமையிலே வளர்கின்ற அழகிலே கடைந்தெடுத்த அருவித் துளிகள், என்னுள்ளத்திலே, சொற்களாகவே வந்து நின்று நிலவுகின்றனவே! நான் ஒரு தனிக்குகை: இந்தப் பழைய குகையிலே, பொன்னிலே செய்த பெண் சிங்கம்போல், அழகு, வெட்கி நாணி என்னுள் நின்று நிலவி தன் கருத்தை நிறைவேற்ற முன்வருகிறது.

"அழகின் கண்ணாடி"

அழகே! வாழ்க்கை வீண் வெறுமை நிறைந்தது, பயனற்றது; துன்பவாயிலாகவா, அழகே! நீ உன் தன்மையைக் காட்டவேண்டும்; அழகே! உன் வனப்பு, என் உயிரிலே, என் மூச்சிலே வந்து கலந்துவிடுகிறதே! அழகே! உனது இன்பத்துக்காக, மரணத்தைக் கூட உனது கண்ணாடியில் காட்டிக்கொண்டு நிற்கின்றாயே! உனது இன்பத்துக்கும், உனது அதிசய உணர்ச்சிக்கும் இந்தத் துன்பக் கோலமும் தேவையா? அழகைச் சுற்றித் துன்பமும், தூசியும் வந்து மண்டி மறைக்கவேண்டுமா? அழகே! துன்பமிகுதியால், உனது நெஞ்சம் துடிதுடிக்க வேண்டுமா? துன்பநெருப்பிலே, வான விற்களும், அருணோதயங்களும் மங்கி மடிய வேண்டுமா? அழகே! உனது மனநிலைகள், முறிந்து சிதற வேண்டுமா? ஒருவனாலும், அழகின் ஆழத்தை அளக்க முடியவில்லையே! அழகே! உன்னுள், பேருண்மைகள் பதுங்கி மறைந்து கிடக்கின்றனவே! காதலின் அளப்பரிய மர்மச் சந்திப்புப்போல, அழகின் மார்பிலே, இரவுக்கும் பகலுக்கும் அப்பால், பேருண்மைகள், மனிதன் கண்களில் படாமல், சுழல்கின்றனவே, ஐயோ! சுழல்கின்றனவே!

ஹரீந்திரநாத் கவிதை மலர்கள்

'' மரம் ''

ஆஹா! அந்த மரம் மௌனமாக நிற்கிறது; கனியின் கனத்தால், மரம் தலைசாய்ந்து நிற்கிறது; உலகத்தின் மறு கோடியிலிருந்து, காற்று ஓடோடி வந்து, அந்த விருக்ஷத் தின் முன் புல்லாங்குழல் மீட்டுகிறது;

இரவிலே, சந்திரனின் வெள்ளிக் கதிர்களால், மரம், ஜோதிமரமாக மிளிர்கின்றது; ஒவ்வொரு வெள்ளிக் கதிரும் ஒரு அதிசய நிகழ்ச்சியாகவே காட்சியளிக்கிறது;

சூரியக் கதிரிலே காய்ந்த மரங்களிலே, கனிகள், பழுத்த சபதங்கள் போல, உறுதியாக அதிசய வனப்புடன் மின்னிக்கொண்டு நிற்கின்றனவே! எத்தனை தடவைகளோ, பையன்கள் அந்த மரத்திலே கல்லை வீசிக் காயப்படுத்தி யிருக்கிறார்கள்!

கனிகள் குலுங்கும் மரத்திலே, கற்கள் எறியப்படு கின்றனவே! அந்த அருமையான மரத்திலே, இயற்கையின் அற்புத விருக்ஷத்திலே எத்தனை மாறுதல்கள், எத்தனை அதி சயங்கள்! ஆஹா! அந்த மரமே, சிறந்த உண்மைதாங்கி!

'' விதி ''

விதியின் மௌனப் போக்கையும் விபரீதத்தையும் கவிஞர் ஹரீன் மிக ஆழமாகச் சித்திரிக்கிறார்; இருண்ட போர்வையிலே காலம் தன் இரகசியத்தை மூடிக்கொண்டு விரைந்தோடுகிறது; மௌனத்துக்கும் ஒரு குரலுக்கும் மத்தியிலே, மனிதன் ஒளியை நோக்கிச் செல்லும் நிழல் போல அசைகின்றான்.

மனித மூச்சிலே, ஆகாசம்வரை விரிந்துநிற்கும் சோகம் மண்டிக்கிடக்கிறது; வாழ்வின் அடங்கியபொருளை, ஒவ்வொரு சுவாசமும் விளக்கம் செய்கிறது; வாழ்க்கைப் புதிர், சோகவாயிலாகவிமர்சனமடைகிறது. தினந்தோறும்,

நாம் ஒவ்வொருவரும் தனிமையிலே துவண்டு திரிகிறோம்; விழிப்படையும் வழியிலே, நமது கனவுகள் மைல் கற்களாகக் காட்சியளிக்கின்றன.

மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து பிறந்து வாழ்கின்ற மனிதனின் தலைவிதி கடுமைதான்; தாயின் கருவிலிருந்து என்றுதான் விடுதலை கிடைக்கும்? புதைகுழியினின்று திரும்பவும் உயிர்பெற்றுவர, நீயே முயன்று முயன்று தடிக்கின்றாய்!

" அந்திவேளை "

அந்திவேளை மங்கி மறைகிறது: சூரியன் மறையும் போது, அந்திமாலை எதையும் தொட்டுத் தழுவியே பிரிகின்றது. அதேபோல, அருணோதயம் நம்மை மீண்டும் மீண்டும் முன்பின் அறியாத இரகசிய முடிவுக்கே இழுத்துச் செல்கின்றது. ஒவ்வொரு நாளும், தோன்றியே மறைகிறது; மடிகிறது.

ஐயோ! என் வாழ்க்கையிலிருந்து மற்றொரு நாளும் மறைந்துவிட்டதே! மீண்டும் ஐயோ! என்று கதறுவதற்குள், மறு தினமும் மறைந்துவிடும். நாளை மற்றொரு புதிர் வாழ்க்கையில் வந்து குறுக்கிடும். அதிலே மற்றொரு துன்பம், மற்றொருகனவு, மற்றொரு நம்பிக்கை, மற்றொரு வியாகூலம்; துன்பத் துடிப்பிலே ரோஜா மலரின் சென்னிறமும் பாதையிலே மின்னலிடுகிறது.

" நிழலும் ஒளியும் "

ஒளி தனிச் சிறப்போடு தோன்றி மறையும் பிரபு: அருணோதயத்திலே, தனியே நடந்து சென்று காலையிலே வெள்ளி ஆடையிலும் மாலையிலே பொன்னுடையிலும் காட்சியளிக்கின்றார்; நிழல், மேல்ஜாதி பெண்ணழகிபோல, ஆடம்பரமான ஆடையிலே, ஒளிப்பிரபுவைத் தழுவி நிற்கின்றாள்.

"தனிமை"

தனிமையிலே இனிமை ததும்பி நிற்கின்றது; நிகரற்ற தனிமையிலே, உண்மை ஊறிக்கிடக்கிறது;

உலகக் கவலைச் சுமையினின்று விலகி நிற்கின்றது, தனிமையின் இனிமை; நித்திய புழுதி படிந்த பழைய பேச்சினின்று விலகி நின்று, இன்பம் தருகிறது தனிமை; எளிமையிலே, தனிமை தெய்வத் தன்மை கொண்டு ஒளிவீசுகிறது; தனிமையிலே அலங்காரமின்றி அமைதி நிலவுகிறது; தனிமையிலே, இரவு வெள்ளிக்கனியைத் தருகிறது, பகல் பொன்மலரைத் தருகிறது.

"வாழ்க்கைத் தோணி"

படகுக்காரா! தோணியைச் செலுத்துவாய்! வாழ்க்கையே ஒரு படகு; எங்கும் புயல், எங்கும் மின்னல், எங்கும் இடி, எங்கும் மனக் குமுறல், எங்கும் காற்றின் கதறல்!

இந்தப் புயலிலே, என் காதலனை அழைத்துச் செல்ல முடியவில்லையே! ஐயோ! இடியே, கருணையற்ற மின்னல் வெறியே!

காதலன் சொல்லுகிறான்: "இடியையும் மின்னலையும் கண்டு என் உள்ளம் நடுங்கவில்லை. மனம் சிதறினாலும் சரி, உடலே சிதறினாலும் சரி, இந்தப் படகே கவிழ்ந்தாலும் சரி, காதலியே! உன்னைத் தழுவியே நிற்பேன்! இதுவே உறுதி."

மரணமே குமுறி நின்றாலும், காதலன் காதலியைத் தழுவியே மறைவான்.

" துன்பத்திரை "

துன்பத்திரையிலே, மனிதன் துடிக்கின்ருன்; நாட்கள் சிதறியே ஓடுகின்றன; துன்பம், மனிதவடிவத்திலே மிதந்து வருகிறது;

ஒவ்வொரு நொண்டியிடமும், ஒவ்வொரு குஷ்டரோகியிடமும் துன்ப ஒலி பீறிட்டு நிற்கிறது;

துன்ப எல்லையிலே, துடிக்கும் உள்ளங்கள் கோடானு கோடி; மனித வடிவிலே, துன்பம் பெருக்கெடுத்தோடுகிறது. ஐயோ! பரிதாபம்!

இரண்டு சிரிக்கும் கரைகளினூடே, காலம் சுழன்ரேடுகிறது;

என் இதயமோ, ரோஜா மலர்போல, வெளுத்து நிற்கிறது; கால அலைகளிலே, என் இதய மலர் உணர்ச்சி இழந்து நிறமிழந்துதுடித்து, புயலோட்டத்திலே அலைகிறது.

" கவிஞன் "

நான் ஒரு தனிப் பாடகன்; தனியே நான் பாடிவருகிறேன். யாரையும் பின்பற்றியல்ல. தனியே, தனி மனப் போக்கிலே மனஉறுதியோடு, என் இதய இரகசியத்தையே இசைக்கின்றேன். நிகரற்ற சிந்தனைச் சிகரத்திலே நிற்கிறேன்.

துன்பம், ஒரு மௌனமலை; அதையும் கடந்தே பாடி நிற்கின்றேன்.

யாரும் எனக்கு நிகரில்லை; என் இதய வெறி, பேனுமுனையிலே, பெரு வெள்ளமாகவே, துன்பத்தையும் தாண்டியே, ஓடோடியும் வருகிறது. எனது பேனு முனை

யிலே, உண்மையின் துறைமுகம் விரிந்து நிற்கிறது. என்ன அதிசயம், கவிஞனின் இதயம்!

" கலைஞன் "

மண்ணிலே, கவிதை மலர்கள், பூத்துக் குலுங்கி மின்னலிடுகின்றன;

தனிமையிலே இனிமை தருவது கவிதை மலர். இயற்கையிலே, அழகுவெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. கலைஞன் உள்ளத்திலே, சோகம் குரலெடுத்து இசைக்க ஆரம்பித்துவிட்டால், பூமியே ஒரு வறண்ட உலகமாக மாறிவிடுகிறது; துன்ப இறுதியிலே, இயற்கையே இனிய கீதம் பாடி சாந்தி வழங்குகிறது. கலைஞன், கலையாவேசத்திலே கதறுகிறான்; அவன் உள்ளத்தின் ஆழத்திலே, சிறந்த சிந்தனையலைகள் குமுறி நிற்கின்றன; கலைஞன் அழகின் முகத்தையே கண்டு கண்டு, அழகின் இனிய அமுதையே போதை வெறியோடு குடித்துக் கும்மாளியடிக்கின்றான். என்ன அற்புதம்!

" வருணம் "

சோகத்தைத் தணிப்பது வருணம்; அலங்கார வருணச் சிறகோடு பறக்கும் பட்சிகள், இன்பம் ஊட்டுகின்றன; வானவில், வருணக் களஞ்சியமாகக் காட்சியளிக்கிறது; பகல் மேகங்கள், நிர்வாணமாக வெள்ளையாக, வெள்ளி நிறத்திலே ஓடி அலைகின்றன; எனது சொல் வலையிலே, இந்த வருண விசித்திரங்களைப் பிடிக்கின்றேன்.

நான் ஒரு பாடகன்; யாப்பிலே கவிதை கட்டுகிறேன்; ஆகாசம், தூசி இவைகளின் எழிலையே கனவு காண்கின்றேன்; வருணங்கள் கலந்து இழையும்போது, இன்பவெறி விரிகிறது;

வருணக்காட்சிகளைக் காணவிட்டால், எனது உள்ளம் சாம்பி ஒடுங்கிவிடும்; வருண விசித்திரக் கோலத்திலே, என் இதயம் மூழ்கி மூழ்கி வெளிவரும்போது, துன்பம்கூட வருணத்துக்கு மெருகேற்றி நிற்கிறது.

சோக வளையத்திலே, வருணம் 'டான்ஸ்' ஆடுகிறது. சோகம் சுந்தர வளையம். சோகம் மின்னல் வளையம். சோகம் சிரிக்க முன்வரும்போது, வாழ்க்கை வருணஜோதியாகக் காட்சியளிக்கிறது.

ஹரீன் கவிதைகளைப்பற்றி அரவிந்தர் சொல்லுகிறார்: "ஹரீன் கவிதைகளிலே, புதுமையும், அகண்ட சக்தியும் மேதாவிலாசமும் கலந்து மின்னலிடுகின்றன; இறை, இயற்கை, வாழ்க்கை, யோகம், இவைகளைப்பற்றி மிக நுட்பமான ஆங்கில மொழியில் பாடியிருக்கிறார். பாஷையின் கூர்மையும், புதுமையும், சக்தியும், யாரையும் வியக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. வாழ்க்கையை ஆன்மீக அஸ்திவாரத்தில் அமைத்து, மனித உரிமையைக் காக்க வேண்டும் என்பதுதான், ஹரீனின் சிறந்த லட்சியம், குறிக்கோள்; கவிஞனின் சொற்கள் புதிய முறையிலே இதய முத்திரையுடன் பட்டையிட்டு வெளிவருகின்றன."

லாரன்ஸ் பின்யன்: "ஹரீன் கவிதைகள் உண்மையான கவிதைகள்; ஆங்கில பாஷையை அருமையாகச் சிறந்த லாகவத்துடன் கையாளுகிறார். யாரும் அதிசயிக்கத்தக்க நிலைமையில், பாஷை கவிஞனின் கையில் பொலிவுற்று மின்னலிடுகிறது."

ஆலிஸ் மேய்னல்: "ஹரீன் கவிதைகளிலே, கீழ்நாட்டு மேல்நாட்டுக் கற்பனைச் செல்வங்கள் அனைத்தும் கலந்து, உண்மையை அருமையாக அலங்கரிக்கின்றன. அவருடைய கவிதைகளைப் படிக்கும்போது, என் இதயத்தில் பேருவகை உண்டாகிறது."

ஹரீந்திரநாத் கவிதை மலர்கள்

பாடிரியக் காலம்: "ஆங்கில யாப்புமுறையை இவ்வளவு அருமையாக ஹரீன் கையாளுவதை நினைத்தால், ஆச்சரியமாக இருக்கிறது."

ஹாரால்ட் சைல்ட்: "ஹரீன் கைகளிலே, ஆங்கில பாஷையும் ஆங்கிலக் கவிதையும் புதுமையும் புதிய வனப்பும் பெற்று வளர்ந்திருக்கின்றன. இதை எந்த ஆங்கிலேயனும் செய்ய முடியாதபடி, அவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கிறது, ஹரீன் கவிதை."

ஜேம்ஸ் கசின்ஸ்: "ஆன்ம ஒளியை இறைவிளக்கமாகக் காட்டிக்கொண்டே நிற்கிறது ஹரீன் கவிதை. துன்பத்தையும் சோகத்தையும் மறக்கச் செய்யும் ஆற்றல்வாய்ந்த அபூர்வமான கவிதைகள்தான்."

லண்டன் குவார்டர்லி ரெவியூ: "ஹரீந்திரநாத்-சடோபாத்தியாய, இத்தனை சிறந்த லாகவத்துடன் எங்கள் ஆங்கில மொழியைக் கவிதையில் வழங்குவதை நினைக்கும்போது, ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. இறையொளியை, ஆன்மக்கதிராக, சொற்கிரணமாகச் சித்திரித்துக் காட்டுகிறார்."

★

ஓடையின் இரகசியம்

[ரோசெட்டி (Rossetti) என்ற ஆங்கிலக் கவி, எழுதும் கவிதை யெல்லாம் சொற் சித்திரமாக உதயமாகும்: இதயக் குகையி னின்று, உணர்ச்சியைப் பின்பற்றி, ஓவியச் சிகரங்களாகவே சொற் கள் எழுந்து நின்று பேசும்; கருத்தின் உயர்ந்த நிலையைச் சொற்கள் எடுத்துக் காட்டுகின்றன. காதற் குழப்பத்தில் இதயத்தைப் பறிகொ டுத்த ஒரு காதலனின் இதயத் துடிப்பே, இந்தப் பாட்டு — ஒரு ஓடையின் இரகசியம்.]

காதலியைப் பிரிந்த காதலன் இதயத்துடிப்புடன் புலம் புகிறான். முன்னொருநாள், அந்திப் பொழுதில், தலைவன் தலைவி இருவரும், ஒரு இன்பம் நிறைந்த மௌன ஓடை யின் அருகே, மௌனமாகவே சந்தித்தார்கள். இந்த இன்ப நிகழ்ச்சிக்கு இந்த மௌன ஓடையே உறுதியான சாட்சி. காதற் குறிப்புடன் காதலன், காதலி இருவரும் ஒருவரை யொருவர் உணர்ந்தபின், உள்ளம் நெகிழ்ந்து நெருங்கி வந் ததும், உணர்ச்சியின் மிகுதியால், இதயம் குமுறிக் காதற் புயல் வீசவும் ஆரம்பித்துவிட்டது. தலைவன் தலைவியின் இதயங்கள் கலந்து புலம்பவும், இந்த மௌன ஓடையும் தனது இதயத் துடிப்பை காதற் கண்ணாடிபோலப் பிரதி பலிக்கத் தொடங்கியது. தலைவியின் கூந்தல் புலம்பி அலைந் தது; அவளுடைய உதட்டின் செந்நிறம் மின்னிப்பாய்ந்தது. "ஒரே முத்தத்தில், எங்கள் காதல்தாகம் தீரலாகாதா?"— என்று உறுதியாகச் சிந்திக்கிறான், தலைவன். காதலர்களின் உள்ள நெகிழ்ச்சியுடன், காலமும் கரைந்து துணை செய்ய லாகாதா? நிமிஷங்கள் வீணாகத் துடித்து மடிவதைவிட, காதலர்களின் உள்ளத்தில் ஜீவனுடன் விளங்கலாகாதா? இதே ஓடை காய்வதுமுண்டு, விம்மிக் கரை புரண்டோடு வதுமுண்டு!

ஓடையின் இரகசியம்

காதலின் மொழி, மர்ம மொழி; பல இரகசியத் துடிப்புகளுடன் புரண்டு புரண்டு குமுறிக்கொண்டு வருவது; ஓடையே! உனது அலைகள் குமுறிப் பல சித்திரத் தோற்றங்களை மறைத்தும் அழித்தும் வருவதுபோல, காதல் அலைகளும் கருத்தையும் தோற்றத்தையும் அழிக்கும் ஆற்றல் கொண்டனவோ? காதலோடையில், ஞாபகம் மங்கி மறையுமோ? மூளையும் முறியுமோ?

ஆஹா! தலைவியின் கன்னத்தில் மின்னிய ஒளியை மறக்க இயலுமோ? அவ்வழகியின் கண்ணில் சிறையுண்டு கிடந்த இன்ப வெள்ளத்தை மறக்கமுடியுமோ? அவள் இதயம், அவள் உதட்டிலே சிவந்து மின்னி வட்டமிட்டது. காற்றில் திரிந்த அவளுடைய ஆடை, ஓடும் நிமிஷத்தையே சிறைப்படுத்தியது. இரவு நீண்ட இன்ப இரவாகவே திரண்டு விரிந்து பொலிந்தது; கலந்த இதயங்கள், கருத்தின் ஆழத்தில் மிதந்து மிதந்து உறங்கி விழித்தன; எல்லாம் இன்பம், இன்பம்! இனிய கைகள், இனிய கூந்தல் வெள்ளம், இனிய கன்னங்கள், தித்திக்கும் கண்கள், இன்ப வாய், இவையே என் ஒப்பற்ற காதலியின் தோற்றம்! மறக்கவொண்ணுச் சித்திரம்! இதுவே எனது காதல் விண்!

எனது தலைவியைப் பிரிந்த நான், மீண்டும் என்று, எங்கே அவளைச் சந்திக்கப்போகிறேன்? காலம், எனது மனதைத் தனிமையில் வெட்டிப் பிளக்கிறது! எனது மனமோகனக் காதலியை என்று கண்ணெடுத்துப் பார்ப்பேன்? ஹா! மௌன ஓடையே! உண்மையைச் சொல்! எனது பொறுமை வெடித்துவிடும்! எனது இதயம் குமுறுகிறது, உள்ளம் துடிக்கிறது,—எனது உண்மைத் தலைவியின் கண்கள் என்முன் மீண்டும் வந்து விளையாடுமா? மௌன ஓடையே! எனது கண்ணீரை மறைக்க, நீ கொஞ்சம் உளறலாகாதா?

ஆ! காதல் வசந்தம் மறைந்துவிட்டது!

கடற் பாட்டு

சித்தரஞ்சன் தாஸும், ஸ்ரீ அரவிந்தரும்

கடல் ஒரு அபூர்வ சிருஷ்டி.. இயற்கையின் அகண்ட சக்தியை மௌனத்தாலும் பேரொலிப் பெருக்காலும் விளக்கும் ஆற்றல் வாய்ந்தது; கடலில் கர்ஜிக்கும் கவிதை வெள்ளத்தை சித்தரஞ்சன் தாஸும், அரவிந்தரும் நன்கு உணர்ந்தவர்கள்; இருவரும் கவிகள்; வங்க மொழியில் சித்தரஞ்சன் தாஸ் இசை யோவியமாகப் பாடிய 'சாகர்சங்கீத்' என்னும் பாடலை, அரவிந்தர் உயர்ந்த கவிதா ரீதியில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்; இரண்டு கவிதா இரத்தினங்களின் உள்ளத் துடிப்பையும் ஆத்ம விகாசத்தையும் இந்தக் கடற் பாட்டில் நாம் கண்டு களிக்கலாம்.

அலைகள் அசைகின்றன, அலைகின்றன, அசைக்கின்றன, ஒலிக்கின்றன, ஒடிகின்றன, ஒடிக்கின்றன; அலைகள் ஆகாசத்தின் நிறங்களை ஜீரணித்து, சூரிய கிரணங்களை விழுங்கி, சந்திர கிரணங்களைக் கொஞ்சி, மௌனப்பூட்டை உடைத் தெறிந்துவிட்டு, கர்ஜிக்கின்றன, பாடுகின்றன, ஆடுகின்றன, வருண ஜாலத் தோகை விரித்து ஆடுகின்றன! ஆஹா, என்ன சப்தஜாலவெள்ளம்! இனிக் கடற்பாட்டை நுட்பமாய்க் கேட்போம்.

மௌனக்கடல், சந்திரகிரணங்களை ஆனந்தமாய்க் குடித்துக்கொண்டு, என் இதயத்தில் அகண்ட இசைக் கடலைத் தூண்டி, கவிக்கனவில் ஆழ்த்துகின்றது. ஆகாசமும் கடலுடன் கலந்து, ஒரு விந்தையாகவே என் முன் காட்சியளிக்கிறது. கடலின் இசையை, எனது பாட்டின்

இசையில் நெய்தே தீருவேன்; கடலின் மௌனமும் எனது பாட்டின் மௌனத்தில் ஓய்வற்று ஒலித்துக் கொண்டே நிற்கும்!

இனி அருணோதயம்! காலையின் விசித்திர ஒளி, கடலின் முகத்தில் மௌனமாகவே பரவிப் பரவி, ஒளியின் ஜோதி ஒலி வெள்ளத்தையே சூழ்ந்துகொண்டது. கடலே! இசைக்கும் இன்பக்கடலே! உனது குரலின் அகண்ட இனிமையும், உனது இதயத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வரும் இரகசியங்களும் எனக்கு விளங்கவில்லையே! தேவகானமாகவே உதயமாகிறது,' உனது இராக ஜோதி!

காலை வனப்பில், உனது உதய இராகத்தில் என் இதயம் ஓய்வற்றுத் துடிக்கிறது; உன் அலையதிர்ச்சியிலும், இசைக்குரலிலும், ஒரு அகண்ட ஆத்ம நிலை சாந்தியுடன் தவழ்ந்து வருவதைக் காண்கிறேன்; அருணோதயப் பொலிவில் மின்னி வட்டமிட்டு வருகின்ற உனது அகண்ட சக்தியிலும் எல்லையற்ற நாதபேரிகையிலும், நான் கடவுளின் எல்லையற்ற குரலையே கேட்கிறேன்! இன்பமும் துன்பமும், கண்ணீரும் சிரிப்பும், ஒளியும் நிழலும், ஒன்றையொன்று வேகமாய் வேட்டையாடி வருவதை, உனது அலையோவியத்தில் உறுதியாய்க் காண்கிறேன்.

கடலின் காதில் இன்பநாதம் கொப்புளிக்கும் படியாக, அருணோதயம் தனது இசைக் குழலை ஊத ஆரம்பித்து விட்டது; அலைகளின் மேட்டிலும் பள்ளத்திலும் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் எவ்வளவு ஆனந்தமாகக் குதித்துச் சிரித்து விளையாடுகின்றன! கதிரவனின் தங்கஜோதி, கடலிற் புகுந்து தங்க அலையையே சிருஷ்டித்து விட்டது; கடலே, ஒரு கானப் பட்சியாக மாறிவிட்டது; இவ்விசைப் புள்ளின் ஒளிச் சிறகுகளிலும், துடிக்கும் நெஞ்சிலும், தங்கக் கனவு தெளிக்கப்பட்டிருக்கிறது. குரல், ஒளி இரண்டுமே கலந்து விளையாடும் காற்றில், பல வாழ்க்கையின்

மர்மங்கள், ஆத்ம விகாச ஒலிச்சிதர்கள், துன்பத்தின் உள்ளச் சித்திரத்தையே கரையேற்றுகின்றன; கடலின் காம்பீரிய நாதம், எனது இதயத் தசைகளைத்தழுவி, என் மனதையே ஒரு வீணையாகச் சிருஷ்டித்துவிட்டது. அருணோதயக் கடலைக் கண்ட கவிஞன், ஒரு கலாயோகியாகவே மாறி, இசையின் எல்லையற்ற தன்மையையே இசைக்க எத்தனிக்கிறன்.

ஓ கடலே! உனது அகண்ட கானத்தைப்பாட எனக்குக் குரலில்லை; சொல்லில்லை. அலையோவியத்தை எனது மொழியில் சித்தரிக்க முடியவில்லை; அலையின் அகண்ட அதிர்ச்சியில் எனது மொழியே முறிந்து பெருமூச்சிடுகிறது; காலைக் கடலைக்கண்ட எனது மனதில், வடிவற்ற சொற்கள் தோன்றி மறைகின்றன. ரூபமற்ற சொற்கள் உராய்ந்து உதிர்கின்றன. என் சஞ்சல மனதை, உனது இசைக் குழலாகவே கொண்டு ஒலி பரப்புவாயாக. ஓ அகண்ட இசைக்கடலே! உனது ஆத்ம இரகஸியங்களை, என் மனக் குழலைக்கொண்டு, உலகமறிய இசைப்பாயாக! இரவின் இருட்டிலும், பகலின் ஜோதியிலும், என் மனதை அலைத்திசைப்பாயாக!

என் மனம் ஒளி மணம் நிறைந்த மலர்; எனது வாழ்க்கை, தொடர்ந்த முடிவற்ற நாத அலைத் தொடர்பு; உனது கரையற்ற நாதப்பிரம்மத்தில், எனதுஆத்மா லயித்து நிற்கிறது. ஓ கடலே! உனது இசையலைப்புரட்சியில், கவிதையே அலைந்தலைந்து பாடிப் பறந்து வருகிறது! உனது அமரநாதத்தில், என்இதயமே மலர்ந்து மணக்கிறது.

நீ ஒரு அகண்ட விந்தை நிறைந்த ஓவியன். பச்சை, முத்து, நீலம் முதலிய பல ஜீவிய வருணங்களில், நீ அலைக்கரங்களால் தீட்டும் படங்கள், உயர்ந்த ஒப்பற்ற ஓவியச் சிகரங்கள்; நீ ஒரு வருணக்கடலாகவே, கொந்தளித்துக் கொப்புளித்து வழிந்தோடுகிருய்; உலகமே,

நாதத்தில் ஐக்கியம். காலமும் இடமும் நாதஇசையில் துடிக்கின்றன, எனது உள்ளமும் உனது இசை வெள்ளத்தில் குதித்து மறையுமா?

உனது அலையின் அதிர்ச்சியில், மரண கீதமும் தவழ்ந்தோடியா வருகிறது! சிருஷ்டி ரோஜா, இன்ப துன்பத் துடிப்பில், அலையின் முதுகில் மிதந்து மிதந்து வருகிறது! எனது சின்னஞ் சிறு நாள் சிதறவே, மலரின் இதழும் உதிர்கிறது. வாழ்க்கையைச் சூழ்ந்து முறிக்கும் மரண சக்தியே! உனது வெற்றி, நிறைவெற்றியல்ல, தோல்வியே! துன்பச்சிகரத்தில், உயிர் துடிக்கும்போது, மரண வெற்றி வெற்றியாகுமா? தோல்வியடைந்த மரண கீதமும் கரைந்து சக்தியற்றே மறைகிறது. அமரமலரில், நிமிஷ நாதம் மறைகிறது.

நில வொளியில், கடல் உறங்கும்போது, என்ன அதிசயம்! ஆஹா! மௌனத்தின் அகண்டம் மின்னொளி வீசுகிறது! உனது எதிர்க்கரையில் மௌனமாய் நின்றுகொண்டு, நான் உனது முகத்தையே உற்றுப்பார்க்கிறேன்! ஆ! உறக்கமே! உறக்கமே! என்ன மௌன நிலை! என்ன நிசப்தம்! உனது அகண்ட அதிசய மௌனத்தில், எனது இதயம் குரலையிழந்தத; எனது ஆத்மா, உனது ஆழ்ந்த உறக்கத்தையே உற்று நோக்கியது!

இந்த நிலையில், உனது அகண்ட அலைக்கரத்தால் என்னை அணைந்துகொள்வாயா? பல ஆண்டுகளின் இன்ப துன்ப அதிர்ச்சியில், எனது ஆத்ம விகாசக் கம்பிகள் இவ்வுணர்ச்சிகளையே விக்கி விக்கிப் பாடுகின்றன!

பகலை இரவு அணையும்போது, உனது இதயமும் எனது இதயமும் கலந்தே ஐக்கியமடைவதில் ஐயமுண்டோ?

கடற் பாட்டு

கடலே! உனது மௌனத்திலும் கர்ஜனையிலும், பிறவாமையும் இறவாமையுமே ஒலித்துக்கொண்டிருக்கின்றன. பல யுகங்கள், உனது அலையுறக்கத்தில், மறைந்துவிட்டன; கோடான கோடி ஜீவராசிகள் உனது விந்தை மௌனத்தில், ஒலியிழந்துவிட்டன; ஆத்ம ஒளியின் ஆதியும் அந்தமும் உன் மௌனத்திலே மறைந்தொலிக்கின்றன; உனது அகண்ட நிசப்த நிலையில், ஓராயிரம் மௌனக் கவிதைகள் மலர்ந்து மணம் வீசி மறைகின்றன; ஒரு நாள், கடலின் இடி வெள்ளத்தில், எனது ஆத்மா குளித்துக் குளித்துக் குமுறியெழுந்தது; கடலின் மௌன முனைகளில், அகண்ட நிஸப்தம் ஆத்ம விரிவின் மௌனத்தையே சித்திரித்து நின்றது.

இரவு! இருட்டின் போர்வை அலைமேல் சிதறிக் கிடந்தது. இரவின் மையிருட்டில், அலையின் நாதம் இருண்டு குமுறிக் குமுறித் தத்தளித்துக் கரையில் வந்து மோதிப் புரண்டோடியது! பல அலைகளின் சம்பாஷணையில், வாழ்வும் மரணமும் போரிட்டு வாதமிட்டு மொழிச் சிலம்பம் வீசின; ஆத்மா, ஒரு இருண்ட நிழல்போல அலைந்தது; மெய்யொலியில், பொய்யொலிகள் வந்து மோத முயன்றன. ஆ! என்ன பயம். என்ன நம்பிக்கை, என்ன உண்மையொளி!

இருட்டலை என் இதயத்துட் புகுந்து, என்னை ஒரு மங்கலான கோயிலாகவே மாற்றிவிட்டது. ஓ கடலே! யாரை நீ பூஜிக்கின்றாய்? எனது ஆத்மாவை ஒரு அஞ்சலி விளக்காக, யாருக்கு எடுத்துக் காட்டுகின்றாய்? நீ ஒலிக்கும் மந்திர சக்தி யாது? உனது தோஞ்சலியின் பொருளென்ன? எனது இதயத்தின் ஆழத்தில், உனது மந்திர சக்தியைக் கொட்டி மௌனநிலையை வளர்ப்பாயாக?

இருட் குன்றின் தலையில், விண்ணில் சந்திரன் மறைய, நட்சத்திரங்கள் கரைய, எங்கும் மௌனம், எங்கும்

அமைதி; எங்கும் இருள் இரட்டித்துக் கெட்டியாகப் பாறை வளர்கிறது; இருட் குகையில் ஒளி சிறைப்பட்டுக் கிடக்கிறது; தனியிட்ட கனவின்பத்தில், காலமும் மரணமும் கடலின் காலடியில் கைதிகளாகக் கிடப்பதைப் பாருங்கள்; இறைவன் ஒளி தெரிகிறது. ஆனால், என்னால் இறைவன் திருவடிகளை எட்டித் தொடமுடியவில்லை; கடலே! ரூபமற்ற சௌந்தரியத்தில், எனது ஆத்மா உனது அலையுள்ளத்திற் கலந்துவிடவே அவாவுகிறது!

எனது ஆத்மாவைச் சுற்றி விண்ணொலி கேட்கிறது; இறைவனைக் காதலிக்கும் எனது இதயம் துள்ளிக் குதிக்கிறது. மறு கரையில் கேட்கும் விண்ணொலி, அபூர்வமான மங்கள நாதம்! எதிர்க் கரையிலிருந்து, இருளை விரட்டும் ஒளிக்கதிர் வெள்ளமிட்டு வருகிறது! எனது பழைய வறண்ட ஆன்மா, இறைவன் சந்நிதியில், புதுப் பொலிவுற்று மின்னி மின்னிக் கலந்து நெகிழ்ந்தது!

சித்தரஞ்சன் தாஸின் கடற்பாட்டு எப்படித் துடித்துக் குமுறிக் கொந்தளித்து வருகிறது, பார்த்தீர்களா? வங்க மொழியில் அது ஒரு நாதச் சுரங்கம், கீதப் பொக்கிஷம்! மஹான் அரவிந்தர், நிறைந்த கவிதைப் பண்புடன், ஆங்கில மொழியில் எவ்வளவு நயமான மொழி பெயர்ப்பைச் சிருஷ்டித்திருக்கிறார்? வங்க மொழி கீத ஜாலங்களைக்கூட, ஓரளவு அரவிந்தர் ஆங்கில மொழியில் சித்தரித்துக் காட்ட நல்ல முயற்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறார் என்றுகூடச் சொல்லிவிடலாம். தாஸும் அரவிந்தரும் அனுபவிக்கப்படவேண்டியவர்கள். சாதாரண மனிதர்களின் ஆராய்ச்சிக்கு மேற்பட்டவர்கள். அதி நுட்பமான மேதைகள்; அவர்களுடைய வாழ்க்கைகளும் நூல்களும் உயர்ந்த படியில் பிறந்தவை.

★

தாகூரும் வில்லியம் பிளேக்கும்

ரவீந்திரநாத் தாகூர் ஒரு அருட்கவி; வில்லியம் பிளேக்கும் அருட்கவி. பள்ளிப்படிப்பை இருவரும் விரும்பவில்லை; அநேகமாய் வெறுத்தார்கள் என்றே சொல்லலாம். பிறவிக் கவிகள் இருவரும்: இதயத்தில் கவிதை மின்னிப் பறந்து வட்டமிட்டது. அருள்சுரந்து வளரும் இலக்கியம், தன்னையறியாமலே சிந்தனைக் குன்றில் மௌனமாகவே சிகரஜோதியாக பலவருணங்களுடன் இயற்கையை ஒட்டியும், அதையே சில சமயம் மிஞ்சியும், புரட்சி வடிவத்தில் சிறகடித்து வருவது இயல்பு.

செயற்கைக்கல்வி, இலக்கண வரம்பிற் கட்டுண்டு புதுப் புதுக் கற்பனை உலகங்களுக்குச் செல்லாமல், இருண்ட ஞாபக சக்திக்கு என்றும் அடிமையாகவே உறங்கிக் கிடக்கும்.

கவிதையின்பத்தையும், காதலின்பத்தையும், குழந்தையின்பத்தையும், தாகூர் அனுபவித்து, விடாது அனுபவித்து, இறுதியில் துன்பத்தீயில் தன் அனுபவங்களையெல்லாம் கவிதைத்தீயாகவே மாற்றிவிட்டார். மனைவியும் சில குழந்தைகளும் இறந்த பின், 'கீதாஞ்சலி' மௌனப் புயலாகப் பிறிட்டெழுந்தது. வில்லியம் பிளேக், தன் காதலியுடன் வறுமைப் புயலை நேரே சந்தித்தான்; வறுமைப் புயலை மிஞ்சியது அவனது கவிதைப்புயல்.

கடவுளின் திருவுருவை, அருளின் விரிந்த அழியாத ஜோதியாக இரண்டு உண்மைக்கவிகளும் உணர்ந்தார்கள். 'எங்கும் இறைவன்' என்பதை, பிளேக் ஒவ்வொரு நிமிஷமும் உணர்ந்துணர்ந்து இன்புறுவான். பைபிளை (Bible)

தாகூரும் வில்லியம் பிளேக்கும்

தாகூரும் பிளேக்கும் நன்கு படித்து, அதில் உள்ள கருத்துக்களையும் தூய இலக்கிய நடையையும் பின்பற்றியிருக்கிறார்கள்.

வைஷ்ணவகீதங்கள், உபநிஷத்துக்கள், காளிதாஸன், ஷெல்லி, கீட்ஸ், பிரௌனிங், விட்மன், பிளேக், ராசெட்டி முதலான பழைய இலக்கியங்களைப் படித்து இன்புற்று, அவைகளின் நயமான பகுதிகளைத் தாகூர் தனது புதுக் கவிதைகளில் மலர்ந்து பரிமளிக்கச் செய்தார். மில்டன், ஸ்வீடன்பர்க் முதலிய தீர்க்கதரிசிகளின் கருத்துக்களையே பருகிப்பருகி, அவர்களையுங்கூட சில இடங்களில் மிஞ்சிவிட்டான் வில்லியம் பிளேக். பிளேக், கருத்தின் சிகரத்தில், அகராதியை எதிர்த்து நடையையும் மொழியையும் சிருஷ்டிக்கும் சன்னதக் கவிச்சுடர்.

பிளேக்கின் சிந்தனைச் சூத்திரங்கள் (Blake's Aphorisms) தங்க மின்னல்கள்; தாகூர் எழுதியிருக்கும் சிந்தனைக்கோவை (Stray Birds; Fire-Flies) யிலும், அவர் பிளேக்கினுடைய உயரத்திற்குப் போகவில்லை. அந்த முறையில், பிளேக்கின் இலக்கியப் பழமொழிகள் ஆழ்ந்த சிந்தனையினின்று எழுந்தவை; கருத்தின் ஆழத்தில் கவிதை மின்னித்துடிக்கிறது. "மிஞ்சியதுக்கம்சிரிக்கிறது; மிஞ்சிய இன்பம் அழுகிறது." "ஒரே மரத்தை, அறிவுள்ளவனும் அறிவிலியும் வெவ்வேறு முறையில் அறிகிறார்கள்." "சிருஷ்டி இரகஸ்யம், பெண்மையில் உறங்கி விழிக்கிறது."

பழமொழி நடையில், பிளேக் கூர்மையான உறுதியான ஆத்ம விஸ்தீர்ணம் உள்ள சொற்களையே வழங்குகிறான். அவன் கண்ட சொற்கள், தித்திக்கும் சொற்கள். தாகூரின் நடை தாய்மொழியான வங்கத்தில், இசைச் சிறப்புடையது; அதே போல, பிளேக்கின் ஆங்கில நடையில், இசையும் சுழல்கிறது. பிளேக் புலியின் கண்களை இரவில் கண்டு வியந்து வியந்து, இந்தக் கொடிய ஜோதி

யைச் சிருஷ்டித்த தெய்வமே, சாந்த சொரூபியான ஆட்டுக் குட்டியையும் ஆக்கியிருப்பதை நினைந்து நினைந்து, இந்த வித்தியாசத்தின் உண்மைப் பொருளை, கண்ணீரின் உட் பொருளில் உணர்ந்து அனுபவிக்கிறான். உணர்ச்சியின் தீக்குன்றில், இதயக் குறிப்புகள் தாய்மொழியின் மார்பில் உண்மை சுரக்கின்றன.

பிளேக் எழுதிய குழந்தைப் பாடல்களும் (Songs of Innocence), தாகூர் எழுதிய குழந்தைப் பாடல்களும் (The Crescent Moon) ஒன்றை யொன்று ஒத்திருக் கின்றன. தாகூர் பிளேக்கின் கருத்தைத் தழுவியே, பாடி யிருக்கிறார். கருத்தில் ஒற்றுமையே தவிர நடையில் வேற்றுமை யுண்டு. பிளேக் ஒரு சொல்லில் சித்திரிப்பதை, தாகூர் ஐந்தாறு சொற்களால் விரிக்கிறார். பிளேக்கின் நடை ஊசி நடை; தாகூரின் நடை அருவி நடை. சில இடங்களில், இருவரின் நடையும், மயிலின் பல வருணக் கலாபத்தை ஒத்து விளங்கும்.

சில இடங்களில் பிளேக்கின் நடை சித்திர நடையாக வும், சிற்ப நடையாகவும் உதயமாகும்; "இரவில் வானத்தில் சந்திரன் மலர்ந்து புன்முறுவலுடன் கொலு வீற்றிருக்கும்போது, ஒரு பழுத்த சிங்கத்தின் சிவந்த கண்கள் தங்கக் கண்ணீர் சிந்துகின்றன." இதுவே சித்திர நடை; இதில் காவியமே ஓவியத்தில் ஐக்கிய மடைகிறது. (Picturesque Style.)

பிளேக், தாகூர் இருவரும் கலாயோகிகள். கவிதை யில் படமும், படத்தில் கவிதையும் காணும் ஆற்றல் படைத்தவர்கள். பிளேக், மைகேல் ஏன்ஜலோ (Michael Angelo)வைப் பின்பற்றி நுட்பமான சித்திரங்களும் படங்களும் எழுதுவான்; தாகூரின் படங்களும், உணர்ச்சி நிறைந்த படங்களாயிருந்தாலும், பிளேக்கின் ஜோதிப் படங்களுடன் சரிநிகராய் நிற்குமா?

பிளேக் 1757ல் பிறந்து 1831ல் மறைந்தான்: தாகூர் 1861ல் பிறந்து 1941ல் மறைந்தார்.

மாறும் சமுதாயம்

இளைஞர் பிரச்னைகளிலே, நமது பாரத நாட்டிலே, இன்றைய சமுதாய நிலை, காலத்தை ஒட்டி மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை யாவரும் உணருவார்கள். பழமையில் ஊறிக்கிடக்கும் சமுதாயம், திடீரென்று முன் தொடர்பை உதறிக்கொண்டு வெளியே வந்துவிட முடியாது. இருந்தாலும், சிந்தனை சுதந்திரத்துடன் எதையும் ஆழ உணர்ந்து, வாழ்க்கையின் அவசியத்தையும் உணர்ந்து, சமுதாயம் மாறித்தான் ஆகவேண்டும். சிறந்த லட்சியங்களைக் கொண்ட எந்தச் சமுதாயமும், வளர்ந்துகொண்டே செல்லும். லட்சியம் குறைந்தால், சமுதாய அமைப்புச் சிதறிப்போவது இயல்பு.

எந்தச் சமுதாயத்திலும், வேற்றுமையின்றி ஒற்றுமையைக் கைக்கொள்ளவேண்டும். மனிதத் தன்மை மங்காமல் வளருவதற்கு, ஜாதிச் சண்டை ஒழிய வேண்டும். இந்தியன் என்ற சிறந்த பெயரை, ஜாதி என்ற துவேஷ மனப்பான்மையில் மூழ்கடித்துவிடக்கூடாது. பாரத சமுதாயத் தந்தையான பாரதியார் இதைத்தானே அடிக்கடி வற்புறுத்துகிறார்.

"எல்லோரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்-நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்-ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."

இதைவிட வேறு என்னதான் நமது கவிஞரிடமிருந்து எதிர்பார்க்க முடியும்? அவ்வளவு ஆணித்தரமாக, சிறந்த லட்சிய அஸ்திவாரத்தைக் கொண்ட மனித சமுதாயத்தையே சிருஷ்டித்துவிட வழிகோலிவிட்டார். ஆனால் இந்த லட்சியத்தை வாழ்க்கையில் நூற்றுக்கு நூறு பங்கு நிறைவேற்ற முடியுமா?

இன்றைய வாழ்க்கையில், இன்னும் சமுதாயம் வளராமல் சாம்பிக்கிடக்கிறது. ஜாதிப் பைத்தியம் பிடித்தவர்கள் சிலர், இயற்கையான அன்பைச் செயற்கையான வெறுப்பாக மாற்றிவிடுகிறார்கள். இது சமுதாய வளர்ச்சிக்கு நேர் விரோதமனப்பான்மையல்லவா?

சமுதாய வளர்ச்சியைத் தடுப்பது மற்றொன்று. மதம். இறைவனை மறக்கலாகாது என்ற நல்ல எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மதம், இன்று சமுதாய வளர்ச்சியையே தடுக்கிறதே. மதப் போராட்டம், மன வேற்றுமையையும் கிளர்ச்சியையும் தேவையற்ற முறையில் உண்டுபண்ணிச் சமுதாய நலனைப் பாதிக்கின்றது. ஒரு இந்துவும், முசல்மானும், கிருஸ்தவரும் அடிக்கடி அடித்துக்கொள்வதில், திட்டிக்கொள்வதில் ஏதாவது பயனுண்டா? கடவுளை வழிபடுவதில், பிரசாரமும், எதிர்ப்பிரசாரமும் அவசியமா?

"எத்தனை கோடி யின்பம் வைத்தாய் – எங்கள்
இறைவா – இறைவா – இறைவா"

என்று பாரதியார் இதய ஆழத்தினின்று கதறவில்லையா? இதில் அவர் எந்த மதத்தையாவது குறிப்பிட்டு வற்புறுத்துகிறாரா? இல்லவே இல்லை. அப்படியிருக்க, இறைவனை மனதில் நினைத்துக்கொண்டால் போதுமே. ஏன் அதை ஒரு மதமென்ற பெயரால் வெறுப்பை வளர்க்க வேண்டும். வெறுப்பினின்று வருகின்ற மனக்கசப்பிலே சமுதாய வளர்ச்சி அளவுக்கு மிஞ்சி பாதிக்கப்படுகின்றது. மதத்

துவேஷத்தை மறந்து, ஒரே கடவுள் என்ற லட்சியத்தையே வாழ்க்கையில் பரவச் செய்யவேண்டும். சமுதாய முன்னேற்றத்துக்கு விரோதமாக சௌஜன்யத்தைக் குலைக்கும் வகையில் மதம் ஒன்றன்பின் ஒன்ருக பாம்புக் கூட்டமாக வந்து படமெடுத்து ஆடக்கூடாது. 'இந்தியன்' என்ற பேரில் எல்லா மதங்களும் ஒன்று சேர்ந்து வேற்றுமை யிழந்து, ஒற்றுமையை நோக்கி, சிறந்த லட்சியங்களை வளர்க்கவேண்டும். மனிதத் தன்மையை இழந்தவன்தான், வேற்றுமையை விரும்புவான். உலகத்தில் மனிதன் எவ்வாறு வாழ்கிருன், மனித சமுதாயம் எப்படியெல்லாம் முன்னேறியிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்த பாரதியார், நமக்கு வழிகாட்டியாக நிற்கும்போது, அவருடைய போதனையை நாம் அலட்சியம் செய்ய முடியுமா?

இன்றைய சமுதாய அமைப்பில், பணக்காரன், ஏழை என்ற நிலை ஒரு பரிதாபகரமான நிலைதான். பணக்காரன் பணத்திலே, செல்வத்திலே, செல்வாக்கிலே வளருகிருன்; ஏழை, வர வர ஏழையாகி ஏக்கமுற்று உயிரை விடுகிருன். பணக்காரன் ஒரு நாளைக்கு ஆறு தடவை சாப்பிடுகிருன். ஏழை ஒரு வேளைச் சாப்பாட்டுக்குத் திண்டாடுகிருன். இந்த நிலைமை அவசியம் மாறவேண்டுமல்லவா? வறுமை அதிகரித்துவிட்டால், தேசமே உலகமே அழிய நேரிடும். அதை உணர்ந்துதான் பாரதியார் கதறியிருக்கிருர்:

"மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினி யுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினி யுண்டோ......?
"இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி யொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடு வோம்"

இதைவிட வேறு என்னதான் சொல்லமுடியும்? இங்கே 'பொது உடைமை'யை (Socialism) வற்புறுத்துகின்ருர், கவிஞர். பணக்காரர், மாளிகையில் உறங்குகின்ருர்கள், ஏழைகள், விடின்றி வீதியில் உயிருள்ள பிணங்களாக; நடைப்பிணங்களாகவே வாழ்கின்றனர். முதலாளிகள் முதலாளிகளாகவே வாழ்வதும், ஏழைகள் ஏழைகளாகவே ஏக்கமுற்று மடிவதும் சரியல்லவே? சமுதாய வளர்ச்சியில், இதைத்தானே முதலில் கவனிக்கவேண்டும். மனிதன் மனிதனுகவே வேற்றுமையின்றி, சமமாக வாழ்வதற்கு இன்றைய சமுதாயம் மாறித்தானே வளர்ச்சிபெற வேண்டும். மனிதர்களில், சிலர் மனிதர்களாகவும், சிலர் மிருகங்களாகவும் வாழ முடியுமா? நாம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, மனிதனின் பொருளாதார நிலையை சமநிலைப்படுத்த முற்படவேண்டும்.

சமுதாய மாற்றத்திலே, கல்வியின் நிலை எப்படி யிருக்கிறது, பார்ப்போம்? இன்றையக் கல்வி, அதிகம் ஏட்டுக் கல்வியாக நிற்கிறதே யொழிய, பொருளாதார வளர்ச்சிக்குத் துணையாக நிற்கவில்லை. தேசப்பற்ருே, மொழி வளர்ச்சியோ இல்லை. பிறமொழிகளைப் பயின்று, தன்னுட்டு உண்மைகளை மறந்து, தாய்மொழியையும் மறந்து தவிக்கின்ற இன்றைய மாணவர்கள், சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுவார்களா? தாய்மொழியில், நாம் நேரே பேருண்மைகளை விரைவில் தெரிந்துகொள்ளலாம். ஆங்கில மொழியில், மிகக் குறைந்த வேகத்தில், சிறு சிறு உண்மைகளை அறிய ஆவல்கொண்டு திண்டாடுகிருேம். ஏட்டறிவுக்கு மேல், தொழில் அறிவு வேண்டியதும் அவசியம் அல்லவா? தொழில் அறிவால்தான், செல்வம் வளரும், வாழ்க்கை விரியும், சமுதாயம் வளரும். தொழில் அறிவு இல்லாவிட்டால் எல்லாம் சுருங்கிவிடும். தொழிலறிவால், உலகத் தொடர்பும் ஏற்படும்; உலகச் சந்தையும், நமது பண்டங்களின் விற்பனைக்கு இடந்தரும்.

மாறும் சமுதாயம்

உத்தியோக முறையிலே, சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக பல இன்னல்கள் இருக்கின்றன. உத்தியோகத்தையே நம்பி, உயிர்வாழ்கின்றனர் சிலர். உத்தியோகத்தைக் கனவிலும் காணமுடியுமா, என்று சிலர் ஏங்கி நிற்கின்றனர். மிகச்சிலரே, சிறந்த திறமையால் முன்னேறுகின்றனர். பலரும், சிபார்சு மூலமே, திறமையின்றி உத்தியோகத்தை அடைய முயல்கின்றனர். வேலையைப் பலருக்கும் பயன்படும்படி பிரித்துவிட்டால், எல்லோரும் வேலையில் அமர்ந்து கவலையின்றி வாழலாம். ஒரு சிலர் பெரும் பதவியிலும், பெரும்பாலோர் மிகக் கீழான வேலையிலும் உழல்வது, பரிதபிக்கத்தக்க விஷயம்தான். வேலை என்றால், குமாஸ்தா வேலையில் மாத்திரம் அமர்வதில் யாது பிரயோஜனம்? பேனாவால் எழுதுவதுமாத்திரம் நல்ல வேலையென்று கருதிவிடக்கூடாது. உழுது பயிரிடுவதும் அருமையான வேலைதான், அதிகமான பயனைத்தரக்கூடியது. நமது வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டி நூலான திருக்குறள் என்ன சொல்லுகிறது?

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்-மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்'

ஏழைகளின் ஏழ்மையைப் போக்கவல்லது, ஏரின் ஏற்றம், ஆம். ஏர் பிடித்தவன் கை, ஏங்கி நிற்காது-ஓங்கியே நிற்கும்; மற்றவர்கள் எல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்.

மாறும் சமுதாயத்திலே, வாய்மையை வற்புறுத்தாமலிருக்க முடியுமா? யாரும் உண்மையே பேசவேண்டும், எதையும் திரித்து விரித்துப் புகைத்துப் பேசக்கூடாது. பிறருக்கு ஹிம்சையின்றி வாழவேண்டுமானால், நாம் வாய்மையே பேசவேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பழக்கம், அறவே ஒழியவேண்டும்.

'வாய்மை எனப்படுவது யாதெனின்-யாதொன்றும்
தீமை இலாத சொலல்'

'தன் நெஞ்சறிவது பொய்யற்க-பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்'

'எல்லா விளக்கும் விளக்கல்ல-சான்ரோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.'

இன்றைய சமுதாய அமைப்பிலே, பொய் அளவுக்கு மிஞ்சி மலிந்துவிட்டது. பொய் சொல்வது வாழ்க்கைக்கும் அந்தஸ்துக்கும் உத்தியோக நிலைக்கும் தேவை என்று சிலர் சொல்லுகிருர்கள். பொய்சொல்லிச் சொல்லி, சிலர் குடும்ப நிலைகளையும் பதவிகளையும் இழக்க நேரிடும்போது, மிகமிகப் பரிதாபகரமாகவே இருக்கும். 'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்ற நிலைக்கு வரும்போது, பொய் சொல்லிகள், 'என் தேவைக்குப் பொய் சொன்னேம்?'' என்று வருந்துகிருர்கள். திரிகரண சுத்தியாக, மனிதன் வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான், சமுதாயத்தை சத்தியத்தின் மேல் கட்டி மகிழலாம்.

சமுதாய வளர்ச்சிக்கு, நல்ல தேசப்பற்றும் நல்ல மொழிப்பற்றும் அவசியம். நமது தேசம், நமது நாடு, நமது மொழி என்று நாம் பெருமைகொள்ள வேண்டியது மிக மிக அவசியம். என்னதான் ஆங்கிலம் படித்திருந்தாலும், தமிழன் தமிழனேடு தமிழில்தான் பேசி இன்புறவேண்டும். அன்னிய பாஷையில், இதயபூர்வமாக இனிக்கப் பேசமுடியாதல்லவா? ஒவ்வொரு இந்தியனும், இந்தியனுடைய பாஷையிலேயே பேசுவதுதான் இயற்கை, வேறு பாஷையில் பேசுவது செயற்கைதான். உத்தியோகத்தைப் பொறுத்துப் பல பாஷைகளைக் கையாள வேண்டி வரும். இருந்தாலும், இந்தியன் பேசுகின்ற பாஷை இந்திய பாஷையாகவே இருக்கவேண்டும். உலகத் தொடர்புக்குத்தான், வேறு மொழிகள் அவசியமேயொழிய, இந்தியாவின் உள்நாட்டு வளர்ச்சிக்கு இந்திய பாஷையே போதும்.

மாறும் சமுதாயம்

சரித்திர பூர்வமாக, காலம் மாறும்போது, அரசியல் மாறும்போது, சமுதாய வளர்ச்சியும் மாற்றமடைகிறது. இன்றைய அரசியல் மாற்றத்திலே, மாறும் சமுதாயம் வந்தேதீரும். விஞ்ஞான மாற்றத்திலே, சிந்தனை சுதந்திரத் திலே, சமுதாயம் மாறியேதீரும். உலக சரித்திர இயக்கங் களிலே, பல நூற்றுண்டுகளாக சரித்திரம் கண்ட உண்மை என்ன? அரசியல் மாறும்போது, சமுதாயத்திலும் மாற்றம் நிகழ்வது திண்ணம். ('French Revolution') பிரஞ்சுப் புரட்சியிலும், ('American War of Independence') அமெரிக்க சுதந்திரப் போருக்குப் பின்னும், சமுதாய மாற் றம் மிகத் தீவிரமாக நிகழவில்லையா -'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை' என்ற சமுதாய மாற்றம் தானே உறுதியாக ஏற்பட்டது. அதையாராலும் தடுக்க முடியவில்லையே? வருவது வந்தே தீரும், என்றல்லவா நிகழ்ந்தது இந்தப்புரட்சி.

உரிமைக்கும் கடமைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை, எந்தச் சமுதாய வளர்ச்சியும் உணர்ந்து பின் பற்ற வேண்டும். 'கொள்' என்றால் வாயைத் திறப்பதும் 'கடிவாளம்' என்றால் வாயை அடைத்துக்கொள்வதும் முறையல்லவே! சமுதாய வளர்ச்சியில், ஒவ்வொருவரும் தன் உரிமையையும் கடமையையும் நன்கு உணர வேண்டும். இந்த அடிப்படையை உணராமல், சமுதாய மாற்றத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொள்ளமுடியாது. மனிதன் மனிதனாக வாழ வேண்டும். மனிதனை மனிதன் மதிக்க வேண்டும். ஏழையென்றும் பணக்காரன் என்றும் வித்தியாசமிருக்கக்கூடாது. ஆண்களும் பெண்களும் வித்தியாசமின்றி பொறுப்பேற்று வாழவேண்டும். குழந்தை வளர்ப்பிலும், சம திருஷ்டியோடு இருவரும் கவனிக்கவேண்டும். ஆண் பெண் தொடர்பில், ஒழுக்கத் தைக் கைவிடாமல் திருமண உரிமையோடும் கடமை யோடும் வாழவேண்டும். ஒழுக்கத்தை விட்டவர்களை யாரும் மதியார். குடும்ப வாழ்க்கையின் உறுதிக்கு,

பெண்களின் கற்பும் ஆண்களின் ஒழுக்க உறுதியும் அவசியம் வேண்டும். உண்மையே பேச உள்ளத்தை உறுதி செய்யவேண்டும். பேராசையின்றி வாழவேண்டும். பெண் களுக்கும் சிறந்த கல்வி வசதிகள் வழங்கவேண்டும். ஆண்-பெண் இருபாலரும் மாறும் சமுதாயத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். சோம்பேறித் தனத்தை விட்டொழித்துவிட்டு கடுமையாக தேசப்பற்றோடு உழைத் தால், உடைக்கும், உணவுக்கும் அன்னிய நாட்டை எதிர் பார்க்க வேண்டாம். எத்துறையிலும் நாம் சர்வ சுதந்திர மாக மாறும் சமுதாயத்தில் இடம்பெற்று முறையிடலாம். இதுவே உறுதி.

சிறந்த லட்சியவாதியான கவி தாகூர் தனது நிகரற்ற கீதாஞ்சலியில் ஒரு லட்சிய நாடு சர்வ சுதந்தரமாக சமுதாய அமைப்பில் பிரதிபலிக்கும் என்று பாடி யிருக்கிறார்:

'எங்கு மனம் பயமற்று விளங்குகிறதோ; எங்கே தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ; எங்கு அறிவு சுதந்திரத் துடன் பொலிகிறதோ; எங்கு குறுகிய ஜாதி மதப் பிளவுகளால் உலகம் உடையாமல் உருவடைகிறதோ; எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் உதய மாகின்றனவோ; எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை நோக்கிக் கைகளைப் பரப்புகிறதோ; எங்கு பகுத்தறி வெனும் தெளிந்த ஆறு மாண்டொழிந்த பழக்கங்களான பயங்கரப் பாலைமணலில் பாயாது மீள்கிறதோ; எங்கே விரிந்த சிந்தனையிலும் செயலிலும் எனது உள்ளத்தை நினது அருள் இழுத்துச் செல்லுகின்றதோ, அந்த சுதந் திர சுவர்க்கத்தில், என் அப்பனே, எனது நாடு விழித் தெழுவதாகுக.'

எச். ஜி. வெல்ஸ், பெர்னர்ட்ஷா, காந்தி, ஜவஹர்லால் நேரு எல்லோருமே, மாறும் சமுதாயத்தையே விரும்பு

கிறார்கள், அடிக்கடி வற்புறுத்துகிறார்கள். மனிதன் இன்பமாக உரிமையுடனும் கடமையுடனும், வாழ்க்கையை நன்கு வித்தியாசமின்றி மனோசாந்தியுடன் அனுபவிக்கக்கூடிய சமுதாயமாற்றத்தை, இன்றைய இளைஞர்கள் நன்கு அலசி ஆராய்ந்து வரவேற்று, உறுதிசெய்ய உத்சாகத்துடன் உழைக்க வேண்டும்.

சமுதாய மாற்றத்தில் வெற்றிபெறுவது, ஒரு மகோன்னத வெற்றியே ஆகும். சமுதாயம் பழைய நிலையிலே பாசி பிடித்து வளர்ச்சியின்றிக் கிடந்தால், மனித வாழ்க்கையும் மனித முயற்சியும் மங்கி மறைந்தேபோகும். வெறியின்றி, அமைதியாகவே சமுதாயத்தை திருத்தி மாற்றியமைக்க வேண்டும். அறியாமையை ஒழித்தால், எதிலும் வளர்ச்சி யுண்டாகும். அறிவு குறையக் குறைய, போரிடும் குணமே வளரும். அறிவு வளர வளர அமைதியும் சமுதாய வளர்ச்சியும் புதிய துறைகளிலே முற்போக்கான முயற்சிகளும் நிகழ்வது இயல்பு. அதனாலேதான், மாக்நீல் டிக்ஸன் என்பவர், மனித முயற்சிகளிலே அறியாமையை விலக்கி அறிவைப் புகுத்தவேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்துகிறார். முழு மனிதனும் முழு அறிவைப் பெறவேண்டும் என்று நார்மன் கஸின்ஸ் அறைகூவி அழைக்கிறார்.

அறிவு வாயிலாக, அறவழி நடந்தால், இன்பம் என்று குறளாசிரியரும், சுத்தானந்தரும் உறுதிசெய்கிறார்கள்.

'அறவின்பம், வாழ்விழை இன்ப மெல்லாம்
அறிவின்ப ஊற்றி னமிழ்து.' (யோகசித்தி)

28-6-53ல் திருச்சி வானொலியில் ஒலிபரப்பப் பெற்றது. நிலையத்தாரின் அனுமதிபெற்றுப் பிரசுரிக்கப் பெறுகிறது.

காதல் கடிதங்கள்

★ மாபஸ்ஸான் ★

கன்னி

" கன்னிப் பருவத்துப் பெண்மயிலே—உந்தன்
கட்டழ கெல்லாம் வீணுகுதடி
மின்னி ஒளிவிடும் மேனியளே—உந்தன்
மின்னலெ லாம்வீணே போகுதடி "

—சோமு.

முன்னுரை

காதல் கடிதங்கள், காதல் பலூன்கள்
— பறந்தே வருகின்றன!
— பாடிக்கொண்டே வருகின்றன!
காதல் கடிதம், ஒரு காதல் அலாரம்!

பிரெஞ்சு காதல் மேதை மாபஸ்ஸான், காதல் பெண்களையும், காதல் கண்களையும், காதல் உலகத்தையும், காதல் கலகத்தையும் நன்கு அலசி ஆராய்ந்த கவிஞர், கதாசிரியர், நாவல் புலி;

அவர் பெண்களின் எழிலையும், காதல் மழலையையும் கண்டு களித்தவர்; அவருடைய காதல் கடிதங்கள், காதல் சாட்டைகள், காதல் வீணைகள்,-காதல் ஹார்மோனியம் கூடத்தான்!

பாரதியார், மாபஸ்ஸான் அனுபவித்த காதல் வெறியை உறுதி செய்கிறார்:

"சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை"

"காரியமில்லையடி வீண்பசப்பிலே, கனி
கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பானோ?"

பாரதிதாசன் அதையே வற்புறுத்துகிறார்:

"இன்ப மெனும் பால் நுரையே! குளிர்விளக்கே,
எனை இழந்தேன் உன்னெழிலில் கலந்ததாலே"

'வனசுந்தரி'யில், பூக்காரி பாட்டு எப்படி? காதல், காதல்! காதல்!

கம்பன், காளிதாஸன், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, ராசீன், கார்நீலி, ஷா, தாகூர், எல்லோரும் காதல் விந்தையை அனுபவித்துச் சித்திரித்திருக்கிறார்கள். உண்மைகள் அனந்தம்: பெண்மையை வருணிக்க முடியாமலும். சிற்பத்திலும், சித்திரத்திலும் அமைக்க முடியாமலும், கவிஞர்களும், ஓவியர்களும், சிற்பிகளும் சில சமயங்களில் ஊமைகளாகவே மாறிவிடுகிறார்கள், பாஷையே ஊமையாகி விடுகிறது; பெண்மையின் அபூர்வ எழில், ஓவியனின் தூரிகையைத் தாக்கும்போது, அவன் காதல் வலையில் சிக்கி, உள்ளம் குமுறி ஊமையாகி விடுகிறான்.

மாபஸ்ஸானின் காதல் கடிதங்கள் எப்படி? படித்துப் பாருங்கள் !

V. R. M

★

முதல் கடிதம்

[ஆண்—பெண் வாழ்க்கைத் தொடர் பின் விசித்திரத்தையும், விபரீதத்தையும், பெண்மையின் உடல் அழகையும் மன மோகனக் கற்பனு ஜாலத்தையும், உணர்ச்சிக் காந்தத்தால் இழுக்கப்படும் இரு காதலர்கள், கடிதங்கள் வாயிலாகத் தங்கள் இதயங்களையே, துடிக்கும் இதயங்களையே திறந்து காட்டுகிருர்கள்; வாழ்க்கையின் ஜீவநாடி காதல் தானே? கடிதங்கள், காதலின் இதயக் கதவுகளையே திறக்க முயலுகின்றன.]

பெண் எழுதுகிருள்:

இது ஒரு விசித்திரமான, வில்லங்கமான கடிதம். ஒரு பெண் மெதுவாகவே, தன் நெஞ்சைத் திறந்து காட்டுகிருள்,—அவ்வளவு ஆழமான இதயம், சஞ்சலச்சுனை!

அருமைக் காதலரே !

அதைப்பற்றி இனிமேல் சிந்திக்கவே வேண்டாம். தாங்கள் என்னிடம் கேட்கும் விஷயம், என் நெஞ்சில் திகிலையும் சஞ்சலத்தையும் எழுப்புகிறது; எனக்கு கடவுளிடத்தில் நம்பிக்கை உண்டு,—ஆனுல் இறைவன் சிருஷ்டியில் ஒரு விபரீதமான குழப்பம்; ஒவ்வொரு நல்ல வஸ்துவுடனும், ஒரு ஆபாசத்தைக் கலந்தே சிருஷ்டி செய்திருக்கிருர். காதல் என்ற ஒரு மிக மிக இனிமையான பொருளை நமக்குத் தந்த கடவுள், காதலின் முழு எழிலையும் இனிமையையும், உண்மையையும் களங்கப்படுத்த, ஐம் புலன்களையும் சிருஷ்டி செய்து விட்டாரே, அந்த வில்லங்கமான கடவுள்! ஐம்புலன்களின் மிருகத்தனமான ரஸனையில் எவ்வளவு கேவலமான, ஆபாசமான, வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன? ஐம்புலன்களின் இன்ப வெறியை, உடலைச்சுற்றி உணர்ச்சி மேடைகளிலும் பள்ளங்களிலும் கடவுள் கொட்டி வைத்திருக்கிருர்; இது ஒரு கேலிக் கூத்தான சிருஷ்டிதானே? உணர்ச்சிவெறி உடலைச் சுற்றி உள்ளும் புறமும் குமுறிக் கும்மாளியிடும்போது, வெட்கம் ஒரு புறம் வந்துவிடுகிறதே? எதையும் பிறர் அறி

யாமல் குசு குசு வென்று பேச வேண்டிய அவசியமே வந்து விடுகிறதே! என்னதான் செய்வது?

உணர்ச்சி ஐம்புலன்களின் வழியாகக் குமுறி வழியும் போது, வெட்கம் மானம் என்று நினைக்க முடிகிறதா, என்ன? காதல் வெறி எங்கும் சுழன்றடிக்கும்போது, சட்டம் அதை வேட்டையாடப் பார்க்கிறது! காதல் வெறி அலைந்து அவதிப்படும்போது, 'ஒழுக்கம்' என்று கதறிக் கொண்டு வருவதில் யாது பயன்? காதல் உலகம், இன்பம் நிறைந்த உலகம், இரகஸிய உலகம். இயற்கையின் எழிலை, செயற்கையால் தடுக்கவே முடியாது; ஆம்!

இனிமேல் இதைப்பற்றி என்னிடம் பேசவே வேண் டாம்! ஒருபோதும் பேசவேண்டாம்!

நான் உன்னைக் காதலிக்கிறேனா என்பதே, என் முழு அறிவுக்குப் புலப்படவேயில்லை. ஆனால் இது மட்டும் உண்மைதான், நீ என் அருகே இருக்கும்போது, நான் சந் தோஷமாக இருக்கிறேன்; உன் பார்வை எனக்கு இன்பமே தருகிறது, உனது குரல் என் இதயத்தில் இனிமையைக் கொட்டி முழக்குகின்றது. ஆனால் உனது ஆசைக்கு இரங்கி மயங்கி மடிந்து விட்டால், அன்று முதல் உன்னை நான் வெறுக்கவேண்டிய நிலைமையே வந்தாலும் வந்துவிடும் என்று அஞ்சுகிறேன். நம் இருவரையும் இணைக்கும் காதல் காந்தம் சிதறிப்போனாலும் போய்விடுமோ என்று கவலைப் படுகிறேன். வெட்கம் நம்மைப் பிரித்து விடலாம். அவ மானம் நம்மைச் சூழ்ந்து கொள்ளலாம்!

நாம் இப்போது இருப்பது போலவே பழகி நிற்போம்! நீ விரும்பினால், என்னைக் காதலி; உனக்கு என் பூர்ண அனுமதி உண்டு, சரிதானா!

உனது காதலி

"ஜெனிவீவ்"

காதலன் பதில் கடிதம்

[காதலன் கடிதம் மிக மிக நீண்ட கடிதம்: தொட்டுத் தழுவி முத்தமிட விரைந்து செல்லும் உள்ளம், பெண்மையின் அழகுக் கடலிலே அதிசயங்களைக் கண்டு ஆரவாரம் செய்கிறது; சொற்கள், கவிஞன் சிறகுகொண்டு, அழகியின் அழகுத் துண்டுகளைச் சித்திரிக்கின்றன. உணர்ச்சிச் சூறையில், காதலன் கடிதம், அழகியின் அழகைக் காட்டும் கண்ணாடியாகவே பிரதிபலிக்கிறது. மிக மிக அருமையான காதல் கடிதம்தான்! பாருங்கள்,—கடிதத்தை!]

அருமைக் காதலியே,

நான் உன்னிடம் ஐம்புலன்களின் குழப்பத்துடன், மிருகத்தனமாகவே பேசவிரும்புகிறேன். இப்படிப் பேச, எழுத அனுமதி தருவாயாக! மறுக்க முடியாத சபதம் செய்துகொண்ட ஒரு நண்பனுடன் நான் எப்படிப் பேசுவேனோ, அதுபோல் உன்னிடம் பேச அனுமதிகொடு!

நானும் உன்னைக் காதலிக்கிறேனா என்பதும் எனக்கே இன்னும் பூராவும் தெரியவில்லையே? உனது மன ஆழத்தை அறிந்த பின்தான், நான் இதையும் முடிவுசெய்ய முடியும். சில சமயங்களில், உணர்ச்சிச் சூறையில் நாம் தழுவி நிற்கும்போது, ஏதோ ஒரு திகிலும் வெறுப்பும் இரத்தக் கொதிப்பில் காண்பதும் உண்மைதான், நான் அறிவேன்; ஆனால் உன்போன்ற ஒரு பெண் என் இச்சையின் வெற்றி வடிவமாகவே அமையும்போது, தொடர்ந்து எனக்கு இன்பம் பாய்ச்சும்போது, எல்லையற்ற அழகு போதையில் என்னை மயக்கும்போது, உன்னைத் தழுவி முத்தமிடும் வெறி முடிவற்ற முழு இன்பத்தையல்லவா என் இதயத்தில் கொட்டிவிடுகிறது. சரிதானா? காதல் செய்வதே, காதலுக்கு ஒரு சோதனை, ஆம்! நாம் தழுவியபின், நமது ஆசை குறைந்தால், நாம் இதுவரை ஒருவரை யொருவர் ஏமாற்றிக் கொண்டவர்கள் ஆவோம்! நாம் தழுவியபின், நமது காதல் கனல் வளர்ந்து அதிகரித்தால், நமது காதல் உண்மைக் காதலாகும், வாழ்க்கையில் உறுதி பெறும் காதலாகும்!

இயற்கையின் எழிலில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று, ஒரு தத்துவ சாஸ்திரி எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆனால், அவரே தவறி ஏமாந்திருக்கிறார். இயற்கை, உயிரினங்களைப் பெருக்குவதற்காக "காதல் — காமம்" என்ற போதைப் பொறியைச் சிருஷ்டி செய்திருக்கிறது. காம வெறி நிமிஷ நேரத்தில் தோன்றி மறைகிறது; வெறி தீர்ந்ததும், ஒருவித ஏமாற்றத்திலிருந்து விடுதலையடைந்து, நம்முடைய உடல் நிலை, மனநிலை ஓய்ந்து சலிப்படைகிறதல்லவா? இதுவே, நாம் நன்றாய் உணர்ந்த உண்மை, வாழ்க்கையில் அடிபட்டு அறிந்த அபூர்வ உண்மையல்லவா?

ஒருவன் புதிதாகத் தழுவி முத்தமிடவந்தால், அந்த 'ஜில் முத்தம்' மிருகவெறியுடன் இறைக்கப்படுவதும் உண்மைதான்! அந்த யுவனின் கண்களில் உணர்ச்சி, காம உணர்ச்சி கனல்கின்றதும் உண்மைதான்! காமத் தீயை மறுபடியும் பார்க்க முடியுமா, என்ன? இன்னும் எத்தனையோ இன்பவெறிச் சின்னங்கள் தோன்றித் தாண்டவமாடுவதும் உண்டல்லவா?

இருவர் கலந்து வாழ்கின்ற இன்ப உணர்ச்சியான காதல் நம்மைச் சூழ்ந்து பற்றிக்கொள்ளும் போது, காதலர்கள் ஒருவரை யொருவர் நீண்ட நாளாகச் சிந்தித்துக் கொண்டே வாழும்போது, இருவரும் பிரிந்திருக்கும் போது, மனதால் ஒருவருடைய அழகை மற்றொருவர் ஆழ்ந்து அனுபவிக்கும்போது, முகமும் உடலழகும் புன் சிரிப்பும் இனிய இசைக்குரலின் காந்தமும் மனக் கண்முன் வந்து மாறி மாறி அலையும்போது, மீண்டும் சந்திக்க நேர்ந்தால், முடிவில் தொட்டுத் தழுவி முத்தமிட்டு உடலோடு உடல் கலந்து உருகும் விந்தையில் தானே சுழித்தோடி நிற்போம்?

தழுவி முத்தமிட வேண்டுமென்ற ஆசை உன் இதயத்தில் எழ வில்லையா? என்ன! கண்கள், காதல் கண்கள்

காந்த மொழியில் பேசும்போது, உதடுகள் முத்தமிட நெருங்கி வருமல்லவா? ஆசையை அணைக்க முடியுமா? நரம்பில் வெறி ஒன்று புரட்சிகரமாகப் புறப்படும்போது, உதடுகள் முத்தமிடவே முன்னேறுகின்றன.

நீ சொல்வதும் உண்மைதான்!—நம்மைப் பிடிக்க வைத்திருக்கும் இயற்கையின் சூழ்ச்சிகரமான பொறி அமைப்பு, அது ஒரு ஆபாசமான பொறியின் லீலைதான்! ஆனால், இதைப்பற்றி நான் சிறிதும் கவலைப்படவே இல்லை. அதை நான் நன்றாய் உணர்ந்தே, இன்ப வெறியுடன் அதனுள் இறங்கிக் கும்மாளியிடுகின்றேன். இயற்கையின் ஆழத்தில் நாம் தழுவி நிற்கும்போது, எந்த ஆபாசமும் நமக்குத் தெரிவதில்லை. இயற்கையின் வில்லங்கத்தை மறந்து கலந்து வாழ்ந்து நமது மனித இனத்தைப் பெருக்கு கிறோம். இயற்கையின் இன்ப அமைப்பில், நாம் வெறியுடன் தழுவி நிற்போம். அந்தக் காதல் வெறியைப் பன் மடங்கு வளர்ப்போம். இயற்கை நம்மை ஏமாற்ற முயலும் போது, நாம் ஏன் இயற்கையையே ஏமாற்ற முடியாதா, என்ன?

தழுவி நிற்பது, காதல் வெறியில் தழுவிநிற்பதும் இயற்கையின் இன்ப உச்சியில் நாம் தழுவி முத்தமிடுவதும் தனி இன்பம்தான்! நிகரற்ற இன்பம், வாழ்க்கையின் வெற்றிச் சிகரம் முத்தம், விலைமதிக்க முடியாத மாணிக்கம்!

நீ சொல்வதுபோல, கடவுளின் சிருஷ்டி மர்மம் என்று கதறுவதில் பிரயோஜனமில்லை. நாம் இயற்கையின் எழிலை யும் குதூகலத்தையும் மிக மிக ஆழமாகக் கண்டுபிடிக்க முயல்வோம். நாம் அடிக்கடி மிக நுட்பமாகக் கலந்து தழுவி முத்தமிட்டே வாழ்ந்தால், வாழ்க்கையின் காதல் பாதையை சஞ்சலமின்றி, சந்தேகமின்றி அறிந்தவர்களா வோம். வாழ்க்கையில், காதல் கும்மாளியில், சகல புதிர் களும் கரைந்தே மறைகின்றன.

நாம் பானத்தை வேட்கையுடன் குடிப்பதுபோல, வெறியுடன் தழுவி நிற்போம். நமது காதல் வாழ்க்கை கனிரசம்போல் வாழ்வுக் கிண்ணத்தில் வாய் நிறைய மண்டி நிற்கும். நமது தோல் வெள்ளையாகவும் உறுதியாகவும், கனமாகவும், இனிப்பாகவும் இருப்பதால், நாம் உடலைத் தொட்டுத் தழுவி முத்தமிடுவதும் பிரமாதமான சுகந்தான்!

சுத்தமான, ரம்மியமான திராக்ஷை ரசக் கிண்ணங்களைச் சித்திரங்களாக ஓவியர்கள் தீட்ட முயலும்போது, பெண்களது மார்புகளின் வளைவுகளையும் தெளிவுகளையுமே முன் மாதிரியாக வைத்துக் கொண்டார்கள். மலர்ந்த ரோஜா மலர்கள் போலவே, மலர்ந்த மங்கையரது அழகுகள் மின்னி எழுகின்றன.

ஒரு டாக்டரின் அகராதியில் மங்கையரது அழகு நிறைந்த மார்பின் பொருளை அறிந்தேன். "ஒரு மங்கையின் மார்பு, அலங்காரப் பொருள் மாத்திரமல்லவே, உபயோகமான பொருளும் கூடத்தான்". எப்படி அகராதி?

ஆனல் நாம் உபயோகத்தை விட்டு விட்டு, மார்பின் எழிலையே கவனிப்போம். அழகு நிறைந்த பெண்ணின் ஒய்ய மார்பு, மனிதனைக் காதல் தழுவலுக்குத் தூண்டாமல், குழந்தைக்குப் பால்கொடுக்க மாத்திரம் ஏற்பட்டதா, என்ன? அதுவும் ஒரு விந்தைதான்!

யார் யார் என்ன வேண்டுமானுலும் சொல்லட்டும், பிதற்றட்டும்! யாருடையஉபதேசமும் நமக்குத் தேவையே இல்லை! நீதிமான்கள் நீதி பேசட்டும். கவிஞர்கள் கற்பனை உலகிலே கலங்கி அலைந்து கதறட்டும், யாருடைய உண்மையும் நமக்குத் தேவையே இல்லை! பண்டிதர்கள் புலமையே நமக்குத் தேவை இல்லை. நாம் தழுவி முத்தமிடுவதற்கு, புலமை எதற்கு, உபதேசம் எதற்கு?

தழுவி முத்தமிடுவதில், ஒரு அபூர்வமான போதை நமது வாழ்க்கையைச் சூழ்ந்து கொள்கிறது. காதல் இயற்கை வெறியில் பாய்ந்து நமது உடலையே கடலாக மாற்றிக் காயவைத்து இன்பம் பாய்ச்சி மீண்டும் உயிரோவிய எழிலை எழுப்புகின்றது. எந்தவாசனையும் இதற்கு நிகரில்லை. காதல் மணம் அபூர்வமானது, காற்றைவிட லேசானது, இரணத்தைவிடக் கூர்மையானது; காதலின் மேல், வீரம், மோசம், நாசம் எல்லாம் சிலிர்த்து கம்பீரமாக வளர்கின்றன.

ஆகையால், நாம் காதலையே காதலிப்போம். அமைதியான, ருசியற்ற வறண்டு காய்ந்த காதலையல்ல; ஆனல் துணிகரமான, குமுறிக் கும்மாளிபிடுகின்ற அடக்க முடியாத காதலையே காதலிக்கப் பழகுவோம்! தங்கத்தையும் நகைகளையும் நாம் ஆசையோடு தேடிப்பெறுவது போல, மணமுள்ள காதலையே நாம் தேடிப் பெறுவோம்; நகைகளைவிட நயமானது, விலை மதிக்க முடியாதது காதல்: உண்மைக் காதல் வெறி! நாம் காதலைப் பின்தொடர்ந்து வேட்டையாடுவோம். காதல் பீடத்திலே நாம் உயிரையும் விடுவோமாக!

எந்தப்புத்தகத்திலும் காணமுடியாத ஒருஉண்மையை நான் உனக்குச் சொல்லிவிடவேண்டும். உலகத்தில் நன்ருய் வாழும் பெண்கள் யார் தெரியுமா?—காதல் உணவின்றிப் பட்டினி கிடக்கின்ருர்களே, அவர்களல்ல! காதலை நன்ருய் அனுபவித்து வாழ்கின்ருர்களே—அவர்கள்தான் இன்ப உச்சியில் இறுமாப்புடன் வாழ்கின்ருர்கள்; 'காதலிக்கத் தெரியாத பெண்கள்'—வீண் சுவையற்ற சஞ்சலக் கூட்டம்தான்! காதலின்றிக் கதறும் பதர்கள், ஆம்!

காதல் உலகிலே மிதக்கும் மங்கைகள் கவலையற்று வாழ்கின்ருர்கள்: மறு முத்தம் எப்போது கிடைக்கும் என்று ஆசையோடு வாழ்கின்ருர்களே, பெண்கள்—அவர்

கள் தான் வெற்றிக்குரலுடன் விளையாடுகிருர்கள். முத்தம், முத்தம்தான். அதன் இனிமையும் சாந்தியும் காதலர்களுக்குத்தான் தெரியும்!

காதலின் இயற்கையையும் எழிலையும் இன்பத்தையும் உணராத மற்றவர்கள் இருக்கிருர்களே,—அவர்களுக்குக் காதலிக்கவே தெரியாது! அவர்களுடைய காதல் முறை காய்ந்து, கருகி, மடங்கி, முடங்கி, சுடங்கி, நைந்து, பூர்த்திக் குரலற்று, மாய்ந்தே போகும். சந்தேகமும் சஞ்சலமும் போராசையும் கொண்ட அந்த வகைப் பெண்கள், நகையும் ஆடையும் ஆடம்பரமாக வேண்டுமென்று அலைந்தலைந்து துன்பத் துறையில் பொடியாகிப் போவார்கள். இன்பத்தை நழுவ விட்டு, துன்பத்தைத் தேடுவதில் ஏதாவது பயனுண்டா?

ஆனல் உண்மைக் காதலில் மூழ்கியிருக்கும் பெண்கள் தேவையில்லாத ஆசையிலும் அலங்காரத்திலும் மடிவதில்லை. முன்னும் பின்னும் வருந்திவாழ்வதில்லை. அவர்கள் அமைதியாக, சிரித்த முகத்துடன், வாழ்க்கையில் வரும் இன்னல்களைக்கூட பொருட்படுத்தாமல், காதற் கனவிலே இன்பத்தையே நுகருவார்கள். ஏனென்ருல், காதல் வெறியிலே கலந்து தழுவி முத்தமிடுவது ஒரு தனி தத்துவந்தான். நிகரற்ற இன்பம்: சகலஇன்னல்களையும் அகற்றி, இன்பம் பாய்ச்சும் அகண்ட சக்தி வாய்ந்தது இந்த அபூர்வ உடலாவிக் கலப்பு! இந்தத் தொடர்புள்ள முத்தம்; காதலே, சாந்தி; எந்த இரணத்தையும் இதயப் புண்ணையும் ஆற்றும் ஆற்றல் பெற்றது.

காதலியே, இன்னும் எனக்கு இதைப்பற்றி எழுத ஆசைதான்—சொல்லவேண்டிய விஷயம் இன்னும் உண்டு!

காதலன்,

ஹென்ரி

கவிக்குயில் சரோஜினி

சரோஜினி தேவி, ஒரு கவிக்குயில்; இளங் கவிக்குயிலாக எழுந்த சரோஜினியின் கவிதைகளிலே, மிக நுட்பமான கற்பனை எழிலும், சிறந்த சொல்லோட்டமும், வாழ்க்கையின் ஆழ்ந்த விமர்சனமும், தத்துவ ஒளியும் கலந்து மிளிர்கின்றன. இசை வெறியிலே பாடிய பாடல்களில், கவிதை நயமும் குன்ருமல் மின்னலிடுகிறது.

12வது வயதிலே மெட்ரிகுலேஷன் தேரி, பின் லண்டனிலும் ஆங்கிலம் பயின்றதால், ஆங்கில நடை அருமையாக, அருவிபோலச் சுழன்ருேடுகிறது. ஐரோப்பிய கவிகள் பலரையும் படித்துச் சுவைத்து, நமது இந்தியக் கருத்தும் கற்பனையும் கலந்து ஆங்கிலத்தில் சரோஜினி பாடியதால், மிக நயமான இன்பம் தரக்கூடிய கவிதையாகவே அமைந்திருக்கிறது.

சரோஜினி பிறவிக்கவி; இதய வெறியோடு, இயற்கை எழுச்சியுடன் பாடுவதால், கவிதை சொல்லெழிலோடு உதயமாகிறது. இயற்கை நலங்கனிந்து குலுங்கி நிற்கும் இத்தாலி தேசத்தின் வனப்பைக் கண்டதும், அவருடைய கவிதையுள்ளம் இன்பச்சிலிர்ப்பில் கொந்தளித்தது; பாடல்கள், குதித்தோட ஆரம்பித்தன. ஷெல்லி, கீட்ஸ், டென்னிஸன் போலவே, கவிதைகள் சரோஜினி தேவியின் உள்ளத்தில் பொங்கி வழிந்தோடின. சரோஜினி என்றும் பாஷைக்கு அடிமையல்ல; பாஷையே, அவருடைய மனமோகனச் சுழற்சிக்கு இணங்கி 'டான்ஸ்' ஆடியது; சொற்கள் சுந்தரப் பொன்வண்டுகளாகவே ரீங்காரமிடுகின்றன.

யூசுப் மெஹராலி கூறுகிறார்: "கவிக்குயில் சரோஜினியின் தோற்றமே அற்புதம்; அதிகமான காந்தசக்தியுடைய தேக வனப்போடு, சொல்லோவியங்களாகவே அவர் கவிதை பொழிந்தார். தேசம் அடிமைப்பட்டிருப்பதை நினைந்து, வருந்தி கவிதையைக்கூட மறந்து, அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் உழைக்க முன்வந்தார்."

சரோஜினியின் கவிதைகளைப்போல, சொற்பொழிவுகளும் அற்புதம்தான்; பிரசங்கத்திற்கு எதுவும் தயார் செய்யாமலே, திடீரென்று துணிவுடன் பேசுவார்; பேச்சிலே, அன்பும் வீரமும், எழிலும் தியாக தீபமாகச் சுடர் வீசும். காந்தி இறந்தசமயம், டெல்லி ரேடியோவில் சரோஜினி தேவியார் பேசிய பேச்சு, மிக மிக உருக்கமான பேச்சு, சொற்றபேச்சு; பாஷையே தீப்பந்தமாகக் காட்சியளித்தது. கவிதை நலங்கனிந்த அவருடைய சொற்பொழிவுகள், யாரையுமே மனமுருகச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவை; தயார்செய்யாத, திடீர்ச் சொற்பொழிவுகளிலே, தியாக வெறியிலே கவிதைக் கனலும் சுழன்றோடும், சரோஜினியின் வசன நடையை, வேறு யாராலும் கையாளவோ காப்பியடிக்கவோ முடியவேமுடியாது. சிருஷ்டி முத்திரையோடு தோன்றும் சொல்லோவியத்தை யாராலும் அழிக்க முடியுமா?

சரோஜினியின் சம்பாஷணை மிக அருமையாக இருக்கும்; ஹாஸ்யச்சுவை கலந்தநிலையில், எதைப்பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் பேசும் திறமை உண்டு; அதிலே இனிமைஉண்டு, உறுதிஉண்டு, நீதியும் நியாயமும் உண்டு; செவிக்கின்பம் பெருக்கெடுத்தோடும் நிலையில், சொற்கள் விளையாடும். ஹாஸ்யம் பாஷையின் வித்தையாகப் பரிமளிக்கும்போது, யார்தான் அனுபவிக்காமலிருக்க முடியும். மதத்துவேஷம், நிறத்துவேஷம், பாஷை வெறுப்பு எதுவுமே சரோஜினியிடம் இல்லை. தாய்மையின் அன்புதான், பெண்மையின் சிகரமாகக் காட்சியளிக்கும்.

தன்னைப்பற்றி, எதையும் மறைத்து மூடிப்பேசுவதே இல்லை. திறந்த மனத்துடன், துணிவுடன், வீரமொழியிலே கனல்கின்ற, அவருடைய சொற்பொழிவுகளும், கவிதைகளும் உலகமே படித்து இன்புறக்கூடிய ஆற்றல் பெற்றவை.

அவருடைய கவிதைகளை 'ஆன்ம-நிமிஷங்கள்'என்று குறிப்பிடலாம். நிமிஷ விளக்கமாக நிமிர்ந்து நிற்கும், ஆன்மஒளி நிறைந்த கவிதைக் கோயிலை, யார்தான் வணங்க மாட்டார்கள்; கவிதைகளிலே, பெண்மை, அன்பு, தாய்மை, தூய்மை, எழில், காதல், இயற்கையின் பல வர்ணத் தோற்றங்கள், பல்லக்குப் பாடல்கள், தேசாபிமானம், எல்லாம் இடம்பெற்றிருக்கின்றன. சரோஜினியின் பாடல்களைத் திரட்டி 'Sceptred Flute' புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள், அதை ஒவ்வொரு இந்தியனும் மிக ஆழமாகப் படித்து இன்புறலாம்.

'The Broken Wing' ஒடிந்த சிறகு என்ற கவிதைத் தொகுதியில் "இன்றையக் கனவுக்கும் நாளை நம்பிக்கைக்கும், இந்தக் கவிதைத் தொகுதியைச் சமர்ப்பணம் செய்கிறேன்," என்று கவிக்குயில் கூறும்போது, லட்சியத்தின் உன்னதம் தெரிகிறதல்லவா? இந்தக் கவிதைத் தொகுதியில், காதல், மரணம், விதி-மூன்றையும்பற்றிய பாடல்கள் இருக்கின்றன. இந்தக் கவிதைத் தொகுதிக்குமுன் சரோஜினிதேவியார் "The Golden Threshold", "The Bird of Time" என்ற இரண்டு கவிதைத் தொகுதிகள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். கவிதை நூல்களின் தலைப்பே, கற்பனை நிறைந்த அருள்நிறைந்த தலைப்பாக அமைந்திருக்கிறது. "பொற்படி"—"காலப் பறவை"—இரண்டிலுமே தலைப்பின் தத்துவத்தைக் கவனிக்கும்போது, உமர்கயாம் பாடல்களை மொழிபெயர்த்து பிட்ஜிரால்டு ஆங்கிலத்தில் எழுதிய பாடல்களில், உள்ள அருமையான 'சொற்றொடர்களை'ப் பின்பற்றிய தலைப்புக்களாகத் தோன்றுகிறது.

ஆனால் சரோஜினியின் கவிதையில் சிந்தனை புதிது, கற்பனை புதிது, பாஷையின் சிற்பத்தோற்றம் புதிது, இசையொலியும் புதிது; அழகின் ஆவேசம், இதயம் முதல் ஆகாசம் வரை விரிந்த ஆங்கில மொழியில் கவிதையின் சல்லிவேர் வரை பாய்ந்திருக்கிறது.

'The Broken Wing' கவிதையில் கவிக்குயில் எழுதியிருக்கும் முன்னுரை, மிக ஆழ்ந்த அகண்ட சக்திவாய்ந்த முன்னுரை; " இந்திய சரித்திரவளர்ச்சியிலே, பெண்ணின் கடமை என்ன? காதல் லட்சியம், நம்பிக்கையின் லட்சியம், தேசவிடுதலை லட்சியம், - இந்த மூன்று சிறந்த லட்சியங்களைக்கொண்டு, பெண்கள் தேச விடுதலை இயக்கத்தில் ஆழ்ந்து சேவை செய்யவேண்டும்: பாடியோ, பேசியோ, உழைத்தோ, தியாகம்செய்தோ, தாய்மையின் சிறந்த அன்புப் பணியைக் கைக்கொண்டு, பெண்கள் வேலையில் ஈடுபடவேண்டும். எனது கவிதைத் தன்மையின் குறையை உணர்ந்தே, நான் கைகூப்பி தேசத்தை வணங்கி நின்று பாடுகிறேன்." எவ்வளவு அருமையான முன்னுரை, பார்த்தீர்களா?

"The Time of Roses"—பருவ ரோஜாப் பாட்டு அற்புதம்:

"ரோஜாமலர்" அருமையினும் அருமைதான்; அதன் சென்னிறமே அற்புதம், எங்கும் ரோஜாமலர் குவியல்கள் வனப்புடனும், மணத்துடனும் பரவி விரிந்துகிடக்கின்றனவே;

ரோஜாமலரின் வனப்பிலே, காதல்வெறி கும்மாளியிடுகிறது; உள்ளே மகரந்தப்பொடி, தங்க அலைக்கதிராக மத்தாப்பிடுகிறது; போதையிலே மயங்கிக் கிடக்கும் வண்டுகள் அலைந்தலைந்து வாசனையை அள்ளிக்குடிக்கின்றன; காலையிலே, சூரியக் கதிரின் ஜோதியிலே, ஆறுகளை அலங்

கரித்து நிற்கின்றன, ரோஜா செடிகள்; நிலவிலே, பச்சைப் புல்லின்மேல், ரோஜா செடிகள் மணம் வீசிக்கொண்டு மங்கிய நிலவிலே மின்னலிடுகின்றன.

என்னை ரோஜா மலர்க்கோவிலிலே மறைத்து வையுங்கள்; என்னை ரோஜா மலர்ப்பன்னீரிலே, மூழ்கடித்து விடுங்கள்; காதல் ரோஜாவால், என் தலைக்கு அணி செய்யுங்கள்; எவ்வளவு அருமையான ரோஜா மலர்ப்பாட்டு, பார்த்தீர்களா? கவிக்குயிலின் உள்ளம், ரோஜா மலர்த் தோட்டமாகவே மாறிவிட்டதல்லவா?

'பல்லக்குத் தூக்கிகளின் பாடல்' —மிக அருமையாக இருக்கிறது; இதிலே, இசைநயம் பிரமாதம்தான். "பல்லக்கில் இருக்கும் அழகு ராணி, எனதுபாடல் காற்றிலே மலர்போல அசைகின்றாள்; அருவியின் அலைக்கதிரைத் தொட்டுப் பறந்தோடும் பட்சிபோல், அழகி பறக்கின்றாள்; கனவின் உதட்டிலிருந்து மிதந்துவரும் சிரிப்பேபோல, அவள் மிதந்து வருகின்றாள்; நூலிலே தொடுக்கப் பெற்ற முத்துப்போல, நாங்கள் பாடிக்கொண்டே அவளைத் தூக்கிச் செல்கின்றோம்." இப்படியே, பல்லக்குப் பாட்டு, இசையோவிய மாகவே சுழன்றோடுகிறது.

"துன்பக் கண்ணீர் வெள்ளி மயம்" —என்று சரோஜினி பாடும்போது, துண்டிக்கப்பட்ட உள்ளம் மீண்டும் துளிர்க்க ஆரம்பிக்கிறது "மலர்கள் ஒளிவெள்ளமாக, புல்லின்மேல் காட்சியளிக்கின்றன" —என்று ஷெல்லி அனுபவித்துக் கூறுவது போல, சரோஜினியின் இசைப் பாடல்கள் இசைவெள்ளமாகப் பறந்தே செல்கின்றன.

"சாகாத டெல்கி" —என்ற பாட்டு அருமையான பாட்டு. மரணம் தாண்டி, சரித்திரப்போர் தாண்டி, வெற்றிமேல் வெற்றியாக இன்றும் நிலவும் டெல்கியே, இறுதி

மனச்சாந்தியாகக் காட்சியளிக்கிறது, என்று கவிக்குயில் அளவுக்கு மிஞ்சி அனுபவித்துப் பாடியிருக்கிறார்.

பெண்கள் அணியும் கால் சதங்கைகள், காதல் மந்திரத்தையே கணீர் கணீர் என்று ஒலித்து நிற்கின்றன. கால் சிலம்பு, காதல் சிலம்பாகவே புலம்பி முணு முணுக்கிறது. இசை வெறியோடு, சதங்கைகள் இசைச் சித்திரங்களாகவே காதலர் உள்ளங்களிலே புகுந்து மின்னி வட்டமிடுகின்றனவே! பெருமூச்சும் மழலையுமாக, உதயமாகிறது, இரவிலே மணம் நிறைந்த காதல்; பன்னீர் மணக்கும் இரவிலே. சோகத்தின் இனிமையும் கலந்து வருகிறது. ஆசையின் அதிர்ச்சிக் குரலும் ஊமையாகிவிடுகிறது.

விண்ணளாவி நாதமிடும் கோவில் மணிகளோ, வெறி வேகத்தில் விண்ணையே தாக்குகின்றன.

அஸ்தமனத்தின் அற்புதம்தான் என்ன? ரோஜா நிறத்திலே, அம்பர் வருணத்திலே, கண்ணாடி போல், சூரியாஸ்தமனம் தெரிகிறது; பக்ஷிகள் வேகமாகப் பறந்தோடி மறைகின்றன; பச்சை, கோமேதகம், முத்து, புஷ்பராக வருணத்திலே, பக்ஷியின் இறகுகள் மின்னிப்பறக்கின்றன; ஆடு மாடு மேய்க்கும் பெண், இனிய குரலிலே, காதல் கீதம் பாடுகிறாள்; போர்ப் பாட்டையும் முழக்குகின்றாள். கீழ் திசையில் நக்ஷத்திரங்கள் தோன்றியும், சந்திரனை வரவேற்கின்றன.

இந்த அஸ்தமனப் பாட்டு, அருமையான இசைச் சித்திரம்; கீட்ஸ், டென்னிஸனைப் போல, இசை மண்டிய சொற்கள் கலந்து ஒலிக்கும்போது, இசையோவியம் குரலெடுத்துத் துடிக்கவே செய்கிறது.

சிறந்த மேல்நாட்டு விமர்சன நிபுணர் எட்மண்டு காஸ் (Edmund Gosse) கூறுகிறார்: "நீண்டநாள் ஷெல்லி,

டென்னிஸனைப் போல் பாடிக்கொண்டு வந்த சரோஜினி, நாளடைவிலே மேல்நாட்டுக் கருத்துக்களை விட்டு விட்டு, இந்தியக் கருத்துக்களையே தனது நிகரற்ற கற்பனை ஓவியமாக, இசைச்சித்திரமாக, யாப்பின் அமைதியுடன் பாட ஆரம்பித்துவிட்டார்; நான் விரும்பியது போல, தனித் தன்மைவாய்ந்த இந்தியப்பாடலாகவே பரிணமிக்க ஆரம்பித்துவிட்டது அவாது இனியபாடல்; பாஷை ஆங்கிலமே தவிர, கருத்தும் கற்பனையும் இசையும் இந்திய மணமாகவேபரிமளித்தன. இந்திய மண்ணிலே மலர்ந்த கவிதை மரமாகத் தோன்றியது சரோஜினி தேவியின் நிகரற்ற பாடல்.''

(Arthur Symons) ஆர்தர் சைமன்ஸ் கூறுகிறார்: "அழகு வெறியே, சரோஜினியைப் பாடத் தூண்டியது; அவருடைய அழகிய கண்கள், இயற்கையில் மலர்ந்து மணக்கின்ற அழகையே விழுங்கிநின்றன; இன்பமும், அன்பமும் ஆசிரியையின் உள்ளத்தை ஆவேசத்துடன் உலுக்கி நின்றன; பாடலிலே சுழன்றோடுகின்ற நடை மின்னல், மின்னலோவியமே; சிறந்த இசை மண்டிய சொற்கள், பெண்மையின் ஜிலுஜிலுப்போடு கும்மாளமிடுகின்றன."

2

'சரோஜினி' என்ற பேரிலே, கவிதையின் நாதசுவரம் சுழன்றோடுகிறதல்லவா ?

சரோஜினியின் கவிதைகள், உண்மையான கவிதைகள்: எவ்வித மொழி விலங்கமோ, மன விலங்கமோ இல்லவே இல்லை; இலக்கண வரம்புக்கு உட்பட்டு, யாப்பின் அமைதியுடன், இசை நயத்துடன் கவிதைகள் சுழல்கின்றன. எந்த விஷயத்தைப் பற்றியும் தங்கு தடையின்றி, பாட்டு சிருஷ்டி எழிலோடு அமைந்திருக்கிறது.

231 பக்கங்களில் உத்தேசம் 4000 வரிகளுக்குமேல் சரோஜினி தேவியார் ஆங்கிலக் கவிதைகள் எழுதியிருக்கிருர். இவ்வளவு தெளிந்த ஆங்கில நடையில், வெள்ளையனும் கண்டு அதிசயிக்கும்படி, பாடுவதும் ஆச்சரியம் தான்: மிக எளிய சொற்கள், கருததோவியங்களாகவும் இசைச் சித்திரங்களாகவும் மலர்ந்து மணக்கின்றன. தத்தவ மின்னல் கொடிகளும் கவிதையின் அந்தரங்கத்தில் சுழல்கின்றன. வாழ்க்கையை நன்ருய் அனுபவித்திருந்தால் தான், கவிதையை அளவுக்கு மிஞ்சி அனுபவித்திருந்தால் தான், இத்தகைய கவிதைகள் எழுதமுடியும். வாழ்க்கையும் கவிதையும் அருமையான இசை நுட்பத்துடன் பின்னப் பட்டு, மின்னல் கோபுரங்களாக விண்ணளாவி நிற்கின்றன. சிருஷ்டி எழில், பாஷையின் உள்ளத்தில் ஊறி வெளிவருகிறது.

சில பாடல்களைக் கவனிப்போம்.

கைத்தறிப் பாட்டு: கவிதை எழிலையும், வாழ்க்கையின் உண்மையையும் தாங்கி வருகிறது: கைத்தறியிலே, குழந்தைக்கு ஆடையும், இராணிக்குத் திருமண ஆடையும், பல வர்ண எழிலோடு தறிகாரன் நெய்கிருன்: நீலம், பச்சை வருணங்களிலே, மயில் தோகைபோல, இராணியின் திருமண ஆடை அமைந்திருக்கிறது; அதே தறியிலே, இறந்த மனிதனுக்கும் ஆடை நெய்யப்படுகிறது. சதா தறி ஓடிக் கொண்டே ஓய்வின்றிச் சுழல்கிறதே! இன்பத்துக்கும், துன்பத்துக்கும் மத்தியில் தறி; ஆடைக்கும் பாடைக்கும் மத்தியில் தறி; தறிகாரன் கை, தொடர்ந்து ஓடோடித் தளர்ந்து போகிறதே! ஐயோ, பரிதாபம்!

மீன்பிடிப்பவர்கள்: ஓயாது பாடுகிருர்கள்: கடலே நமது தாய், மேகமே நமது சகோதரன், அலைகளே நமது நண்பர்கள்; ஆம், படகையே ஒட்டித்திரிவோம்; அலைகளிலே அலைந்தலைந்தே மீன்பிடிப்போம்; இதுவே நமது இன்பவாழ்க்கை.

தொட்டில் பாட்டு: மிக எளிய நடையிலே சுழல்கிறது; சின்னஞ் சிறு சொற்கள், இசையருவியாகக் காட்சியளிக் கின்றன. தொட்டிலைச் சுற்றி, வாழ்க்கைக் கனவுகள் மலர் கின்றன; பொடிப் பொடிக் கனவுகள், தொட்டிலைச் சுற்றி ரீங்காரமிடுகின்றன.

காதல் உலகிலே: காதலனும் காதலியும் பிரிந்து வாழ முடியுமா? கணவனும் மனைவியும் கலந்து வாழ்வதே வாழ்க்கை; பிரிந்த வாழ்க்கை, சிதறிய வாழ்க்கை; கணவன் இறந்தால், மனைவியின் உள்ளம் தடுமாறித் தத்தளிக்கிற தல்லவா? ஒருயிரும் ஈருடலுமாக வாழ்ந்த வாழ்க்கை, திடீ ரென்று சிதறிவிடுகிறதே! திருமணக்கோலம் போன இடந் தெரியாமல் போய்விடுகிறதே! காதல் நிலை, ஒரு நிகரற்ற இன்பநிலை; துன்ப வெள்ளத்தில், காதலர்கள் கலங்கி மனம் உடைந்து மறைகிறார்கள்.

மரணகீதம்: துன்பச் சிகரத்தில் தவழ்ந்தோடுகிறது; ஓ, மரணமே! பொறுப்பாய்; அவசரப்படாதே; எனது மலர்ந்த நம்பிக்கைகளின் பலனை நான் அனுபவிப்பதற்கு முன், எனது கண்ணீர் முழுதும் சிந்துவதற்முன், எனது காதலும் துன்பமும் இந்த மண்ணிலே இறுதி எல்லைக்கு வருமுன், எனது மனித ஆசைகள் பூர்த்தியாவதற்கு முன், ஓ, மரணமே, நான் சாகச் சம்மதியேன்! ஆகவே, பொறுப் பாய், அவசரப்படேல்!

இதயம்: எனது இதயம் ஒரு தந்தப் பெட்டிபோல் காட்சியளிக்கிறது; மலர்போல் மலர்கிறது என் இதயம்; இதயப் பெட்டியிலே, பல அருமையான கனவுகள் பொறிக் கப்பட்டிருக்கின்றன; சிந்தனைகள், படங்களாக நுட்பமான எழிலோவியமாகக் காட்சியளிக்கின்றன; இந்த இனிய சித்திரப் பெட்டியிலே, அருமையான ஞாபகங்களையும்,

வாழ்க்கை, காதல், துன்பம், பாடல் பற்றிய இனிய குறிப்புக்களையும் பூட்டி வைத்திருக்கிறேன். எனது இதயமே, ஒரு நிகரற்ற கலைப் பொக்கிஷம்தான்.

உத்சாகம்: காதலியே! என் கண்களை மூடுவாய்! ஒளி மிகுதியால், என் கண்கள் கூசுகின்றன; பாடிக் களைத்த என் உதடுகளிலே, நீ முத்தமிட்டு மௌன நிலைக்குக் கொண்டுவருவாய்!

ஓ, என் காதலியே! எனது ஆன்மாவுக்கு சாந்தி அளிப்பாயாக! துன்பத்தால், என் ஆன்மா ஒடிந்து கிடக்கிறது; சாந்தி வழங்குவாய்! மழையில் அடிபட்ட மலர்போல், துன்ப மிகுதியிலே காதலுக்கும் தனி எழில் வளர்கிறது.

குழந்தைகள்: குழந்தைகளே! நீங்கள் இன்னும் வாழ்க்கையில் அடிபடவில்லை; உங்களுக்கு வாழ்க்கை, ஒரு கனவுக் கூட்டமாகவே தெரிகிறது; கடல் அலைகள் வர்ண ஜ்வாலையாகக் குதித்தாடுவது போல, கவலையற்ற இன்ப உணர்ச்சிகள் உங்கள் உள்ளங்களிலே கும்மாளி யிடுகின்றன.

வளர வளர உங்கள் இதயங்களிலே காதற் கனல் வளர்ந்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளைக் கொண்டுவரு மல்லவா?

இந்த நிலைமைகளை நீங்கள் இனிமேல்தானே காணப் போகிறீர்கள்! இன்னும் நீங்கள் வாழ்க்கையின் விபரீதங் களை அனுபவிக்கப் பழகவில்லையே!

கவிஞனும் காதலியும்: நான் ஒரு கவிஞன்; பகலிலே பாடியே இன்புறுகிறேன். காதலியே! பகலில் உன் துணை அவ்வளவு அவசியமில்லை.

ஆனல் நள்ளிரவிலே, இயற்கையின் வனப்பிலே, எனது கவிதையுள்ளத்துக்கு உனது தேன் குரல் தேவையாகிறதே; என்செய்வேன்? காதலியே! இசையின் நிகரற்ற நுட்பக் குறிப்போடு, உனது குரல் எனது கவிதையுள்ளத்தில் பாய்ந்தோட வேண்டாமா? காதலை வளர்ப்பது பெண் குரல் போதையல்லவா?

உன்னிசாவின் அழகு: எனது அழகு பிரமாதம்; நானே அழகின் அமுதம், அழகின் வெற்றி, அழகின் போதை; என் கன்னத்திலே மின்னலிடுகின்ற அழகைக் கண்டு, ரோஜா மலர்கூட வெட்கி நிற்கும்.

மணம் நிறைந்த என் அருமையான கூந்தலைக்கண்டு, மலர்கள் நாணிப் பின்வாங்குவது இயல்பு.

நான் பூங்காவில் நிற்கும்போது, குயில்கள் இசை வெள்ளமாகவே பாடிக் குதிக்கின்றன. குயில் பாட்டு இசையருவியாகவே மின்னலிடுகிறது.

இந்திய டான்ஸ்: இந்தப் பாட்டை சரோஜினிதான் எழுதமுடியும்; நிகரற்ற இசையோவியமாக உதயமாகி யிருக்கிறது இந்த டான்ஸ்; எத்தனை முறை வேண்டுமானலும் திரும்பத்திரும்பப் படித்து இன்புறலாம். இதுவே இசை யுலகிலே, கவிதையுலகிலே செவிநுகர் கனியாகச் சுழன்றோடுகிறது. என்ன அற்புதம்! அழகு மண்டிய பெண்களின் கண்களும், கால்களும், கைகளும் மெல்லியலாரின் டான்ஸ் லீலைகளும் சிறந்த சொல்லோவியமாகவே காட்சியளிக்கின்றன. அழகிகளின் அமுத விழிகள் நயன பாஷையிலே, அற்புதமான சொற்பொழிவுகள்தான்: அபிநயங்கள், வாழ்க்கையின் உண்மைகளை அலங்கரிக்கின்றன. கவிஞன் டென்னிஸன் போக்கிலே, இந்த இசையோவியம் சுழல்கிறது.

அழகி இராணி குல்னர்: இராணி குல்னர், தன் அழகையே கண்டு வியந்து நிற்கிருள்; தன்னை ஆடம்பரமாக அலங்கரித்துக் கொண்டு, கண்ணுடியிலே தன் அழகின் ஆடம்பரத்தையும் நுட்பத்தையும் கண்டு அதிசயிக்கின்ருள்; பட்டாடையிலே பளபளக்கின்ற தன் அழகின் போதையை என்னவென்று சொல்வது? அவளுடைய மிருதுவான மார்பையும் மிருதுவான பட்டிலே அலங்கரித்து மூடியிருக்கின்ருள்; இருந்தாலும், தன் அழகின் மிகுதியைக் கண்டு, வாழ்க்கையின் வெறுமையைக் கண்டு, அழகு இராணி சலிப்படையும் நேரமே வந்துவிட்டது. இராணிக்கு நேர் எதிரி, கண்ணுடியிலே காணும் ஆடம்பரத் தோற்றம்தான், ஆம்! சந்தேகமே இல்லை!

இளமையே! இதுவரை எனக்கு அழகும் இன்பமும் தந்த இளமையே! என்னை உதறிவிட்டுச் செல்கின்ருயா? என்செய்வேன்! இதுவரை கோடானகோடி இன்பங்கள் வழங்கிய இளமை, என்னிடம் விடைபெற்றுக்கொள்ளப் போகிறதே! முதுமை வரும்முன், இளமையே! என்னை முத்தமிட்டுப் பிரிவாயாக! என் இதயத்தில், உன் இளமைச் சித்திரமே மின்னலிடுகிறது, என்றும்!

ஹைதராபாத்தில் இருட்டு: ஊரைச்சுற்றி இருட்டு இன்பமாகப் படர்கிறது. இந்த இருட்டிலே, சகல நிகழ்ச்சிகளும் படங்களாகக் காட்சியளிக்கின்றன.

புருவின் தொண்டை நிறத்திலே, ஆகாசம் வருணக் களஞ்சியமாகக் காட்சியளிக்கிறது; வருணமற்ற வெள்ளை ஆறு மின்னி மின்னி வளைந்தோடுகிறது; யானைகள், அமைதியாக கம்பீரமாக, தங்கள் வெள்ளி மணிகளை ஒலித்துக்கொண்டு ஊர்சுற்றி வருகின்றன!

நகரிலே, பாலத்தின்மேல், இரவு கம்பீரமாகக் காட்சியளிக்கிருள்; விருந்துக்குச் செல்லும் இராணிபோல, இரவு கொலுவீற்றிருக்கிருள்.

இன்னும் மிகமிக அருமையான பாடல்களை, 'SCEPTRED FLUTE' என்ற நூலில் படித்து இன்புறலாம். காதலும் மரணமும்; காதல் டான்ஸ்; வசந்தப்பாட்டு; சண்பக மலர்கள்; வளையல் வியாபாரிகள்; சர்ப்பத் திருவிழா; இந்தியாவின் சிறப்பு; தந்தையைப்பற்றி; பிச்சைக்காரர்கள்; காந்தி; புத்தர்; கோகலே; மூன்று துன்பங்கள்; காதல் விழா; விதி; காதல் ஆசை; காதலின் அகண்ட சக்தியும் துன்பமும்; கண்ணீரின் விந்தை; பெண் கண்ணீர்; இசைப் பாடல்கள்.

சரோஜினியின், கவிதைகளிலே இசைச் சுழல் அதிகம்; இசைகலந்த கவிதையிலே, பெண்மையின்பூரிப்பு அகண்ட சக்தியுடன் வாழ்க்கையின் அந்தரங்கத்தைத் தழுவி நிற்கிறது; ஹரீன் கவிதைகளிலே, இசையோவியத்தைக் காண்பது அரிது; சரோஜினியின் கவிதைகளிலே, வாழ்க்கையின் சிகரத்தினின்று நீர்வீழ்ச்சிபோல உண்மைகள் உதிர்ந்து இசையோவியமாகப் பாடி முன்வருகின்றன; கவிதையின் பெண்மை, சிறந்த டான்ஸ் உலகிலே மனங்குலுங்கி, மதுரமான மார்பிலே உண்மை தாங்கி நிற்கிறது. உண்மை, அமுதமாகவே, இசையாருகவே சுழன்றோடி வருகிறது; சரோஜினியின் கவிதை நிகரற்றது,—கருத்திலும் நடையிலும் இசையின் ஜிலுஜிலுப்பிலும்! ஆம்.

★

கவிதையுள்ளம் படைத்த சரோஜினி தேவியின் மரணத்தைப் பொறுக்கமுடியாமல், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாடியது:

சரோஜினிதேவி

காந்தி திருவடியோ? கற்பகமோ? வாணியமுது
ஏந்தும் எழிற்கரமோ? யாரறிவார்?—ஆர்ந்தபுகழ்
மங்கை சரோஜினியாம் வண்ணக்கிளி யின்று
தங்கி யிருக்குமிடம் தான்.

பைங்கிளி வாவென்று பங்கயச் செல்வியுனை
அங்கைகள் நீட்டி அழைத்தாளோ? பொங்குபுகழ்
மங்கை சரோஜினிநீ வானுலக வாழ்வுபெற
இங்கிருந் தேகினுய் இன்று.

வெட்டி முறித்த விறகெனவோர் வீணையினைச்
சுட்டெரித்த பாவியென்று தூற்ருதோ? சிட்டர்புகழ்
அன்னை சரோஜினியின் ஆவியுண்ட கூற்றமே
உன்னையினி என்றும் உலகு.

பைங்கிளியாய்த் தேன்கலந்த பாலமுதம் உண்டுமையாள்
அங்கையில் தங்கியுரை யாடுதற்கோ? இங்கிருந்து
மாதரசி நன்மதுர வாணி சரோஜினிநீ
மீதெழுந்து சென்ருய் விரைந்து.

பிரெஞ்சு நாவல் மேதை

டூமாஸ்

அலெக்ஸாண்டர் "டூமாஸ்" சிறந்த நாவலாசிரியர். நாவல்களும் நாடகங்களுமாக பிரெஞ்சு பாஷையில் 1200 நூல்கள் எழுதியிருக்கிறார். பெண்களோடு அதிகமாகப் பழகியதில், தனக்கு 500 குழந்தைகளும் உண்டு என்று மிகப் பெருமையாகப் பேசிக் கொள்வார்.

அவருக்கு நாவல் எழுதுவதில் அபாரமான ஆசை; சதா எழுதிக்கொண்டே இருப்பார். அளவுக்கு மிஞ்சித் தின்பார்; அளவுக்கு மிஞ்சி எழுதுவார். எழுதுவதிலும் தின்பதிலும், அதிகமான இன்பத்தை அநுபவித்த நாவல் மேதை டூமாஸ்; எழுத்திலும் உணவின் விதவிதமான ருசியிலும், அவர் சிறந்த ரஸிகர்.

ஆரம்பத்தில் அவருக்குக் கடன் அதிகம்; அவரைக் காதலிக்க விரும்பிய ஒரு பணக்காரி, அவருடைய கடன்களை எல்லாம் விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு, அவரிடம் வந்து பயமுறுத்தினாள்! "என்னைக் கலியாணம் செய்துகொள்ளுகிறாயா, அல்லது உன்னுடைய கடன்களுக்காக உன்னை ஜெயிலுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவா?" என்றாள் உடனே டூமாஸ், அவளையே மணஞ்செய்துகொண்டார். அவளுடைய காதல் வைராக்கியம், மிகச் சுலபமாகவே நிறைவேறிவிட்டது.

டூமாஸின் பாட்டி, ஒரு நீக்ரோ கூலி. அவளுடைய ரத்தமும், அவர் உடம்பில் கால் பங்கு பாய்ந்திருக்கிறது. பிரெஞ்சுக்காரன் என்ற முறையில், அவரிடம் முக்கால்

பங்கு வெள்ளையன் ரத்தம் சுடரிட்டுக்கொண்டிருந்தாலும், நீக்ரோ ரத்தம் கலந்த புதுமையும் மின்னிக்கொண்டுதான் இருந்தது. உடல், பனிக்கட்டிபோல் நல்ல வெள்ளைநிறப்; கண்கள், நீலமணிக் கண்கள்; உதடுகள், கனத்த உதடுகள்; விரிந்த நாசிகள். அவர் தலையயிர், மஞ்சள் நிறமான மலர் போல் பொலிவுற்றது.

நூல் அருமையாக எழுதுவதுபோல, சமையலும் அருமையாகச் செய்வார்.

எதற்கும் கவலைப்படவே மாட்டார். நாவலே எழுதி, துன்பத்தை அடியோடு விரட்டிவிடமுடியும் என்ற சிறந்த மனோதிடம் கொண்டவர். இவரல்லவோ, சிறந்த எழுத்தாளர்!

நூல் சந்தையில், அவர் நாவலுக்கு அதிகமான செல் வாக்கும் கிராக்கியும் ஏற்பட்டுவிட்டன. சிரிப்பும், பேச்சும், களியாட்டமும்தான்: இன்பம் எவ்வளவுதான் தலைக்கு மேல் பறந்தாலும், அவர் குடிக்கவுமில்லை; புகைக்கவுமில்லை. சிகரட் புகைச் சுருளிலே, அவர் கற்பனை சுருண்டு புகைய வில்லை. மேலும், அவருடைய உணவில் பெரும்பகுதி மீனும், பலவித காய்கறிகளும், அதிகமான பாலாடையும் தான். எதையும் நிறையவே, ஆசைதீரச் சாப்பிடுவார்.

சாப்பாடு முடிந்ததும், எழுத ஆரம்பித்து விடுவார். அடிக்காமல் எழுதுவார். அவருடைய நாவல்களிலும் நாடகங்களிலும் வரும் பாத்திரங்களையும், அவர் அநு பவித்தே சித்திரிப்பார்; அவருடைய நாவல்களில் வரும் ஆண் பெண் பாத்திரங்கள் அனைவரோடும் அவர் கற்பனை உலகிலே, கை குலுக்கி விளையாடுபவர்; அவ்வளவு உயர்ந்த இயற்கையான உன்னத நிலையில் பாத்திரங்களைச் சிருஷ்டி செய்வார்.

அவருடைய மனநிலைகள் அடிக்கடி விந்தை உலகிலே புரண்டு சஞ்சரிக்கும்: பல நூல்களையும் பலவர்ணக் காகிதங்களில் எழுத விரும்புவார்:

நாவல்கள்—நீலவர்ண பேப்பரில்;

கவிதைகள்—மஞ்சள்வர்ண பேப்பரில்;

பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதினால் —ரோஜாவர்ண பேப்பரில்.

கவிதைகள் எழுதும்போது மாத்திரம், பேனா முள்ளை மாற்றிக்கொண்டே இருப்பார். எக்காரணத்தை முன்னிட்டும், நீல மையை அவர் உபயோகப்படுத்தவேமாட்டார்.

சாய்வு மேஜையில் இருந்துகொண்டு அவர் நாடகம் எழுதமாட்டார்; சோபாவில் சாய்ந்துகொண்டேதான் நாடகம் எழுதுவார்.

அவருடைய நண்பர்கள், யாரும் அவரைப் பார்க்க வந்துவிட்டால், அவர் இடதுகையை நீட்டி வரவேற்பார்; அவருடைய வலதுகை, நாவல் எழுதிக்கொண்டே இருக்கும். எழுதும்போது, அவருடைய இன்பத்தை, யாராலும் தடுக்கவோ, குறைக்கவோ முடியாது; அவருடைய நாவல் உள்ளம், இன்பக் கடலாடும்; கற்பனை உலகிலே, இன்ப உச்சியிலே சிருஷ்டியிலே ஈடுபட்டு விளையாடிக் கொண்டிருக்கும்.

அவர் 1200 நூல்கள் எழுதிக் குவித்துவிட்டார்: இதை நினைத்தால், கால்ஸ்வொர்த்தி, ஷா, ஸ்டீவன்ஸன், வெல்ஸ், கிப்ளிங், ஜேன்கிரே அனைவரும் சேர்ந்து எழுதிய நூல்களைப் போல, இரண்டு பங்கு ஆகுமல்லவா? எப்போதும் பத்திரிகைகளுக்கு ஐந்து தொடர் நாவல்கள் எழுதிக் கொண்டே இருந்தார்!

டுமாஸ்

50 லட்சம் டாலர்களுக்கு மேல் சம்பாதித்தார்—எழுத்தாளராகவே! அவருடைய நாவல்கள், தங்கமாகவே மாறி விட்டன.

அழகான பாரிஸ் நகரில், வாழ்க்கையின் பிற்பகுதியில், டுமாஸ் காதல் உலகிலே இறங்கிவிட்டார்: அவரைச் சுற்றிப் பெண்கள், பெண்கள், பெண்கள்,—கண்கள், கண்கள், கண்கள்!

காதல் லாகிரியில் கலங்கி நின்றார், நமது நாவலாசிரியர் டுமாஸ்; அழகிகள் அனைவரும் ஆசிரியரைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு, சிரித்துக்கொண்டும் விளையாடிக் கொண்டும் நின்றனர்.

அவர் முழங்காலில் ஒரு நங்கை; அவர் பாதமலர்களில் ஒரு நங்கை; நாற்காலிக்குப்பின் நின்றுகொண்டு, ஒரு அழகி அவர்மேல் சாய்ந்துகொண்டு, அவருடைய கனத்த உதடுகளிலே கனமாக முத்தமிடும் நிலையும் ஓர் அற்புதம்! பட்டப்பகலிலே, இதை ஒரு நண்பன், இந்த நிலையிலே பார்த்து வெட்கிப் போனான். மேலே சொன்ன மூன்று அழகிகளும், டுமாஸை சுற்றி, முக்கால் நிர்வாணமாகவே காட்சியளித்தனர்: என்ன ஆச்சரியம், பாருங்கள்!

இதுவே காதல் லாகிரி: ஆம்! சிறந்த நாவலாசிரியர், சிறந்த நிர்வாண அழகிகளின் மத்தியில் மனம் உருகி மயங்கிக் கிடப்பது, இயற்கைதானே! அப்போதுதானே, அவருடைய சிருஷ்டி இறகு, மனித குண சித்திரங்களைக் கனவுலகிலே அபூர்வமாகச் சிருஷ்டிக்க முடியும்.

அவர் குடிக்காவிட்டாலும், அவர் காதலித்த பெண்கள் குடித்துக் கும்மாளமிடுவதைக் காண ஆசைப்பட்டார்; குடித்த பெண்கள், அதிகமான அழகும் வீறும் பெற்று, வெறி வேகத்துடன், அவரைச் சுற்றி ரஸகுண்டுகள்

போல மின்னி வட்டமிடுவார்களல்லவா? குடிவெறியில் அழகிகள் பாடிக் கூத்திட ஆரம்பித்துவிட்டால், டூமாஸ் அதையே இணையற்ற இன்ப வீணுகக் கருதினர்.

வாழ்க்கையின் இறுதியில், வறுமைச் சுழலில் சிக்குண்டு தவித்தார். தங்கச் சுரங்கம் தோண்டுபவர்கள், அவருடைய பணத்தை நாளடைவிலே கரைத்து விட்டார்கள். அவர் பணப்பைகாலியானதும், கவலையுற்ருர். நகைகளையும் மேல்கோட்டையும் ஈடுவைத்துப் பணம் வாங்கி, வீட்டு வாடகை கொடுக்கவேண்டியதாயிற்று.

அவருடைய சாப்பாட்டுப் 'பில்லுக்கு' அவர் மகன் பணம்கொடுத்து, அவரைப் பட்டினியினின்று காப்பாற்றினன். தன் தந்தை காமச்சூறையில் சிக்கிச் சுழன்றதை நினைத்து, மகன் வருந்தினன்.

சாகும்போது, தான் எழுதிய சிறந்த நாவலான (The Three Musketeers) "மூன்று போர் வீரர்கள்" என்ற நாவலை ஆர்வத்துடன் டூமாஸ் படித்துக்கொண்டிருந்தார்; மகன் அவரைப்பார்த்துக்கேட்டான்: "நாவல் எப்படி?"

"அருமையாக, என்றும் நிலைத்து நிற்கும்படி அமைந்திருக்கிறது" என்று பதிலளித்தார் டூமாஸ்.

'மூன்று போர் வீரர்கள்' நாவலுக்குப் பின், எத்தனையோ நாவல்கள் எழுதியிருக்கிருர் டூமாஸ். தலைமுறை தலைமுறையாக, நின்று நிலவும் ஆற்றலும் ஆக்கமும் அமரத் தன்மையும் படைத்தது இது.

இரவெல்லாம் உறங்காது படிக்கும் நாவல் அல்லவா, இந்த நாவல்! மற்ற நூல்கள் அழிந்தாலும் இந்த நாவல் என்றுமே அழியாது.

யுனைட்டெட் பிரிண்டர்ஸ், காரைக்குடி.